# 5

# வெளிநாட்டுத் துறை அபிவிருத்திகளும் கொள்கைகளும்

## 5.1 பொதுநோக்கு

*விடாப்பிடியான உயர்வான படுகடன் தீர்ப்பனவுக் கட்டப்பாடுகள், வெளிநாட்டு நாணயப் பெறுமதி மீதான தொடர்ச்சியான அழுத்தத்துடன் கூடிய உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் மந்தமான செயலாற்றுகையுடன் ஒன்றிணைந்த நலிவுற்ற சென்மதி நிலுவைகள் என்பவற்றுக்கு மத்தியில் 2021ஆம் ஆண்டில் இலங்கையின் வெளிநாட்டுத்துறை உக்கிரமடைந்த பாதிக்கப்படும் தன்மைகளை அனுபவித்தது. ஏற்றுமதிகளில் மீளெழுச்சியும் உறுதியான வளர்ச்சியும் அவதானிக்கப்பட்ட போதிலும், மிகவும் உயர்வான இறக்குமதிச் செலவினம், வர்த்தகப் பற்றாக்குறை குறிப்பிடத்தக்களவு விரிவடைவதற்கு வழிவகுத்து வெளிநாட்டு நடைமுறைக் கணக்கின் மீது எதிர்மறையாக அழுத்தம் செலுத்தியது. தெரிவுசெய்யப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகள் இடம்பெற்றிருந்தும்கூட, ஏற்றுமதிகளின் வளர்ச்சியினை விஞ்சியிருந்த இறக்குமதிகளின் கணிசமான அதிகரிப்பானது வர்த்தகக் கணக்கில் இவ்விரிவடைதலைத் தூண்டியது. பொருளாதார நடவடிக்கைகள் இயல்புநிலைக்குத் திரும்புதல் அதேபோன்று உயர்வான சக்தி விலைகள் என்பன காரணமாக இறக்குமதிகளில் ஏற்பட்ட துரிதமான மீட்சியின் ஒன்றிணைந்த விளைவின் காரணமாக 2021ஆம் ஆண்டின் பிந்திய பகுதியிலும் 2022ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியிலும் வர்த்தகப் பற்றாக்குறை விரிவடைதல் மிகவும் தெளிவாகத் தென்பட்டது. கணனிப் பணிகள் துறை ஆரோக்கியமாக வளர்ச்சியடைந்த அதேவேளை சுற்றுலாத் துறையானது ஆண்டின் பிந்திய பகுதியினை நோக்கி மாத்திரம் படிப்படியாக உயர்வடைந்தமைக்கு மத்தியில், 2020 இலும் 2021 இலும் பணிகள் துறைகள் செயலாற்றமும் குறைவடைந்து காணப்பட்டது. 2021 காலப்பகுதியில் வட்டி மற்றும் பங்கிலாபக் கொடுப்பனவுகள் குறைவாகயிருந்தமையினால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் முதலாந்தர வருமானக் கணக்கின் பற்றாக்குறை, 2021இல் சிறிதளவு குறைவடைந்தது. ஆண்டின் இரண்டாம் அரையாண்டில் தொழிலாளர் பணவனுப்பல்களில் மெதுவடைதலொன்று அவதானிக்கப்பட்டு, இரண்டாந்தர வருமானக் கணக்கின் மிகையில் வீழ்ச்சியினைத் தோற்றுவித்தது. இதன் விளைவாக, நடைமுறைக்கணக்குப் பற்றாக்குறையானது 2020ஆம் ஆண்டில் பதிவாகிய மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 1.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 4.0 சதவீதத்திற்கு கணிசமாக விரிவடைந்தது. வெளிநாட்டு நேரடி முதலீடு வடிவிலான வெளிநாட்டு முதலீடுகள் குறைவடைந்து காணப்பட்டமையினால் நிதியியல் கணக்கும் குறைந்த செயலாற்றத்தினைப் பதிவுசெய்த அதேவேளை, பங்குப் பரிவர்த்தனை மற்றும் அரசாங்கப் பிணையங்கள் சந்தையில் சொத்துப்பட்டியல் முதலீடுகள் தொடர்ந்தும் தேறிய வெளிப்பாய்ச்சல்களையே அனுபவித்தன. வெளிநாட்டுக் கணக்குகள் மீதான அழுத்தத்தை அதிகரித்து, அரசாங்கத்திற்கான வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள் வெளிநாட்டு கருத்திட்டக் கடன்களுக்கும் கொடைகளுக்கும் அதேபோன்று இரண்டு வெளிநாட்டு நாணய தவணை நிதியிடல் வசதிகளுக்கும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. மத்திய வங்கியானது, பன்னாட்டு நாணய நிதியத்திடமிருந்து புதிய சிறப்பு எடுப்பனவுகள் ஒதுக்கீடு மற்றும் 2021ஆம் ஆண்டில் வங்களாதேச வங்கி, சீன மக்கள் வங்கி அத்துடன் 2022ஆம் ஆண்டின் ஆரம்பப்பகுதியில் இந்திய ரிசேர்வ் வங்கி ஆகியவற்றுடனான பன்னாட்டு பரஸ்பரப் பரிமாற்றல் ஒப்பந்த ஏற்பாடுகள் வடிவில்*

*குறிப்பிடத்தக்க வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களைப் பெற்றுக்கொண்டது. வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களின் குறைவின் காரணமாக வெளிநாட்டுத் துறையில் அதிகரிக்கின்ற சமமின்மைகளை கரிசனையிற் கொண்டு, உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் வெளிநாட்டு நாணய திரவத்தன்மையினை மேம்படுத்துவதற்கும் பன்னாட்டு ஒதுக்குகளை மீள்நிரப்புவதற்கும் பல வழிமுறைகள் எடுக்கப்பட்டன. ஏற்றுமதி பெறுகைகளை கட்டாயமாக மாற்றுதல் தேவைப்பாட்டினை மத்திய வங்கி விதித்து அதேபோன்று மாற்றல் செய்யப்பட்ட ஏற்றுமதி பெறுகைகளினதும் தொழிலாளர் பணவனுப்பல்களினதும் ஒரு பாகத்தினை மத்திய வங்கிக்கு விற்பனை செய்யுமாறும் வங்கிகளுக்குப் பணிப்புரை விடுத்தது. ஆண்டுகாலப்பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்களை ஊக்குவிப்பதற்கு மத்திய வங்கியும் அரசாங்கமும் பல வழிமுறைகளையும் நடைமுறைப்படுத்தின. சந்தையில் நிலவிய வெளிநாட்டு செலாவணித் திரவத்தன்மைப் பற்றாக்குறையினைக் கருத்திற் கொண்டு, மத்திய வங்கியானது 2021 மற்றும் 2022இல் தேசிய முன்னுரிமையாக அத்தியாவசியப் பொருட்களின், பிரதானமாக எரிபொருள், திரவப் பெற்றோலிய வாயு மற்றும் நிலக்கரி இறக்குமதிக்கான நிதியளித்தலுக்கு ஆதரவை வழங்கியது. பொருளாதாரத்தினை மீட்டெடுக்கும் செயன்முறைக்கு ஆதரவளிக்கும் பொருட்டு, 2021 காலப்பகுதியிலும் 2022 முந்திய பகுதியிலும் செலாவணி வீதம் பரந்தளவில் நிலையாகப் பேணப்பட்டபோதிலும், மத்திய வங்கியானது 2022 மாச்சு தொடக்கத்திலிருந்து செலாவணி வீதத்தில் அளவிடப்பட்ட சீராக்கங்களுக்கு இடமளித்தது. இருப்பினும், உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் எடுத்துக் காட்டப்பட்ட குறிப்பிடத்தக்களவு அழுத்தங்கள் பாரிய தளம்பல்களை ஏற்படுத்தின. இதன் விளைவாக, 2021ஆம் ஆண்டில் 7.0 வீதத்தினால் தேய்வடைந்த இலங்கை ரூபா 2022 மாச்சு இறுதியளவில் 33.0 சதவீதத்தினால் கணிசமாகத் தேய்வடைந்தது. அவசர வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கான தேவையினை இனங்கண்டு, வெளிநாட்டுத் துறை பாதிக்கப்படும் தன்மைகளை தீர்த்துக்கொள்வதற்கும் பொருளாதாரத்தில் விடாப்பிடியான அத்துடன் நீண்டகாலம் நிலைத்திருக்கின்ற சிக்கல்களைத் தீர்ப்பதில் பரந்த பொருளாதார மறுசீரமைப்புக்களைக் கொண்டு நிறைவுசெய்வதற்கும் அரசாங்கமும் மத்திய வங்கியும் பன்னாட்டு நாணய நிதியத்துடனான ஈடுபாடுகளைத் தொடங்குதல் உள்ளடங்கலாக 2022ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் மேலும் வழிமுறைகளை நடைமுறைப்படுத்தின.*




**அட்டவணை 5.1**
**சென்மதி நிலுவை பகுப்பாய்வு வெளிப்படுத்துகை**

| விபரம் | ஐ.அ.டொ. மில்லியன் | | ரூபா. மில்லியன் | |
|---|---|---|---|---|
| | 2020 (அ) | 2021 (ஆ) | 2020 (அ) | 2021 (ஆ) |
| **நடைமுறை கணக்கு (தேறிய)** | **-1,187** | **-3,343** | **-238,248** | **-672,960** |
| **வர்த்தக நிலுவை** | **-6,008** | **-8,139** | **-1,115,988** | **-1,617,274** |
| ஏற்றுமதிகள் | 10,047 | 12,499 | 1,858,927 | 2,486,943 |
| இறக்குமதிகள் | 16,055 | 20,637 | 2,974,915 | 4,104,218 |
| **பணிகள் (தேறிய)** | **819** | **1,586** | **150,014** | **316,225** |
| பெறுகைகள் | 3,035 | 2,475 | 559,615 | 493,320 |
| கொடுப்பனவுகள் | 2,216 | 889 | 409,601 | 177,095 |
| **முதலாந்தர வருமானம் (தேறிய)** | **-2,205** | **-2,018** | **-423,063** | **-406,605** |
| பெறுகைகள் | 198 | 116 | 36,766 | 22,769 |
| கொடுப்பனவுகள் | 2,404 | 2,134 | 459,829 | 429,374 |
| **இரண்டாந்தர வருமானம் (தேறிய)** | **6,207** | **5,228** | **1,150,789** | **1,034,694** |
| இரண்டாந்தர வருமானம்: வரவு | 7,117 | 5,498 | 1,319,377 | 1,088,388 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 7,104 | 5,491 | 1,317,007 | 1,087,188 |
| அரசாங்க மாற்றல்கள் | 13 | 6 | 2,371 | 1,200 |
| இரண்டாந்தர வருமானம்: செலவு | 910 | 270 | 168,589 | 53,694 |
| **மூலதன கணக்கு (தேறிய)** | **28** | **25** | **5,193** | **5,009** |
| மூலதன கணக்கு : வரவு | 51 | 50 | 9,472 | 9,850 |
| மூலதன கணக்கு : செலவு | 23 | 24 | 4,279 | 4,841 |
| **நடைமுறை மற்றும் மூலதன கணக்கு (தேறிய)** | **-1,159** | **-3,318** | **-233,056** | **-667,951** |
| **நிதியியல் கணக்கு (தேறிய)** | **-394** | **-4,029** | **-77,578** | **-962,044** |
| **நேரடி முதலீடு : சொத்துக்கள்** | **15** | **17** | **2,699** | **3,468** |
| **நேரடி முதலீடு : பொறுப்புகள்** | **434** | **598** | **80,592** | **118,973** |
| **சொத்துப் பட்டியல் முதலீடு : சொத்துக்கள்** | - | - | - | - |
| **சொத்துப் பட்டியல் முதலீடு : பொறுப்புக்கள்** | **-2,383** | **-906** | **-441,922** | **-181,568** |
| பங்கு மூலதனம் | -217 | -236 | -40,223 | -46,914 |
| படுகடன் பிணையங்கள் | -2,166 | -670 | -401,700 | -134,654 |
| **நிதியியல் பெறுதிகள்** | - | - | - | - |
| **ஏனைய முதலீடு : சொத்துக்கள்** | **-136** | **387** | **-27,446** | **77,454** |
| நாணயம் மற்றும் வைப்புகள் | 64 | 306 | 11,666 | 62,761 |
| வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்கள் | -224 | 257 | -41,647 | 51,199 |
| ஏனைய பெறத்தக்க கணக்குகள் | 24 | -176 | 2,535 | -36,506 |
| **ஏனைய முதலீடு : பொறுப்புகள்** | **231** | **2,216** | **38,567** | **605,734** |
| நாணயம் மற்றும் வைப்புகள் | -15 | 4,016 | -3,519 | 810,195 |
| கடன்கள் | 174 | -1,552 | 29,568 | -309,188 |
| மத்திய வங்கி | -14 | -57 | -2,689 | -11,377 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 75 | -2,152 | 10,390 | -429,506 |
| மத்திய அரசாங்கம் | 169 | 664 | 31,961 | 132,662 |
| ஏனைய துறைகள் | -56 | -7 | -10,093 | -968 |
| வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்கள் | 185 | -428 | 32,565 | -87,756 |
| ஏனைய கொடுபடத்தக்க கணக்குகள் | -114 | 180 | -20,046 | 34,713 |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | - | 787 | - | 157,771 |
| **ஒதுக்கு சொத்துக்கள்** | **-1,992** | **-2,526** | **-375,594** | **-499,826** |
| நாணய தங்கம் | -667 | -212 | -123,485 | -42,734 |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | -5 | 123 | -825 | 24,635 |
| ப.நா.நி இல் ஒதுக்கு நிலைமை | - | - | - | - |
| ஏனைய ஒதுக்கு சொத்துக்கள் | -1,319 | -2,437 | -251,284 | -481,726 |
| நாணயம் மற்றும் வைப்புகள் | -177 | 1,536 | -37,326 | 300,122 |
| பிணையங்கள் | -1,143 | -3,976 | -214,172 | -782,339 |
| **தேறிய பிழைகளும் தவறுகளும்** | **765** | **-711** | **155,478** | **-294,093** |
| **திரண்ட நிலுவை (இ)** | **-2,328** | **-3,967** | **-405,854** | **-745,312** |
| **மொ.உ.உ. இன் சதவீதமாக** | | | | |
| வர்த்தக நிலுவை | -7.4 | -9.6 | | |
| பொருட்கள் மற்றும் பணிகள் | -6.4 | -7.8 | | |
| நடைமுறை கணக்கு | -1.5 | -4.0 | | |
| நடைமுறை மற்றும் மூலதன கணக்கு | -1.4 | -3.9 | | |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) திரண்ட நிலுவையைக் கணிப்பிடுவது தொடர்பில் அட்டவணை 5.12 பார்க்குக


*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 5.1
**வெளிநாட்டுத்துறைச் செயலாற்றம்**




5

வரைபடம் 5.2
சென்மதி நிலுவை




*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

## 5.2 நடைமுறைக் கணக்கு நிலுவை

**சேவைகள் கணக்கு நிலுவை அதிகரிப்பிற்கும் முதலாந்தர வருமான கணக்குப் பற்றாக்குறை வீழ்ச்சிக்கும் மத்தியில், விரிவடைந்த வர்த்தகப் பற்றாக்குறை அத்துடன் இரண்டாந்தர வருமானக் கணக்கின் மிகையில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பவற்றின் விளைவாக 2021ஆம் ஆண்டில் வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை கணிசமானளவு விரிவடைந்தது.** ஏற்றுமதி வருவாய்களுடன் ஒப்பிடும்போது உயர்வான இறக்குமதிச் செலவினம், 2020ஆம் ஆண்டில் பதிவாகிய ஐ.அ.டொலர் 6.0 பில்லியன் கொண்ட ஒப்பீட்டளவில் குறைவான வர்த்தகப் பற்றாக்குறைக்கு எதிராக 2021ஆம் ஆண்டில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 8.1 பில்லியன் கொண்ட விரிவடைந்த வர்த்தகப் பற்றாக்குறையினைத் தோற்றுவித்தது. தொழில் செயன்முறைப்படுத்தல் வெளியிலிருந்து சேவை பெற்றுக்கொள்ளல் (IT/BPO) தொடர்புபட்ட பணிகளின் முன்னிலையிலான தகவல் தொழில்நுட்பம் மற்றும் போக்குவரத்துத் துறையின் மேம்பாடுகள் என்பவற்றில் அவதானிக்கப்பட்ட உயர்வான உட்பாய்ச்சல்கள் காரணமாக பணிகள் கணக்கு மிகை அதிகரித்தது. ஆண்டின் பிந்திய காலப்பகுதியில் சுற்றுலாத்துறையும் மீட்சிக்கான அறிகுறிகளைக் காட்டியது. நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளில் மீள்முதலிடப்பட்ட வருவாய்களில் பதிவாகிய அதிகரிப்புக்கு மத்தியிலும் நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளின் மீதான பங்கிலாபக் கொடுப்பனவுகளின் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களினால் வைத்திருக்கப்பட்ட அரசாங்கப் பிணையங்கள் கணக்கு மீதான கூப்பன் கொடுப்பனவுகளின் வீழ்ச்சியுடன் முதலாந்தர வருமானக் கணக்கின் பற்றாக்குறை சுருக்கமடைந்தது. 2020ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021இல் குறிப்பாக ஆண்டுகாலப்பகுதியின் பிந்திய அரைப் பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்கள் அக்காலப்பகுதியில் நிலவிய உத்தியோகபூர்வ வீதத்துடன் ஒப்பிடுகையில் போலிச் சந்தையில் நிலவிய செலாவணி வீதத்தின் குறிப்பிடத்தக்க வேறுபாட்டின் காரணமாக குறிப்பிடத்தக்களவு சுருக்கமடைந்தன. இதன்விளைவாக, நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையானது 2020ஆம் ஆண்டில் பதிவாகிய ஐ.அ.டொலர் 1.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 3.3 பில்லியனுக்கு விரிவடைந்தது. நடைமுறைக்கணக்கின் பற்றாக்குறையில் விரிவடைதலையும் வெளியீட்டில் மிதமான விரிவடைதலையும் பிரதிபலித்து, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக நடைமுறைக்கணக்கின் பற்றாக்குறையானது 2020ஆம் ஆண்டின் 1.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் 4.0 சதவீதமாகக் காணப்பட்டது.

5

அட்டவணை 5.2
நடைமுறை மற்றும் மூலதனக் கணக்கு

ஐ.அ.டொலர் மில்லியன்

| விடயம் | 2020 (அ) | | | 2021 (ஆ) | | |
|---|---|---|---|---|---|---|
| | வரவு | செலவு | தேறிய | வரவு | செலவு | தேறிய |
| **பொருட்கள் மற்றும் பணிகள்** | **13,083** | **18,271** | **-5,189** | **14,974** | **21,526** | **-6,552** |
| **பொருட்கள்** | **10,047** | **16,055** | **-6,008** | **12,499** | **20,637** | **-8,139** |
| பொது வணிகம் | 10,047 | 16,047 | -5,999 | 12,499 | 20,636 | -8,138 |
| நாணயமல்லா தங்கம் | - | 9 | -9 | - | 1 | -1 |
| **பணிகள்** | **3,035** | **2,216** | **819** | **2,475** | **889** | **1,586** |
| போக்குவரத்து | 1,174 | 1,059 | 114 | 608 | 256 | 352 |
| கடல்வழி போக்குவரத்து | 702 | 635 | 67 | 450 | 150 | 300 |
| சரக்குத் தொகுதி | 702 | 635 | 67 | 450 | 150 | 300 |
| வான்வழி போக்குவரத்து | 472 | 424 | 48 | 158 | 106 | 52 |
| பயணிகள் | 394 | 354 | 40 | 108 | 89 | 19 |
| சரக்குத் தொகுதி | 78 | 71 | 7 | 50 | 17 | 33 |
| பயணம் (இ) | 682 | 449 | 234 | 507 | 239 | 268 |
| கட்டுமானம் | 7 | 10 | -3 | 10 | 11 | -1 |
| காப்புறுதியும் ஓய்வூதியப் பணிகளும் | 39 | 82 | -42 | 20 | 37 | -17 |
| நிதியியல் பணிகள் | 96 | 220 | -125 | 95 | 102 | -7 |
| தொலைத்தொடர்பு மற்றும் கணனி பணிகள் | 995 | 288 | 706 | 1,201 | 171 | 1,030 |
| தொலைத்தொடர்புகள் | 24 | 32 | -8 | 32 | 31 | 2 |
| கணனி பணிகள் | 971 | 257 | 714 | 1,168 | 140 | 1,028 |
| ஏனைய வியாபார பணிகள் | 16 | 37 | -21 | 16 | 17 | -1 |
| அரச பொருட்கள் மற்றும் பணிகள் வே.இ.உ.இ. | 26 | 70 | -44 | 19 | 57 | -38 |
| **முதலாந்தர வருமானம்** | **198** | **2,404** | **-2,205** | **116** | **2,134** | **-2,018** |
| ஊழியர்களுக்கான நட்டஈடு | 36 | 132 | -96 | 30 | 74 | -43 |
| முதலீட்டு வருமானம் | 162 | 2,271 | -2,110 | 86 | 2,060 | -1,975 |
| நேரடி முதலீடு | 17 | 636 | -619 | 16 | 647 | -631 |
| பங்கு இலாபங்கள் | 14 | 445 | -431 | 12 | 357 | -345 |
| மீள் முதலிடப்பட்ட வருவாய்கள் | 3 | 191 | -188 | 4 | 290 | -286 |
| சொத்துப் பட்டியல் முதலீடு | - | 943 | -943 | - | 818 | -818 |
| பங்கு மூலதனம் | - | 35 | -35 | - | 26 | -26 |
| வட்டி | - | 908 | -908 | - | 793 | -793 |
| குறுங்காலம் | - | 2 | -2 | - | ... | ... |
| நீண்டகாலம் | - | 905 | -905 | - | 793 | -793 |
| ஏனைய முதலீடு | 56 | 693 | -637 | 43 | 595 | -552 |
| ஒதுக்கு சொத்துக்கள் | 89 | - | 89 | 27 | - | 27 |
| **இரண்டாந்தர வருமானம்** | **7,117** | **910** | **6,207** | **5,498** | **270** | **5,228** |
| பொது அரசாங்கம் | 13 | - | 13 | 6 | - | 6 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 7,104 | 910 | 6,194 | 5,491 | 270 | 5,221 |
| **நடைமுறை கணக்கு** | **20,398** | **21,585** | **-1,187** | **20,587** | **23,930** | **-3,343** |
| **மூலதன கணக்கு** | **51** | **23** | **28** | **50** | **24** | **25** |
| மூலதன மாற்றல்கள் | 51 | 23 | 28 | 50 | 24 | 25 |
| பொது அரசாங்கம் | 24 | - | 24 | 11 | - | 11 |
| கூட்டுத்தாபனங்கள் மற்றும் வீட்டுத்துறை | 27 | 23 | 4 | 38 | 24 | 14 |
| **நடைமுறை மற்றும் மூலதனக் கணக்கு** | **20,449** | **21,608** | **-1,159** | **20,637** | **23,955** | **-3,318** |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) வதிவற்றோருக்கு வழங்கப்பட்ட பயணிகள் பணிகள் என்பன போக்குவரத்துப் பணிகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன

*மூலம்*: இலங்கை மத்திய வங்கி

### 5.2.1 பொருட்களிலான வர்த்தகக் கணக்கு

#### வர்த்தக நிலுவை


**கடந்த இரு வருடங்களாக சுருக்கமடைந்த வர்த்தகக் கணக்குப் பற்றாக்குறை, 2021இல் ஏற்றுமதிகளின் உறுதியான அதிகரிப்பை இறக்குமதிகளின் சடுதியான அதிகரிப்பு விஞ்சியமையினால் குறிப்பிடத்தக்களவு விரிவடைந்தது.** வர்த்தகக் கணக்குப் பற்றாக்குறையானது 2020ஆம் ஆண்டின் ஐ.அ.டொலர் 6,008 மில்லியனிலிருந்து 2021ஆம் ஆண்டில் 8,139 மில்லியனாக விரிவடைந்தது. வர்த்தக பற்றாக்குறையின் விரிவடைதலுக்கு பங்களிப்புச்செய்து, முதன்மையாக எரிபொருள் விலைகள் உள்ளடங்கலாக உயர்வான பண்ட விலைகள், பொருளாதார நடவடிக்கைகள் இயல்புநிலைக்கு திரும்பியமையினால் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்கான அதிகரித்த கேள்வி, தடுப்புமருந்துகள் போன்ற மருத்துவம் மற்றும் மருந்தாக்கற் பொருட்கள் மீதான உயர்வான செலவினம் அத்துடன் அத்தியாவசியமற்ற பொருட்களின் இறக்குமதிகள் சிலவற்றின் மீதான தடைகளைத் தளர்த்தல் என்பனவற்றின் காரணமாக இறக்குமதிகள் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தன. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வர்த்தகப் பற்றாக்குறையானது 2020ஆம் ஆண்டின் 7.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் 9.6 சதவீதத்திற்கு விரிவடைந்தது.

### ஏற்றுமதி மற்றும் இறக்குமதிச் செயலாற்றம், வர்த்தக மாற்றுவிகிதம் மற்றும் வர்த்தகத்தின் போக்கு

#### ஏற்றுமதிச் செயலாற்றம்

**வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள், 2019ஆம் ஆண்டில் பதிவாகியிருந்த ஐ.அ.டொலர் 11,940 மில்லியன் கொண்ட முன்னைய அதியுயர்வான ஏற்றுமதி வருவாய்களை விஞ்சி ஆண்டுக்கான உயர்வான ஏற்றுமதி வருவாய்களைப் பதிவுசெய்து, 2021ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 12,499 மில்லியனை எட்டியது.** அதற்கமைய, ஏற்றுமதி வருவாய்கள் 2020 காலப்பகுதியில் பதிவாகிய ஐ.அ.டொலர் 10,047 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 24.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. வலுவான ஏற்றுமதி செயலாற்றத்தினை எடுத்துக்காட்டி ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள், 2021ஆம் ஆண்டின் யூனிலிருந்து தொடர்ச்சியாக ஒவ்வொரு மாதமும் ஐ.அ.டொலர் 1.0 பில்லியனைத் தொடர்ந்தும் விஞ்சியிருந்தது. மேலும், ஐ.அ.டொலர் 1,211 மில்லியன் கொண்ட ஒரு போதுமில்லாத உயர்வான மாதாந்தப் பெறுமதியும் 2021 நவெம்பரில் பதிவாகியது. 2021 காலப்பகுதியில் ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்பானது அநேகமான ஏற்றுமதி வகைகளிலிருந்தான வருவாய்களில் பரந்த அடிப்படையிலான அதிகரிப்பின் பெறுபேறாகவிருந்தது. ஏற்றுமதியை நோக்காகக்கொண்ட மற்றும் உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட கைத்தொழில்களுக்கு அரசாங்கத்திடமிருந்தும்

வரைபடம் 5.3
ஏற்றுமதிகள், இறக்குமதிகள் மற்றும் வர்த்தக நிலுவை
(ஐ.அ.டொ. பில்லியன்)





*மூலம்* : இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

மத்திய வங்கியிடமிருந்தும் மற்றும் ஏனைய தொடர்புடைய அதிகாரிகளிடமிருந்தும் குறிப்பாக, புதிதாக பின்தொடர் நடவடிக்கைகளை நிறுவுதல் மற்றும் ஊக்குவிப்புகளை வழங்குதல் வாயிலாக கிடைக்கப்பெற்ற விசேட கொள்கைசார்ந்த கவனிப்பு, துரித தடுப்புமருந்தேற்றல் நிகழ்ச்சித்திட்டம் என்பன காரணமாக உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட மீட்சி, அதேபோன்று உலகளாவிய சந்தைகள் வழமைக்கு திரும்பியதுடன் கேள்வி மற்றும் வழங்கல் சந்தைச் சங்கிலிகள் இரண்டினதும் படிப்படியான மீட்சி என்பன இதற்கு முக்கிய தூண்டுகோல்களாக அமைந்தன. ஏற்றுமதி அளவு மற்றும் அலகுப் பெறுமதி சுட்டெண்களின் அசைவுகளிலிருந்தான சான்றுக்கமைய, ஏற்றுமதி அளவுகளிலான அதிகரிப்பு ஏற்றுமதி வருவாய்களின் அதிகரிப்புக்கு கணிசமாகப் பங்களித்தது. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக ஏற்றுமதி வருவாய்கள் 2020ஆம் ஆண்டில் பதிவாகிய 12.4 சதவீதத்திலிருந்து 2021ஆம் ஆண்டில் 14.8 சதவீதத்திற்கு அதிகரித்தன.

கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள், 2020 உடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 9,702

வரைபடம் 5.4
ஏற்றுமதிகளின் உள்ளடக்கம் - 2021




*மூலம்* : இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

5

அட்டவணை 5.3
ஏற்றுமதிகளின் உள்ளடக்கம்

| வகை | 2020 | | 2021 (அ) | | பெறுமதியின் மாற்றம் ஐ.அ.டொலர் மில்லியன் | ஆண்டுக்கு ஆண்டு மாற்றம் % | மாற்றத்திற்கான பங்களிப்பு % |
|---|---|---|---|---|---|---|---|
| | பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன் | பங்கு % | பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன் | பங்கு % | | | |
| **வேளாண்மை ஏற்றுமதிகள்** | **2,336.2** | **23.3** | **2,729.5** | **21.8** | **393.3** | **16.8** | **16.0** |
| தேயிலை | 1,240.9 | 12.4 | 1,324.4 | 10.6 | 83.4 | 6.7 | 3.4 |
| வாசனைப் பொருட்கள் | 333.5 | 3.3 | 454.8 | 3.6 | 121.3 | 36.4 | 4.9 |
| தெங்கு | 345.2 | 3.4 | 425.2 | 3.4 | 80.1 | 23.2 | 3.3 |
| கடலுணவு | 189.8 | 1.9 | 274.1 | 2.2 | 84.3 | 44.4 | 3.4 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 134.7 | 1.3 | 148.8 | 1.2 | 14.1 | 10.5 | 0.6 |
| இறப்பர் | 30.1 | 0.3 | 42.2 | 0.3 | 12.1 | 40.1 | 0.5 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 25.5 | 0.3 | 31.6 | 0.3 | 6.1 | 23.9 | 0.2 |
| மரக்கறிகள் | 36.6 | 0.4 | 28.5 | 0.2 | -8.0 | -22.0 | -0.3 |
| **கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **7,672.0** | **76.4** | **9,702.0** | **77.6** | **2,030.0** | **26.5** | **82.8** |
| புடவைகளும் ஆடைகளும் | 4,423.1 | 44.0 | 5,435.1 | 43.5 | 1,012.1 | 22.9 | 41.3 |
| இறப்பர் உற்பத்திகள் | 786.1 | 7.8 | 1,050.4 | 8.4 | 264.4 | 33.6 | 10.8 |
| உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை | 464.0 | 4.6 | 586.9 | 4.7 | 122.8 | 26.5 | 5.0 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 373.6 | 3.7 | 506.4 | 4.1 | 132.8 | 35.6 | 5.4 |
| பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 337.5 | 3.4 | 500.9 | 4.0 | 163.4 | 48.4 | 6.7 |
| இரத்தினம், வைரம் மற்றும் ஆபரணங்கள் | 181.5 | 1.8 | 276.7 | 2.2 | 95.2 | 52.5 | 3.9 |
| இரசாயன உற்பத்திகள் | 172.7 | 1.7 | 223.2 | 1.8 | 50.5 | 29.2 | 2.1 |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் | 110.9 | 1.1 | 156.4 | 1.3 | 45.5 | 41.1 | 1.9 |
| விலங்குத் தீன் | 102.9 | 1.0 | 149.4 | 1.2 | 46.5 | 45.2 | 1.9 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 71.4 | 0.7 | 148.2 | 1.2 | 76.8 | 107.5 | 3.1 |
| ஏனைய கைத்தொழில் உற்பத்திகள் | 648.4 | 6.5 | 668.5 | 5.3 | 20.1 | 3.1 | 0.8 |
| **கனிப்பொருள் ஏற்றுமதிகள்** | **25.1** | **0.2** | **44.5** | **0.4** | **19.4** | **77.3** | **0.8** |
| **வகைப்படுத்தப்படாத ஏற்றுமதிகள்** | **14.1** | **0.1** | **22.6** | **0.2** | **8.5** | **60.1** | **0.3** |
| **மொத்த ஏற்றுமதிகள் (ஆ) (இ)** | **10,047.4** | **100.0** | **12,498.6** | **100.0** | **2,451.2** | **24.4** | **100.0** |
| **ஆண்டுச் சராசரி செலாவணி வீதம் (ஈ)** | **185.52** | | **198.88** | | | | |

(அ) தற்காலிகமானது
(ஆ) மீள் ஏற்றுமதிகள் நீங்கலாக
(இ) பின்னடைவுகள் மற்றும் பதிவின் பிற காரணிகளுக்காக சரிசெய்யப்பட்டது
(ஈ) ரூபா/ஐ.அ.டொலர் செலாவணி வீதம்

*மூலங்கள்:* இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள்
தேசிய இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண அதிகார சபை
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி



மில்லியனுக்கு 26.5 சதவீதத்தினால் அதிகரித்து மொத்த ஏற்றுமதிகளின் ஏறத்தாழ 78 சதவீதத்திற்கு வகைகூறின. கைத்தொழில் ஏற்றுமதி வகையினுள் வளர்ச்சியானது அனைத்து முக்கிய வகைகளுக்குள்ளும் பரந்த அடிப்படையில் அமைந்திருந்த அதேவேளை புடவைகள் மற்றும் ஆடைகள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2021 காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 5,435 மில்லியனுக்கு 22.9 சதவீதம் கொண்ட வளர்ச்சியினைப் பதிவுசெய்து மொத்த ஏற்றுமதிகளில் 40 சதவீதத்திற்கு மேற்பட்ட அதிகரிப்பிற்குப் பங்களித்தது. ஆடைகள் ஏற்றுமதிசெய்யப்படுகின்ற அனைத்து முக்கிய நாடுகளிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் இவ்வதிகரிப்புக்கு வழிவகுத்தன. திடமான டயர்கள் மற்றும் வீட்டுப்பாவனை இறப்பர் கையுறைகள் மூலம் முன்னிலைப்படுத்தப்பட்டு இறப்பர் உற்பத்தி ஏற்றுமதிகள் ஐ.அ.டொலர் 1 பில்லியன் பதிவினை விஞ்சி, மேம்பட்ட இறப்பர் உற்பத்தித்துறையின் செயலாற்றத்தினை பதிவு செய்வதற்கு துணையளித்து, ஆடைகள் மற்றும் தேயிலை ஏற்றுமதிக்கு அடுத்ததாக இலங்கையின் மூன்றாவது மிகவும் முக்கிய ஏற்றுமதித் துறையாக உருவெடுத்தது. குறைவானளவு விநியோகங்களுக்கு மத்தியில் சராசரி ஏற்றுமதி விலைகளின் அதிகரிப்பின் காரணமாக நீர்க்கல மற்றும் விமான எரிபொருள் ஏற்றுமதிகளால் முன்னிலைப்படுத்தப்பட்டு பெற்றோலிய ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் அதிகரித்தன. உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை வகையிலுள்ளவற்றின் அதிகரிப்பானது பெறுமதி சேர்க்கப்பட்ட தேங்காய் உற்பத்திகள், விலங்கு அல்லது காய்கறிக் கொழுப்பு மற்றும் எண்ணெய் அத்துடன் ஓடுடைய மீன் வகைத் தயாரிப்புகள் (பிரதானமாக நண்டுகள்) என்பன மூலம் பிரதானமாக தூண்டப்பட்டிருந்தது. எனினும், இலங்கையினால் ஏற்றுமதிசெய்யப்படுகின்ற தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களுக்கான பலவீனமடைந்த கேள்வினைப் பிரதிபலித்து, பிளாத்திக் மற்றும் அதன் பொருட்களின் கீழ் வகைப்படுத்தப்பட்ட தயாரிக்கப்பட்ட புடவைப் பொருட்கள் (பிரதானமாக முகக்கவசங்கள்) மற்றும் பிளாத்திக் ஆடைப்பொருட்கள் என்பவற்றிலிருந்தான வருவாய்கள் 2021 காலப்பகுதியில் கணிசமானளவு வீழ்ச்சியடைந்தன.

**அநேகமான துணை வகைகளின் மேம்பட்ட செயலாற்றத்துடன் வேளாண்மை ஏற்றுமதிகள் 2020ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021இல் 16.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியினைப் பதிவுசெய்தன.** வாசனைத்திரவியங்கள், தேயிலை, கடல் உணவு மற்றும் தேங்காய் உற்பத்திகள் என்பவற்றிலிருந்தான உயர்வான வருவாய்கள் இவ்வதிகரிப்பிற்குப் பங்களித்த அதேவேளை, காய்கறிகள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்தன. 2021ஆம் ஆண்டில் சராசரி ஏற்றுமதி விலைகளில் வீழ்ச்சியினை எதிரீடுசெய்து ஏற்றுமதி அளவில் ஏற்பட்ட 7.7 சதவீத அதிகரிப்பு, தேயிலை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களின் அதிகரிப்பிற்கு இட்டுச்சென்றது. இயற்கை இறப்பர், வாசனைத்திரவியங்கள் (பிரதானமாக கறுவா மற்றும் சாதிக்காய்) மற்றும் தயாரிக்கப்படாத புகையிலை உற்பத்திகள் என்பவற்றிலிருந்து பதிவாகிய உயர்வான வருவாய்கள், உயர்வான ஏற்றுமதி விலைகளால் தூண்டப்பட்ட அதேவேளை, உயர்வான விலைகள் மற்றும் அளவுகள் இரண்டும் கடல் உணவு, மிளகு மற்றும் தேங்காய் (உள்ளீடு மற்றும் உள்ளீடற்ற உற்பத்திகள் இரண்டும்) என்பவற்றிலிருந்தான வருவாய்களின் அதிகரிப்பிற்கு வழிவகுத்தன. பழங்கள், தானியங்கள் மற்றும் அத்தியாவசிய எண்ணெய் ஏற்றுமதிகள் என்பவற்றின் உயர்வான ஏற்றுமதி அளவுகள் காரணமாக சிறு வேளாண்மை உற்பத்திகள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் அதிகரித்தன. எனினும், உயர்வான விலைகளுக்கு மத்தியிலும் குறைவான ஏற்றுமதி அளவுகளே காய்கறி ஏற்றுமதிகளின் நலிவான செயலாற்றத்திற்கு வழிவகுத்தன.


**மொத்த ஏற்றுமதிகளில் ஒரு சதவீதத்திற்கும் குறைவாக வகைகூறுகின்ற கனிம ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021ம் ஆண்டில் 77.3 சதவீதத்தினால் மேம்பட்டன.** உலோகத் தாது, கசடு மற்றும் சாம்பல் என்பவற்றின் கீழ் வகைப்படுத்தப்பட்ட டைடானியம் உலோகத் தாது, இவ்வதிகரிப்புக்கு முதன்மையாக பங்களித்த அதேவேளையில் இயற்கை காரியம் மற்றும் பளிங்கு என்பவற்றிலான அதிகரிப்பு, புவிப் பொருட்கள் மற்றும் கற்கள், அரும் உலோகங்கள் என்பவற்றிலிருந்தான வருவாய்களின் அதிகரிப்புக்கு வழிவகுத்தன.

## இறக்குமதிச் செயலாற்றம்

**சில இறக்குமதிக் கட்டுப்பாடுகள், பிரதானமாக தனிப்பட்ட வாகன இறக்குமதிகள் மீதான கட்டுப்பாடுகள் தொடர்ந்தமைக்கு மத்தியிலும், இறக்குமதி மீதான செலவினம், 2020 உடன் ஒப்பிடுகையில் 2021 இல் ஐ.அ.டொலர் 20,637 மில்லியனுக்கு 28.5 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்தது.** தனிப்பட்ட பாவனை மோட்டார் வாகனங்களின் மிகக்குறைந்த இறக்குமதிகளுக்கு மத்தியிலும் உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகள் மீளத்தொடங்கியதுடன் உள்ளீடுகளுக்கான அதிகரிக்கின்ற கேள்வி, எரிபொருள் விலை உள்ளடங்கலாக உலகளாவிய பண்டச் சந்தைகளில் உயர்வடைந்த விலை

வரைபடம் 5.5

இறக்குமதிகளின் உள்ளடக்கம் - 2021




*மூலம்* : இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

மட்டங்கள், சுத்திகரிப்புச்சாலை அவ்வப்போது மூடப்பட்டமை காரணமாக சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய இறக்குமதியில் அதிகளவு தங்கியிருந்தமை, தடுப்புமருந்துகள் போன்ற மருத்துவ மற்றும் மருந்தாக்கற் பொருட்கள் மீதான உயர்வான செலவினங்கள் அத்துடன் சில இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் தளர்த்தல்கள் என்பன இறக்குமதிகளின் அதிகரிப்பிற்கு முக்கியமாக வகைகூறின. அநேகமான அனைத்து முக்கிய ஏற்றுமதி வகைகளிலும் அதிகரிப்புகள் அவதானிக்கப்பட்டு இறக்குமதி வளர்ச்சி பரந்த அடிப்படையில் அமைந்திருந்தது. இறக்குமதி அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்களின் அசைவுகளினால் அவதானிக்கப்பட்டவாறு இறக்குமதிகளின் முக்கிய வகைகளுக்கிடையில் அளவு மற்றும் விலை மாற்றங்களின் விளைவு மாறுபட்டிருந்தமைக்கு மத்தியிலும் பொதுவாக அளவு மற்றும் விலை அதிகரிப்புக்கள் இரண்டின் மூலமும் இறக்குமதிச் செலவினத்தில் செல்வாக்குச் செலுத்தப்பட்டிருந்தது. இறக்குமதிச் செலவினமானது மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக 2020ஆம் ஆண்டின் 19.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் 24.4 சதவீதத்திற்கு அதிகரித்தது.

**மொத்த இறக்குமதிச் செலவினத்திற்கு அரைவாசிக்கு மேல் வகைகூறுகின்ற இடைநிலைப்பொருட்கள் மீதான செலவினம் 2021 காலப்பகுதியில் இறக்குமதிகளின் அதிகரிப்பிற்கு பாரியளவு பங்களித்தது.** ஆண்டுகாலப்பகுதியில் இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவினம், ஐ.அ.டொலர் 12,309 மில்லியனுக்கு 35.6 சதவீதத்தினால் அதிகரித்தது. 2021 காலப்பகுதியில் நாட்டின் இறக்குமதிச் செலவினத்தில் பாரிய செலவின வகையாக எரிபொருள் காணப்பட்டதோடு மசகெண்ணெய், சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் (திரவப் பெற்றோலிய வாயு உள்ளடங்கலாக) மற்றும் நிலக்கரி என்பவற்றின் மீதான இறக்குமதிச் செலவினம் 2020ஆம் ஆண்டின் ஐ.அ.டொலர் 2,543 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 3,743 பில்லியனுக்கு அதிகரித்தது. அனைத்து மூன்று துணை வகைகளின் சராசரி விலைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்களும் அதேபோன்று சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியத்தின் இறக்குமதி

5

அட்டவணை 5.4
இறக்குமதிகளின் உள்ளடக்கம்

| வகை | 2020 | | 2021 (அ) | | பெறுமதியின் மாற்றம் ஐ.அ.டொலர் மில்லியன் | ஆண்டுக்கு ஆண்டு மாற்றம் % | மாற்றத்திற்கான பங்களிப்பு % |
|---|---|---|---|---|---|---|---|
| | பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன் | பங்கு % | பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன் | பங்கு % | | | |
| **நுகர்வுப் பொருட்கள்** | **3,401.7** | **21.2** | **3,848.7** | **18.6** | **447.0** | **13.1** | **9.8** |
| உணவும் குடிபானங்களும் | 1,554.4 | 9.7 | 1,666.5 | 8.1 | 112.1 | 7.2 | 2.4 |
| அரிசி | 10.5 | 0.1 | 73.0 | 0.4 | 62.5 | 595.3 | 1.4 |
| சீனி மற்றும் இனிப்புப் பண்டங்கள் | 277.1 | 1.7 | 288.8 | 1.4 | 11.7 | 4.2 | 0.3 |
| பால் உற்பத்திகள் | 333.8 | 2.1 | 317.7 | 1.5 | -16.1 | -4.8 | -0.4 |
| பருப்புவகை | 96.9 | 0.6 | 143.0 | 0.7 | 46.1 | 47.5 | 1.0 |
| ஏனையவை | 836.0 | 5.2 | 843.9 | 4.1 | 7.9 | 0.9 | 0.2 |
| உணவல்லாத நுகர்வுப் பொருட்கள் | 1,847.3 | 11.5 | 2,182.2 | 10.6 | 334.9 | 18.1 | 7.3 |
| மருத்துவ மற்றும் மருந்தாங்கல் பொருட்கள் | 595.5 | 3.7 | 882.5 | 4.3 | 287.0 | 48.2 | 6.3 |
| தொலைத் தொடர்பூட்டல் சாதனங்கள் | 268.4 | 1.7 | 382.9 | 1.9 | 114.5 | 42.6 | 2.5 |
| வீட்டுப் பாவனைப் பொருட்கள் | 174.2 | 1.1 | 257.1 | 1.2 | 82.9 | 47.6 | 1.8 |
| புடவைகள் மற்றும் துணைப் பொருட்கள் | 200.7 | 1.2 | 221.3 | 1.1 | 20.7 | 10.3 | 0.5 |
| ஏனையவை | 608.5 | 3.8 | 438.4 | 2.1 | -170.0 | -27.9 | -3.7 |
| **இடைநிலைப் பொருட்கள்** | **9,076.5** | **56.5** | **12,308.9** | **59.6** | **3,232.4** | **35.6** | **70.5** |
| எரிபொருள் | 2,542.6 | 15.8 | 3,742.9 | 18.1 | 1,200.3 | 47.2 | 26.2 |
| புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள் | 2,335.1 | 14.5 | 3,066.9 | 14.9 | 731.9 | 31.3 | 16.0 |
| இரசாயன உற்பத்திகள் | 831.5 | 5.2 | 1,074.4 | 5.2 | 242.9 | 29.2 | 5.3 |
| அடிப்படை உலோகங்கள் | 460.3 | 2.9 | 866.4 | 4.2 | 406.1 | 88.2 | 8.9 |
| பிளாத்திக்குகள் மற்றும் அவற்றின் பொருட்கள் | 540.2 | 3.4 | 765.7 | 3.7 | 225.6 | 41.8 | 4.9 |
| தாள், அட்டை மற்றும் அதன் பொருட்கள் | 383.1 | 2.4 | 468.9 | 2.3 | 85.8 | 22.4 | 1.9 |
| கோதுமை மற்றும் சோளம் | 384.4 | 2.4 | 418.3 | 2.0 | 33.8 | 8.8 | 0.7 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 1,599.4 | 10.0 | 1,905.4 | 9.2 | 306.0 | 19.1 | 6.7 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | **3,563.2** | **22.2** | **4,462.7** | **21.6** | **899.5** | **25.2** | **19.6** |
| பொறியும் கருவியும் | 2,176.1 | 13.6 | 2,809.5 | 13.6 | 633.4 | 29.1 | 13.8 |
| கட்டடப் பொருட்கள் | 1,035.6 | 6.5 | 1,248.9 | 6.1 | 213.2 | 20.6 | 4.7 |
| போக்குவரத்துக் கருவிகள் | 348.3 | 2.2 | 398.5 | 1.9 | 50.2 | 14.4 | 1.1 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 3.2 | 0.02 | 5.8 | 0.03 | 2.6 | 81.4 | 0.1 |
| **வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **14.0** | **0.1** | **17.1** | **0.1** | **3.1** | **22.2** | **0.1** |
| **மொத்த இறக்குமதிகள் (ஆ) (இ)** | **16,055.4** | **100.0** | **20,637.4** | **100.0** | **4,582.0** | **28.5** | **100.0** |
| **ஆண்டுச்சராசரி செலாவணி வீதம் (ஈ)** | **185.52** | | **198.88** | | | | |

(அ) தற்காலிகமானது
(ஆ) மீள் இறக்குமதிகள் நீங்கலாக
(இ) சீராக்கப்பட்டது
(ஈ) ரூபா/ ஐ.அ.டொலர் நாணயமாற்று வீதம்

மூலங்கள் : இலங்கை பெற்றோலியக்கூட்டுத்தாபனம்
லங்கா ஐ.ஓ.சி. பி.எல்.சி
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி



அளவுகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்களும் எரிபொருள் செலவு உயர்வடைவதற்கு காரணமாகி, மசகெண்ணெய் மற்றும் நிலக்கரி இறக்குமதிகளின் குறைவான அளவுகளின் விளைவினைப் புறந்தள்ளின. புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள் இறக்குமதி மீதான செலவினமானது முதந்தடவையாக ஐ.அ.டொலர் 3 பில்லியன் பதிவினை விஞ்சிச்சென்று இரண்டாவது பாரிய இறக்குமதிப் பொருளாகத் தோற்றம்பெற்றது. ஐரோப்பிய ஒன்றியம், ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐக்கிய அமெரிக்கா போன்ற முக்கிய ஏற்றுமதி நாடுகளிலிருந்து இலங்கையின் ஆடைகளுக்கு கிடைத்த உயர்வான கேள்வியினை நிறைவுசெய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட துணி மற்றும் நூல் மீதான செலவினத்தின் அதிகரிப்பு இதற்கு வழிவகுத்தது. இரசாயன உற்பத்திகளின் (பிரதானமாக காபன்) இறக்குமதிகள் முதற்தடவையாக ஐ.அ.டொலர் 1 பில்லியனை விஞ்சிய அதேவேளை அடிப்படை உலோகங்கள் (பிரதானமான இரும்பு மற்றும் உருக்கு), முதனிலை வடிவிலான பிளாத்திக் பொருட்கள் மற்றும் இயற்கை மற்றும் செயற்கை இறப்பர் என்பன உள்ளடங்கலாக ஏனைய இறக்குமதி வகைகள் ஆண்டின்போது உயர்வான வளர்ச்சியினைப் பதிவுசெய்தன. எனினும், இரசாயன வளமாக்கிகளை இறக்குமதி செய்வதன் மீது 2021ஆம் ஆண்டின் அநேகமான காலப்பகுதிகளில் நிலவிய தடை, வளமாக்கி மீது (பிரதானமாக யூரியா) குறைவான செலவினத்திற்கு வழிவகுத்த அதேவேளை தயாரிக்கப்படாத புகையிலை அத்துடன் சீமெந்து கிளிங்கற் கற்கள் போன்ற கனிம உற்பத்திகள் 2020 உடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டின் குறைவான செலவினப் பெறுமதிகளைப் பதிவுசெய்தன.

**மொத்த இறக்குமதிச் செலவினத்தில் ஏறத்தாழ 22 சதவீதத்திற்கு வகைகூறிய முதலீட்டுப் பொருட்கள் மீதான செலவினம் 2021ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 4,463 மில்லியனுக்கு 25.2 சதவீத்தினால் அதிகரித்தது.** பொறி மற்றும் உபகரணப் பாகங்கள் தவிர பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் வகைப்படுத்தப்பட்ட அனைத்து பொருட்கள் மீதுமான செலவினமானது 2020 உடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் அதிகரித்த அதேவேளை அலுவலக இயந்திரங்கள் (பிரதானமாக

கணனிகள்), தொலைத்தொடர்பு சாதனங்கள் (கடத்தல் கருவிகள்) அத்துடன் மருத்துவ மற்றும் ஆய்வுகூட உற்பத்திகள் என்பன இவ்வதிகரிப்புக்கு அதிகமாக பங்களித்தன. 2021ஆம் ஆண்டு முழுவதும் சில இறக்குமதி கட்டுப்பாட்டு வழிமுறைகள் தொடர்ந்தமைக்கு மத்தியிலும் கட்டடப்பொருட்கள் மற்றும் போக்குவரத்துச் சாதனங்கள் (வர்த்தகப் பயன்பாட்டிற்கான உந்து ஊர்திகள் உள்ளடங்கலாக) இறக்குமதிகளும் அதிகரித்தன. சீமெந்து மீதான குறைவான செலவினத்திற்கு மத்தியில் இரும்பு மற்றும் உருக்கு இறக்குமதிகளினால் கட்டடப்பொருட்கள் வகையில் அதிகரிப்பு தூண்டப்பட்டிருந்த அதேவேளை, வேளாண்மை உழவு இயந்திரங்கள், பார ஊர்திகள் மற்றும் புகையிரத சாதனங்கள் மீதான செலவினம் போக்குவரத்துச்சாதன இறக்குமதிகளின் அதிகரிப்புக்கு வழிவகுத்தன.

**உணவல்லா நுகர்வுப்பொருட்கள் மீதான செலவினம், 2020ஆம் ஆண்டின் ஐ.அ.டொலர் 1,847 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 2,182 மில்லியனுக்கு 18.1 சதவீதத்தால் அதிகரித்தது.** மருத்துவம் மற்றும் மருந்தாக்கற் பொருட்கள், குறிப்பாக கொவிட்-19 தடுப்புமருந்து நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இறக்குமதிசெய்யப்பட்ட தடுப்புமருந்துகள் இவ்வதிகரிப்புக்கு பாரிய பங்களிப்பை வழங்கின. கையடக்கத் தொலைபேசிகள், இறப்பர் டயர்கள் மற்றும் தொலைக்காட்சிகள் என்பன உணவல்லா நுகர்வோர் இறக்குமதிகளின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பிற்கு பங்களித்த ஏனைய வகைகளுக்குள் காணப்பட்டன. எனினும், 2020 மாச்சு தொடக்கம் அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் தொடர்ந்தமையினால் 2021 காலப்பகுதியில் தனிப்பட்ட பயன்பாட்டிற்கான உந்து ஊர்தி இறக்குமதி 2019 மற்றும் 2020 உடன் ஒப்பிடுகையில் ஆகக்குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

அட்டவணை 5.5
முக்கிய இறக்குமதிகளின் அளவு

மெ.தொ '000

| விடயம் | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 (அ) |
|---|---|---|---|---|---|
| **சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் (ஆ)** | **4,895** | **4,959** | **4,740** | **4,028** | **4,553** |
| 1ஆம் காலாண்டு | 1,275 | 1,382 | 1,199 | 1,249 | 1,378 |
| 2ஆம் காலாண்டு | 1,123 | 1,207 | 1,206 | 678 | 1,008 |
| 3ஆம் காலாண்டு | 1,336 | 1,317 | 1,211 | 1,123 | 865 |
| 4ஆம் காலாண்டு | 1,161 | 1,054 | 1,124 | 978 | 1,302 |
| **கோதுமை** | **1,250** | **1,297** | **1,159** | **1,404** | **1,307** |
| 1ஆம் காலாண்டு | 291 | 412 | 164 | 272 | 323 |
| 2ஆம் காலாண்டு | 334 | 329 | 318 | 285 | 288 |
| 3ஆம் காலாண்டு | 359 | 285 | 292 | 498 | 335 |
| 4ஆம் காலாண்டு | 265 | 271 | 385 | 348 | 360 |
| **மசகு எண்ணெய் (ஆ)** | **1,591** | **1,674** | **1,842** | **1,667** | **1,182** |
| 1ஆம் காலாண்டு | 282 | 283 | 461 | 464 | 274 |
| 2ஆம் காலாண்டு | 376 | 459 | 460 | 265 | 368 |
| 3ஆம் காலாண்டு | 464 | 461 | 461 | 568 | 362 |
| 4ஆம் காலாண்டு | 469 | 471 | 460 | 370 | 178 |
| **சீனி** | **498** | **645** | **556** | **683** | **582** |
| 1ஆம் காலாண்டு | 108 | 205 | 140 | 193 | 293 |
| 2ஆம் காலாண்டு | 158 | 166 | 153 | 108 | 140 |
| 3ஆம் காலாண்டு | 101 | 119 | 100 | 209 | 14 |
| 4ஆம் காலாண்டு | 132 | 154 | 164 | 172 | 136 |
| **வளமாக்கி** | **399** | **861** | **707** | **952** | **412** |
| 1ஆம் காலாண்டு | 78 | 256 | 148 | 88 | 114 |
| 2ஆம் காலாண்டு | 73 | 154 | 142 | 294 | 182 |
| 3ஆம் காலாண்டு | 129 | 225 | 238 | 126 | 17 |
| 4ஆம் காலாண்டு | 119 | 226 | 179 | 444 | 98 |
| **அரிசி** | **748** | **249** | **24** | **16** | **147** |
| 1ஆம் காலாண்டு | 259 | 203 | 8 | 8 | 3 |
| 2ஆம் காலாண்டு | 79 | 37 | 3 | 2 | 4 |
| 3ஆம் காலாண்டு | 160 | 2 | 5 | 2 | 3 |
| 4ஆம் காலாண்டு | 250 | 7 | 8 | 4 | 137 |

(அ) தற்காலிகமானது
(ஆ) சீராக்கப்பட்டது

மூலங்கள்: இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
லங்கா ஐ.ஓ.சி பி.எல்.சி
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி


**உணவு மற்றும் குடிபானங்கள் இறக்குமதிகள் மீதான செலவினம் 2020 உடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் 7.2 சதவீதத்தினால் அதிகரித்தது.** உணவு மற்றும் குடிபானங்கள் இறக்குமதி வகைகளின் கீழ் எண்ணெய் மற்றும் கொழுப்பு வகை பாரிய அதிகரிப்பினைப் பதிவுசெய்வதற்கு தேங்காய் எண்ணெய்யின் உயர்வான இறக்குமதிகள் வழிவகுத்த அதேவேளை, பிரதானமாக ஆண்டின் இறுதியில் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி (2021ஆம் ஆண்டின் இறுதி இரண்டு மாத காலப்பகுதியளவில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 63 மில்லியன்) 2020 உடன் ஒப்பிடுகையில் 2021 காலப்பகுதியில் தானியங்கள் மற்றும் அரைக்கும் கைத்தொழில் உற்பத்தி வகை கணிசமான அதிகரிப்பினைப் பதிவுசெய்வதற்கு காரணமாயிருந்தது. 2021ஆம் ஆண்டில் அதிகரித்த இறக்குமதிச் செலவினத்தைப் பதிவுசெய்த ஏனைய பிரதான உணவுப் பொருட்களாக பருப்பு, சீனி மற்றும் உடன் பழங்கள் காணப்பட்டன. எனினும், 2021 காலப்பகுதியில் தகரத்திலடைத்த மீன் மற்றும் நெத்தலிக்கருவாடு, வெறியக் குடிவகைகள் மற்றும் பால்மா என்பன மீதான குறைவான இறக்குமதிச் செலவினத்தால் தூண்டப்பட்டு, முறையே கடல் உணவு, குடிபானங்கள் மற்றும் பால் உற்பத்திகள் என்பவற்றிலான செலவினம் வீழ்ச்சியடைந்தது. அலகுப் பெறுமதியில் ஏற்பட்ட உயர்வு, இறக்குமதிச் செலவினத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பிற்கு பாரியளவில் பங்களித்தது.

## வர்த்தக மாற்றுவிகிதம்

**இலங்கையின் ஏற்றுமதியின் விலைகளுக்கும் இறக்குமதி விலைகளுக்கிடையிலான விகிதமான வர்த்தக மாற்றுவிகிதம் 2021இல் தேய்வடைந்தது.** ஏற்றுமதி விலைச்சுட்டெண், 92.4 சுட்டெண் புள்ளிகளுக்கு 5.4 சதவீதத்தினால் அதிகரித்த அதேவேளை இறக்குமதி விலைச்சுட்டெண் 94.9 சுட்டெண் புள்ளிகளுக்கு 15.2 சதவீதத்தினால் உயர்வான வீதத்தில் அதிகரித்தது. அனைத்து முக்கிய ஏற்றுமதி வகைகளினதும் விலைச்சுட்டெண்களில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் ஏற்றுமதி விலைகளின் அதிகரிப்பிற்குப் பங்களித்த அதேவேளை இடைநிலைப்பொருட்கள் மற்றும் நுகர்வோர் பொருட்கள் இறக்குமதிகளின் உயர்வான விலைகள் ஒட்டுமொத்த இறக்குமதி விலைச்சுட்டெண்ணின் அதிகரிப்பிற்குப் பிரதானமாக வகைகூறின. அதற்கமைய, இறக்குமதி விலைச்சுட்டெண் ஏற்றுமதி விலைச்சுட்டெண்ணை விட

5

வரைபடம் 5.6
வர்த்தக மாற்று விகிதம் மற்றும் வர்த்தகச் சுட்டெண்கள்




*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

உயர்வான வேகத்தில் அதிகரித்தமையினால் 2021இல் வர்த்தக மாற்றுவிகிதம் 97.4 சுட்டெண் புள்ளிகளுக்கு 8.6 சதவீதத்தினால் தேய்வடைந்து, ஏற்றுமதிகளின் அலகொன்றிலிருந்து கொள்வனவு செய்யப்படக்கூடிய இறக்குமதிகளின் தொகை தேய்வடைந்துள்ளதை எடுத்துக்காட்டியது.

**2021 காலப்பகுதியில் வர்த்தக அளவுகளில் ஏற்பட்ட விரிவாக்கம் ஏற்றுமதி வருவாய்கள் மற்றும் இறக்குமதி செலவினம் இரண்டினதும் அதிகரிப்பிற்கு குறிப்பிடத்தக்களவு பங்களிப்பை வழங்கியது.** ஆண்டுகாலப்பகுதியின் மூன்று முக்கிய ஏற்றுமதி வகைகளுக்குமான ஏற்றுமதி அளவுச் சுட்டெண்கள் மேம்பட்ட அதேவேளை இடைநிலை மற்றும் முதலீட்டுப்பொருட்களுக்கான இறக்குமதி அளவு சுட்டெண்கள் அதிகரித்தன. எனினும், 2021ஆம் ஆண்டில் நுகர்வோர் பொருட்களுக்கான இறக்குமதி விலைச்சுட்டெண் சிறிதளவு வீழ்ச்சியடைந்தது.

## வர்த்தகத்தின் போக்கு

**இலங்கை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் அதே முக்கிய வர்த்தகப் பங்காளர்களை தொடர்ந்தும் பேணியது.** பெறுமதி நியதிகளில், 2021ஆம் ஆண்டில் இலங்கையின் முக்கிய வர்த்தகப் பங்காளராக அதன் நிலையை இந்தியா மீளப்பெற்றதுடன் அதனைத் தொடர்ந்து சீனாவும், ஐக்கிய அமெரிக்காவும் காணப்பட்டன. இவை அனைத்தும்

அட்டவணை 5.6
வர்த்தக சுட்டெண்கள் (அ)

2010 = 100

| வகை | பெறுமதிச் சுட்டெண் | | | அளவுச் சுட்டெண் | | | அலகுப் பெறுமதிச் சுட்டெண் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2020 | 2021 (ஆ) | ஆண்டுக் காண்டு மாற்றம் % | 2020 | 2021 (ஆ) | ஆண்டுக் காண்டு மாற்றம் % | 2020 | 2021 (ஆ) | ஆண்டுக்காண்டு மாற்றம் % |
| **ஏற்றுமதிகள்** | | | | | | | | | |
| **வேளாண்மை ஏற்றுமதிகள்** | **101.3** | **118.4** | **16.8** | **90.5** | **101.1** | **11.7** | **112.0** | **117.1** | **4.6** |
| தேயிலை | 86.2 | 92.0 | 6.7 | 80.7 | 87.2 | 8.0 | 106.8 | 105.5 | -1.2 |
| இறப்பர் | 17.4 | 24.3 | 40.1 | 29.4 | 29.3 | -0.5 | 59.1 | 83.2 | 40.8 |
| தெங்கு | 208.4 | 256.7 | 23.2 | 168.0 | 188.1 | 11.9 | 124.0 | 136.5 | 10.1 |
| வாசனைத்திரவியங்கள் | 161.0 | 219.5 | 36.4 | 114.5 | 146.9 | 28.3 | 140.6 | 149.4 | 6.3 |
| சிறுவேளாண்மை உற்பத்திகள் | 188.6 | 208.3 | 10.5 | 173.1 | 188.4 | 8.8 | 108.9 | 110.6 | 1.5 |
| **கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **125.9** | **159.3** | **26.5** | **153.5** | **183.2** | **19.3** | **82.1** | **86.9** | **6.0** |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 131.9 | 162.1 | 22.9 | 111.5 | 140.6 | 26.1 | 118.3 | 115.3 | -2.5 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 141.9 | 192.4 | 35.6 | 238.5 | 282.8 | 18.6 | 59.5 | 68.0 | 14.3 |
| இறப்பர் உற்பத்திகள் | 141.2 | 188.7 | 33.6 | 100.0 | 112.6 | 12.7 | 141.3 | 167.6 | 18.6 |
| **கனிப்பொருள் ஏற்றுமதிகள்** | **103.6** | **183.7** | **77.3** | **68.6** | **111.4** | **62.6** | **151.2** | **164.8** | **9.1** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **116.5** | **145.0** | **24.4** | **132.9** | **156.9** | **18.0** | **87.7** | **92.4** | **5.4** |
| **இறக்குமதிகள்** | | | | | | | | | |
| **நுகர்வுப் பொருட்கள்** | **137.5** | **155.5** | **13.1** | **128.0** | **127.8** | **-0.2** | **107.4** | **121.7** | **13.3** |
| உணவு மற்றும் குடிபானங்கள் | 117.5 | 126.0 | 7.2 | 127.4 | 125.5 | -1.5 | 92.2 | 100.4 | 8.8 |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 160.4 | 189.5 | 18.1 | 128.7 | 130.4 | 1.3 | 124.7 | 145.3 | 16.6 |
| **இடைநிலைப் பொருட்கள்** | **112.8** | **152.9** | **35.6** | **140.2** | **152.0** | **8.5** | **80.5** | **100.6** | **25.0** |
| எரிபொருள் | 83.6 | 123.1 | 47.2 | 133.1 | 134.2 | 0.8 | 62.8 | 91.7 | 46.1 |
| வளமாக்கி | 107.8 | 65.9 | -38.9 | 160.2 | 74.5 | -53.5 | 67.3 | 88.4 | 31.4 |
| இரசாயன உற்பத்திகள் | 159.9 | 206.6 | 29.2 | 157.9 | 177.3 | 12.2 | 101.3 | 116.6 | 15.1 |
| கோதுமை மற்றும் சோளம் | 144.8 | 157.6 | 8.8 | 138.9 | 134.2 | -3.3 | 104.3 | 117.4 | 12.6 |
| புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள் | 129.1 | 169.5 | 31.3 | 126.8 | 153.9 | 21.4 | 101.8 | 110.2 | 8.2 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 127.7 | 181.0 | 41.8 | 148.9 | 169.5 | 13.8 | 85.8 | 106.8 | 24.6 |
| வைரங்கள், அருங்கற்கள் மற்றும் உலோகங்கள் | 31.0 | 38.0 | 22.5 | 36.5 | 41.9 | 14.7 | 85.1 | 90.9 | 6.8 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | **129.3** | **162.0** | **25.2** | **183.4** | **230.6** | **25.7** | **70.5** | **70.3** | **-0.4** |
| கட்டடப் பொருட்கள் | 126.0 | 152.0 | 20.6 | 147.7 | 154.5 | 4.7 | 85.4 | 98.3 | 15.2 |
| போக்குவரத்துக் கருவி | 58.8 | 67.3 | 14.4 | 50.4 | 46.7 | -7.5 | 116.6 | 144.1 | 23.6 |
| பொறி மற்றும் கருவி | 162.7 | 210.1 | 29.1 | 264.5 | 359.0 | 35.7 | 61.5 | 58.5 | -4.9 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 96.2 | 174.5 | 81.4 | 112.9 | 142.6 | 26.4 | 85.2 | 122.3 | 43.5 |
| **மொத்த இறக்குமதிகள்** | **119.7** | **153.9** | **28.5** | **145.5** | **162.2** | **11.5** | **82.3** | **94.9** | **15.2** |
| **வர்த்தக மாற்று விகிதம்** | | | | | | | **106.5** | **97.4** | **-8.6** |

(அ) ஐ.அ.டொலரின் நியதிகளில்
(ஆ) தற்காலிகமானது


*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

5

ஒன்றிணைந்து இலங்கையின் மொத்த வர்த்தகத்தின் (ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகள் இரண்டும்) ஏறத்தாழ 42 சதவீதத்திற்குப் பங்களிப்புச்செய்தன. இந்தியாவுடனும் சீனாவுடனுமான மொத்த வர்த்தகம் ஒவ்வொன்றும் ஐ.அ.டொலர் 5 பில்லியனை விஞ்சிய அதேவேளை ஐக்கிய அமெரிக்காவுடனான வர்த்தகம் ஐ.அ.டொலர் 3.5 பில்லியனை விஞ்சியிருந்தது. ஐக்கிய அரபு இராச்சியம், ஐக்கிய இராச்சியம் மற்றும் ஜேர்மனி ஆகியன ஏனைய முக்கிய பங்காளர்களாக விளங்கி 2021ஆம் ஆண்டில் ஒவ்வொன்றும் ஐ.அ.டொலர் 1 பில்லியனுக்கு மேல் வகைகூறின. 2021ஆம் ஆண்டில் நாடு ரீதியான வர்த்தக மீதிகள் குறிப்பிடுவதற்கமைய, ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி, நெதர்லாந்து, இத்தாலி மற்றும் பெல்ஜியம் போன்ற மேற்கத்தேய நாடுகள் குறிப்பிடத்தக்க வர்த்தக மிகைகளைப் பதிவுசெய்த அதேவேளை சீனா, இந்தியா, ஐக்கிய அரபு இராச்சியம், மலேசியா மற்றும் சிங்கப்பூர் போன்ற ஆசிய நாடுகள் குறிப்பிடத்தக்கப் வர்த்தகப் பற்றாக்குறையினைப் பதிவுசெய்தன.

**இலங்கையின் முக்கிய ஏற்றுமதி நாடுகளாக 2021ஆம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் காணப்பட்டன.** ஐ.அ.டொலர் 3 பில்லியனுக்கு அதிகமான ஏற்றுமதிப் பெறுமதியுடன் இலங்கை ஏற்றுமதிகளின் பாரிய தனியொரு கொள்வனவு நாடாக ஐக்கிய அமெரிக்கா தொடர்ந்தும் விளங்கி மொத்த ஏற்றுமதிகளின் 24.9 சதவீதத்திற்கு வகைகூறியது. அதனைத் தொடர்ந்து ஐக்கிய இராச்சியம் (7.5 சதவீதம்), இந்தியா (6.6 சதவீதம்), ஜேர்மனி (6.1 சதவீதம்) மற்றும் இத்தாலி (4.6 சதவீதம்) ஆகிய நாடுகள் அமைந்திருந்தன. அதிகரித்த ஏற்றுமதிகளுக்கு இசைவாக, இலங்கையின் முதல் 10 ஏற்றுமதி நாடுகள் உள்ளடங்கலாக அநேகமான நாடுகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 2021 காலப்பகுதியில் அதிகரித்தன. ஆடைகள், இறப்பர் உற்பத்திகள், பொறி மற்றும் இயந்திர உபகரணங்கள் மற்றும் உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை என்பன ஐக்கிய அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட முக்கிய உற்பத்திகளாகும். 2021ஆம் ஆண்டில் மொத்த ஆடை ஏற்றுமதிகளில் 42 சதவீதப் பங்குடன் இலங்கைக்கான பாரியளவு ஆடை ஏற்றுமதிசெய்கின்ற தனியொரு நாடாகத் தொடர்ந்தும் ஐக்கிய அமெரிக்கா விளங்கியது. ஐக்கிய இராச்சியத்திற்கான ஏற்றுமதிகளில் ஆடைகள், இறப்பர் உற்பத்திகள், தயாரிக்கப்பட்ட புடவைப் பொருட்கள், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, இயந்திரம் மற்றும் பொறியியல் சாதனங்கள் மற்றும் கடல் உணவு என்பன ஆதிக்கம் செலுத்தின. வாசனைத்திரவியங்கள், விலங்குத்தீன், புடவைகள், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, மர மற்றும் கடதாசி உற்பத்திகள் மற்றும் சிறுவேளாண்மை உற்பத்திகள் என்பன இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. பிராந்தியமொன்றாக ஐரோப்பிய ஒன்றியம் 2021ஆம் ஆண்டில் மொத்த ஆடை ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 30 சதவீதம் உள்ளடங்கலாக மொத்த ஏற்றுமதிகளின் ஏறத்தாழ 24 சதவீதத்திற்கு வகைகூறியது. இறப்பர் உற்பத்திகள், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, தேயிலை, கடல் உணவு, இயந்திரம் மற்றும் பொறியியல் சாதனங்கள் அத்துடன் தேங்காய் உள்ளீட்டு உற்பத்திகள் என்பன ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட மற்றைய முக்கிய பொருட்களுள் காணப்பட்டன. 2021ஆம் ஆண்டில் மத்திய கிழக்கு மற்றும் ரஷ்ய முன்னிலையிலான பொதுநலவாய சுதந்திர நாடுகள் இணைந்து இலங்கையின் தேயிலை ஏற்றுமதிகளின் ஏறத்தாழ 58 சதவீதத்திற்கு பங்களிப்புச்செய்து தேயிலைக்கான முக்கிய ஏற்றுமதி அடைவிடங்களாக விளங்கின.

வரைபடம் 5.7
நாடுகள் ரீதியான வர்த்தக நிலுவை (ஐ.அ.டொ.மில்லியன்)




*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

**இலங்கை இறக்குமதிகளுக்கான முக்கிய மூலங்களாக ஆசிய நாடுகள் 2021ஆம் ஆண்டில் தொடர்ந்தும் இடம்பிடித்தன.** இறக்குமதிக்கான பாரிய மூலமாக தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டாகவும் சீனா தொடர்ந்தும் விளங்கி 2021இல் மொத்த இறக்குமதிகளின் ஏறத்தாழ 23 சதவீதத்துடன் ஐ.அ.டொலர் 4.7 பில்லியனுக்கு மேல் பதிவுசெய்தது. இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், புடவைகள் மற்றும் புடவைப்பொருட்கள், கட்டடப்பொருட்கள் அத்துடன் மருத்துவ மற்றும் மருந்தாக்கற் பொருட்கள் என்பவற்றின் அதிகரித்த இறக்குமதிகள் காரணமாக சீனாவிலிருந்தான இறக்குமதிச் செலவினம் 33 சதவீதத்தினால் அதிகரித்தது. அதனைத் தொடர்ந்து, இந்தியாவும் ஐக்கிய அரபு இராச்சியமும் இறக்குமதிக்கான இரண்டாம் மற்றும் மூன்றாம் மூல நாடுகளாக விளங்கி முறையே 22.4 சதவீதத்திற்கும் 6.8 சதவீதப் பங்குகளுக்கு வகைகூறின. பெற்றோலிய உற்பத்திகள், புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள், அடிப்படை உலோகங்கள் மற்றும் கோதுமை இறக்குமதிகள் காரணமாக இந்தியாவிலிருந்தான இறக்குமதிகள் மீதான செலவினம் 50 சதவீதத்தினால் அதிகரித்தது. பெற்றோலிய உற்பத்திகள், அடிப்படை உலோகங்கள் மற்றும் கட்டடப்பொருட்கள் என்பன பிரதானமாக ஐக்கிய அரபு இராச்சியத்திடமிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. இவை ஐக்கிய அரபு இராச்சியத்திடமிருந்தான மொத்த இறக்குமதிகளின் சுமார் 86 சதவீதத்திற்குப் பங்களித்தன. இறக்குமதி மூல நாடு என்ற வகையில் மலேசியா, பெற்றோலிய உற்பத்திகள், உணவுத் தயாா்படுத்தல்கள், பொறி மற்றும் உபகரணங்கள், இரசாயனப் பொருட்கள் அத்துடன் எண்ணெய் மற்றும் கொழுப்பு போன்ற


5

வரைபடம் 5.8
நாடுகளின்படி ஏற்றுமதிகள்




*மூலம் : இலங்கைச் சுங்கம்*

வரைபடம் 5.9
நாடுகளின்படி இறக்குமதிகள்




* ஐக்கிய இராச்சியம் நீங்கலாக

*மூலம் : இலங்கைச் சுங்கம்*



முக்கிய இறக்குமதிப் பொருட்களின் அதிகரிப்புக்கள் காரணமாக 2021ஆம் ஆண்டில் நான்காம் நிலையைப் பெற்றுக்கொண்டது. 2021ஆம் ஆண்டில் சிங்கப்பூரிலிருந்து இறக்குமதிசெய்யப்பட்ட முக்கிய பொருட்கள் பெற்றோலிய உற்பத்திகள், இரசாயன உற்பத்திகள் மற்றும் பொறி மற்றும் உபகரணங்களை உள்ளடக்கியிருந்தன. பிரதானமாக ஆண்டுகாலப்பகுதியில் வாகன இறக்குமதிகள் மீதான கட்டுப்பாடுகள் காரணமாக இறக்குமதி மூல நாடு என்ற வகையில் ஜப்பான், ஆண்டுகாலப்பகுதியில் 2020ஆம் ஆண்டின் அதன் ஆறாவது நிலையுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் பத்தாவது நிலைக்கு தள்ளப்பட்டது.

## வெளிநாட்டு வர்த்தகக் கொள்கைகள், அபிவிருத்திகள் மற்றும் நிறுவன ரீதியான ஆதரவு

**உலகளாவிய நோய்த்தொற்றின் நாசம் விளைவிக்கின்ற தாக்கத்திற்கு மத்தியில் 2021ஆம் ஆண்டில் வணிகப்பொருள் வர்த்தகத் துறைக்கு புத்துயிரளிப்பதற்கு கொள்கை ஆதரவும் துறையின் அனைத்து ஆர்வலர்களின் முயற்சிகளும் உறுதுணையளித்தன.** அரசாங்கத்திடமிருந்தும் மத்திய வங்கியிடமிருந்தும் கிடைத்த கொள்கைசார்ந்த தூண்டல்கள், மேம்படுகின்ற உலகளாவிய பொருளாதார நிலைமைகளுடன் ஒன்றிணைந்து ஏற்றுமதித்துறை நோய்த்தொற்றுக்கு முன்னைய மட்டத்தையும் தாண்டி மீளெழுச்சிபெறுவதற்கு உதவின. பல வேளாண்மை மற்றும் கைத்தொழில் உற்பத்திகளுக்கான இறக்குமதி மாற்றீடுகளை அபிவிருத்தி செய்வதனூடாக உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு ஆதரவளிக்கின்ற அதேவேளை கடுமையான ஏற்றுமதி ஊக்குவிப்பினை நடாத்துவதற்கு அரசாங்கம் முயற்சித்துடன் குறைவான வரிகள் தொடர்ந்து பேணப்பட்டன. 2021ஆம் ஆண்டின் தொடக்கத்தில் பொருளாதார புத்துயிரளித்தல் மற்றும் வறுமை ஒழிப்பு மீதான சனாதிபதி செயலணி, சீரமைக்கப்பட்ட அத்துடன் இலக்கிடப்பட்ட முறையில் அதன் நடவடிக்கைகளுடன் அணிசேர்வதற்கு தொடர்புடைய ஆர்வலர்களுடனான ஒன்றிணைந்த முயற்சியினூடாக ஏற்றுமதி வருவாய்களை ஊக்குவிப்பதற்கும் வேறு படுகடனற்ற வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள் மீதும் அதன் கவனத்தை மையப்படுத்தியிருந்தது. அதற்கமைய, வணிகப்பொருள் வர்த்தகம் (புடவைகள் மற்றும் ஆடைகள், இரத்தினக்கல் மற்றும் ஆபரணம், இறப்பர் உற்பத்திகள், தேயிலை, தேங்காய் உற்பத்திகள், கடற்றொழில், வாசனைத்திரவியங்கள் மற்றும் சிறுவேளாண்மை ஏற்றுமதிப் பயிர்கள்), சுற்றுலாத்துறை வருவாய்கள், தொழிலாளர் பணவனுப்பல்கள் அதேபோன்று வெளிநாட்டு முதலீடுகள் போன்ற ஒவ்வொரு முக்கியத்துறைக்குமென மத்திய வங்கியினால் ஒருங்கிணைக்கப்பட்ட பல்வேறு துணைக்குழுக்கள் தொடங்கிவைக்கப்பட்டன. இத்துணைக்குழுக்கள்

குறித்தொதுக்கப்பட்ட இலக்குகளை எய்துவதற்கு முயற்சித்த அதேவேளை ஒவ்வொரு துறையினதும் முன்னேற்றத்தினை தடைப்படுத்திய உடனடிச் சிக்கல்களையும் முட்டுக்கட்டைகளையும் தீர்ப்பதற்கு தொடர்புடைய ஆர்வலர்களுடன் இணைந்து செயற்பட்டன. அதேநேரம், வர்த்தகம் மீதான கொள்கை வழிகாட்டலை வலுப்படுத்துவதற்கு தேசிய வர்த்தகக் கொள்கையொன்றினை வகுக்க வர்த்தக அமைச்சு தொடங்கியது. உலக வர்த்தக அமைப்பு 2021ஆம் ஆண்டில் உலக வணிகப்பொருள் வர்த்தக அளவு 9.8 சதவீதத்தினால் மீளெழுச்சிபெறும் என்றும் (2020ஆம் ஆண்டின் 5.0 சதவீதம் கொண்ட சுருக்கத்திலிருந்து) 2022ஆம் ஆண்டில் வளர்ச்சி 3.0 சதவீதத்திற்கு மிதமடையும் என்றும் எதிர்பார்க்கின்றது. பொருத்தமான கொள்கை ஆதரவு ஊடாக பன்னாட்டு சந்தையில் ஏற்றுமதிப் பங்கினைப் பெற்றுக்கொள்வதற்கு அதிகாரிகள் கவனம் செலுத்தவேண்டும்.

**2021 காலப்பகுதியில் பல இறக்குமதிக் கட்டுப்பாட்டு வழிமுறைகள் தளர்த்தப்பட்டன.** வெளிநாட்டுத் துறை அழுத்தங்களின் காரணமாக 2020ஆம் ஆண்டின் முதல் அரையாண்டுப்பகுதியில் அரசாங்கத்தினால் பின்பற்றப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகள் 2021 காலப்பகுதியில் படிப்படியாகத் தளர்த்தப்பட்டன. அதிமேதகு சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட வரி நிர்ணயக் குழுவின் வழிகாட்டல்களின் கீழ் 2020 மற்றும் 2021 காலப்பகுதிகளில் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் மீது பணிப்புரைகளை விடுத்து இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் இது தொடர்பில் பல அதிவிசேட வர்த்தமானிகள் வெளியிடப்பட்டன. வெளிநாட்டுச் செலாவணியினைப் பாதுகாக்கும் பொருட்டு உள்நாட்டுத் தொழிற்துறைகள் மற்றும் வாடிக்கையாளர் மீது ஆகக்குறைந்த எதிர்பார்க்கப்பட்ட தாக்கத்துடன் தெரிவுசெய்யப்பட்ட அத்தியாவசியமற்ற மற்றும் அவசரமற்ற இறக்குமதிப்பொருட்களை முதன்மையாகக்கொண்டு தற்காலிக அடிப்படையில் இக்கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. எவ்வாறாயினும், 2021 செத்தெம்பர் காலப்பகுதியின் குறுகிய காலமொன்றின்போது உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுடனும் தேசிய சேமிப்பு வங்கியுடனுமான கடன்பத்திரங்கள் மற்றும் ஏற்றுக்கொள்ளலுக்கான ஆவணங்கள் என்பவற்றின் கீழ் இறக்குமதி செய்யப்படுகின்ற தெரிவுசெய்யப்பட்ட அத்தியாவசியமற்ற/ அவசரமற்ற பொருட்களின் இறக்குமதிகளுக்கெதிராக மத்திய வங்கி 100 சதவீத காசு எல்லைத்தேவைப்பாட்டினை விதித்தபோதிலும், 2021 யூன் தொடக்கம் இவ்விறக்குமதிக் கட்டுப்பாடுகள் குறிப்பிடத்தக்களவு குறைக்கப்பட்டன. இதற்கு மேலதிகமாக, சேதன வேளாண்மைக்கு மாறுதலடைகின்ற அரசாங்கத்தின் கொள்கை முயற்சிக்கு இணங்க, 2021 மேயில் அசேதன வளமாக்கி இறக்குமதி கட்டுப்படுத்தப்பட்டது. எனினும், 2021 நவெம்பர் அளவில் இவ்வழிமுறைகளும் தளர்த்தப்பட்டன. வெளிநாட்டுத்துறை மீதான தொடர்ச்சியான அழுத்தத்தினைக் கருத்திற்கொண்டு, அரசாங்கமானது தெரிவுசெய்யப்பட்ட அவசரமற்ற மற்றும் அத்தியாவசியமற்ற பொருட்களின் இறக்குமதிக்காக அவற்றுக்கு இறக்குமதி உரிமங்களின் தேவைப்பாடுகள் போன்ற பல கட்டுப்பாடுகளை 2022 மாச்சு காலப்பகுதியில் விதித்த அதேவேளை, இறக்குமதி தீர்வைகளையும் அதிகரித்தது.

**உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கங்களிலிருந்து துறையினை மீட்டெடுப்பதற்கு ஆதரவளிக்கும் நோக்குடன் 2021 காலப்பகுதியில் வெளிநாட்டுத் துறைக்கு நிறுவனசார் ஆதரவினை மேம்படுத்துவதற்கு பல்வேறு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.** ஏற்றுமதி அபிவிருத்திச் சபையானது தேசிய ஏற்றுமதி உபாயம் 2018-2022இனைத் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்திய அதேவேளை ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மீளத்தொடங்கியது. சந்தை அபிவிருத்தி, உற்பத்தி மற்றும் வழங்கல் சங்கிலி அபிவிருத்தி அத்துடன் இயலளவை விருத்திசெய்தல் போன்ற துறைகளில் தேசிய ஏற்றுமதி உபாய நடவடிக்கைத் திட்டம் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்பட்டது. இணையத்தளம் அடிப்படையிலமைந்த ஊக்குவிப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்த அதேவேளை 2020 காலப்பகுதியில் அநேகமாக மெய்நிகர் வாயிலாக மட்டுப்படுத்தப்பட்டிருந்த வர்த்தக சந்தைகள், வணிகத்திற்கான வணிகம் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வர்த்தக நாம ஊக்குவிப்பு பிரசாரங்கள் போன்றவற்றில் நேரடியாக பங்கேற்பதை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மீளத்தொடங்கியது. ஏற்றுமதி ஊக்குவிப்பினை நோக்கி வர்த்தக சம்மேளனங்களும் பங்கேற்றன. இது கொள்கை வகுத்தல் மற்றும் குறைகளைக் கையாளல் என்பவற்றில் அரசாங்க மற்றும் தனியார்துறை ஆர்வலர்களைத் தொடர்புபடுத்துவதற்கு உதவியது. இலங்கை கட்டளைகள் நிறுவனமானது தேசிய தரநியமங்களை வகுத்து தரமுயர்த்துகின்ற செயல்முறையினைத் தொடர்ந்தும் முன்னெடுத்தமையானது வெளிநாட்டு உற்பத்திகளுடன் போட்டிபோடுவதற்கு உள்நாட்டு தயாரிப்பாளர்களுக்கு உதவியது. அதற்கமைய, தேசிய தரநியமங்களை சர்வதேச தரநியமங்களுக்கு இசைவாகப் பேணுவதற்கு இலங்கை கட்டளைகள் நிறுவனம் 2021 இறுதியளவில் வெளியிடப்பட்ட 327 தரநியமங்களில் 128 தரநியமங்களை திருத்தம் செய்தது. சவால்மிக்க சந்தைச் சூழலுக்கு மத்தியில் இலங்கை ஏற்றுமதி கொடுகடன் கூட்டுத்தாபனமானது முன்னைய ஆண்டை விட ஏறத்தாழ ரூ.11.6 பில்லியன் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்து, ரூ.48.7 பில்லியன் பெறுமதியுடைய காப்பீடுசெய்யப்பட்ட வியாபாரங்களை அறிக்கையிட்டது. இலங்கைச் சுங்கத்திற்கான நவீனமயப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம், பத்து துணைக்குழுக்களின் கீழ் தொழிற்பாட்டு மற்றும் முகாமைத்துவச் செயன்முறைகளைப் பகுப்பாய்வுசெய்து தேவையான மறுசீரமைப்புக்கள் பற்றிய பரிந்துரைகளை வழங்குவதை தொடர்ந்தும் முன்னெடுத்தது. அதேவேளை, செயன்முறைகளை மேம்படுத்துவதற்கும் வருவாய்க் கசிவுகளை தடுப்பதற்கும், இலங்கை சுங்கம் தொடர்புபட்ட கருமங்கள் பற்றி விசாரணைசெய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு 2021 பெப்புருவரியில் சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. உலக வர்த்தக அமைப்பின் வர்த்தக வசதிப்படுத்தல்

5

உடன்படிக்கையின் நடைமுறைப்படுத்தல் தொடர்பில் இலங்கைச் சுங்கம் அதன் நடவடிக்கைகளை மேலும் சீரமைத்தது.

**2021ஆம் ஆண்டில் ஏற்றுமதிகளிலிருந்தான ஒட்டுமொத்த வருவாய்களின் அதிகரிப்பிற்கு இசைவாக வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் இலங்கையின் ஏற்றுமதிகள் மேம்பட்டன.** மீளாய்வுட்படுகின்ற காலப்பகுதியில் முக்கிய வர்த்தகப் பங்காளர்களுடனான அதாவது ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய அமெரிக்கா நாடுகளுடனான பொதுவாக்கப்பட்ட விசேட முன்னுரிமைத் திட்டங்களின் கீழான வர்த்தகம், அதிகரித்த சந்தை வாய்ப்புகளுக்கு வழிவகுத்தது. 2020 யூலையில் தாழ்ந்த மத்திய வருமான நாடொன்றாக இலங்கை மீள்வகைப்படுத்தப்பட்ட பின்னர், தாபிக்கப்பட்ட ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜிஎஸ்பி+ என அழைக்கப்படும் முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமைத் திட்டத்திலிருந்து 2023 இன் இறுதியில் முடிவடைகின்ற அதன் செல்லுபடியான காலம் வரை தற்போதைய நன்மைகளை இலங்கை பெற்றுக்கொள்ளுமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஐக்கிய அமெரிக்காவின் முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமைத் திட்டம் 2020 திசெம்பர் 31 அன்று காலாவதியடைந்ததுடன் ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தின் பொதுவான நடைமுறைக்கு அமைவாக பின்னோக்கி செயற்படும் அடிப்படையில் மீள அதிகாரமளிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வேறுபட்ட வரிமுறையாகக் காணப்படுகின்ற ஐக்கிய இராச்சியத்தின் உலகளாவிய வரிகள் 2021 சனவரி 01 அன்று நடைமுறைக்கு வந்ததுடன் ஐரோப்பிய ஒன்றிய ஜிஎஸ்பி+ பயன்பெறுநராக இலங்கை ஐக்கிய இராச்சியத்திடமிருந்து அதே தீர்வையற்ற பெறுவழியினை தொடர்ந்தும் அனுபவிக்கும். எனினும், 2022ஆம் ஆண்டிலிருந்து புதிய ஜிஎஸ்பி திட்டத்தினை ஐக்கிய இராச்சியம் நடைமுறைப்படுத்துமென எதிர்பார்க்கப்படுவதுடன் இலங்கையின் வர்த்தகத் திணைக்களம் ஐக்கிய இராச்சியத்திலுள்ள தொடர்புடைய அதிகாரிகளுக்கு தேவையான உள்ளீடுகளை வழங்கியுள்ளது. 2021 மாச்சு 31 அன்று காலாவதியான ஜப்பான் மூலம் வழங்கப்பட்ட ஜிஎஸ்பி திட்டம் 2031 வரை 10 வருடங்கள்

5

### அட்டவணை 5.7
### இலங்கையின் முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கைகளுக்கு கீழான ஏற்றுமதிகள்

| முன்னுரிமை உடன்படிக்கை | 2020 பெறுமதிகள் (ஐ.அ.டொ. மில்லியன்) | 2021 (அ) பெறுமதிகள் (ஐ.அ.டொ. மில்லியன்) | 2021 (அ) வளர்ச்சி (%) | 2021 (அ) பங்கு (%) | முக்கிய ஏற்றுமதி உற்பத்திகள் (ஏற்றுமதியின் அளவினால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது) |
|---|---|---|---|---|---|
| முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை (ஜி.எஸ்.பீ) | 3,671.8 | 4,312.7 | 17.5 | 80.8 | ஆடைகள், இறப்பர் உற்பத்திகள், தேயிலை, உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, கடலுணவு, பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் |
| இதில் ஐரோப்பிய ஒன்றியம் (முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை + உள்ளடங்கலாக) (ஆ) | 1,907.0 | 2,402.1 | 26.0 | 45.0 | ஆடைகள், இறப்பர் உற்பத்திகள், தேயிலை, உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, கடலுணவு, பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் |
| ஐக்கிய இராச்சியம் | 690.9 | 680.7 | -1.5 | 12.8 | ஆடைகள், இறப்பர் உற்பத்திகள், பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, கடலுணவு, போக்குவரத்துச் சாதனங்கள் |
| ஐக்கிய அமெரிக்கா (இ) | 585.7 | 677.8 | 15.7 | 12.7 | ஆடைகள், இறப்பர் உற்பத்திகள், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, இரசாயன உற்பத்திகள், வாசனைப் பொருட்கள் |
| ருசிய கூட்டாட்சி (ஈ) | 142.2 | 132.9 | -6.5 | 2.5 | தேயிலை, இறப்பர் உற்பத்திகள், தெங்கு உள்ளீடற்ற உற்பத்திகள், ஆடைகள் மற்றும் இரசாயன உற்பத்திகள் |
| அவுஸ்திரேலியா | 79.2 | 103.5 | 30.7 | 1.9 | ஆடைகள், இறப்பர் உற்பத்திகள், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, தேயிலை, தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள் |
| கனடா | 61.0 | 87.9 | 44.0 | 1.6 | இறப்பர் உற்பத்திகள், ஆடைகள், தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, கடலுணவு |
| யப்பான் | 71.0 | 87.6 | 23.4 | 1.6 | தேயிலை, இரசாயன உற்பத்திகள், தெங்கு உள்ளீடற்ற உற்பத்திகள், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, கடலுணவு |
| துருக்கி | 80.3 | 74.1 | -7.7 | 1.4 | தேயிலை, இறப்பர் உற்பத்திகள், இரசாயன உற்பத்திகள், ஆடைகள், தெங்கு உள்ளீடற்ற உற்பத்திகள் |
| ஏனைய முன்னுரிமைகளில் பொதுவாக்கப்பட்ட முறைமை | 54.6 | 66.1 | 21.1 | 1.2 | |
| 2000 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட இந்தியா-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை | 358.4 | 525.8 | 46.7 | 9.9 | விலங்குத் தீனி, உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, வாசனைப் பொருட்கள், சிறு வேளாண்மை ஏற்றுமதிகள், மர மற்றும் காகித உற்பத்திகள் |
| 1975 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆசிய-பசுபிக் வர்த்தக உடன்படிக்கை (உ) | 204.7 | 238.6 | 16.6 | 4.5 | ஆடைகள், தேயிலை, தெங்கு உள்ளீடற்ற உற்பத்திகள், இரசாயன உற்பத்திகள், இறப்பர் உற்பத்திகள் |
| 1989 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட வர்த்தக முன்னுரிமைகளுக்கான உலகளாவிய முறைமை | 89.5 | 91.8 | 2.5 | 1.7 | வாசனைப் பொருட்கள், அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள், தெங்கு உள்ளீட்டு/ உள்ளீடற்ற உற்பத்திகள், விலங்குத் தீனி, இறப்பர் உற்பத்திகள் |
| 2005 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட பாகிஸ்தான்-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை | 53.0 | 62.3 | 17.6 | 1.2 | சிறு வேளாண்மை ஏற்றுமதிகள், தெங்கு உள்ளீட்டு/ உள்ளீடற்ற உற்பத்திகள், இயற்கை இறப்பர், பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் |
| 2006 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட தெற்காசியா சுதந்திர வர்த்தக பிரதேசம் | 42.2 | 101.6 | 140.6 | 1.9 | வாசனைப் பொருட்கள், தெங்கு உள்ளீட்டு/ உள்ளீடற்ற உற்பத்திகள், அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள், புடவைகள், தேயிலை |
| 1995 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட சார்க் முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கை | 0.8 | 1.4 | 83.6 | 0.03 | இறப்பர் உற்பத்திகள், இரசாயன உற்பத்திகள், தேயிலை, உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, புடவைகள் |
| **முன்னுரிமை உடன்படிக்கையின் கீழான மொத்த ஏற்றுமதிகள்** | **4,420.4** | **5,334.3** | **20.7** | **100.0** | |
| **இலங்கையினுடைய மொத்த வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் பங்காக** | **44.0** | **42.7** | | | |

(அ) தற்காலிகமானது
(ஆ) ஐரோப்பிய ஒன்றியத்திற்கான பொருட்களின் இறக்குமதிகள் மீதான தீர்வைகள் 66 வீதமானவைக்கு ஐரோப்பிய ஒன்றிய ஜீ.எஸ்.பீ. முன்னுரிமையான நுழைவை வழங்கும் அதே வேளையில் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான பொருட்களின் இறக்குமதிகள் மீதான அதே தீர்வைகளிற்குப் பூச்சிய தீர்வை நுழைவை ஜீ.எஸ்.பீ. + வழங்குகிறது.
(இ) ஐக்கிய அமெரிக்கா ஜீ.எஸ்.பீ. 31.12.2020 அன்று காலாவதியானதிலிருந்து ஜீஎஸ்பீ தகைமைபெற்ற ஏற்றுமதிகளை காண்பிப்பதுடன் பின்னோக்கிய அடிப்படையுடன் மீள புதுப்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.
(ஈ) ருசியா, பெலாறுஸ் மற்றும் கசகஸ்தான் உள்ளடங்கலாக
(உ) முன்னர் பாங்கொக் உடன்படிக்கை (1975) என அழைக்கப்பட்டது

மூலங்கள்: இலங்கை வர்த்தகத் திணைக்களம்
இலங்கை சுங்கம்

கொண்ட காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக, ரஷ்ய சம்மேளனம், துருக்கி, அவுஸ்திரேலியா, கனடா, சுவிர்சர்லாந்து, நோர்வே மற்றும் நியூசிலாந்து போன்ற ஏனைய பல நாடுகளுக்கான ஏற்றுமதிகள் ஒப்பீட்டளவில் குறைவாகக் காணப்படுகின்ற போதிலும் அந்நாடுகளால் வழங்கப்படும் ஜிஎஸ்பி திட்டங்களிலிருந்து இலங்கை தொடர்ந்தும் நன்மையடைந்தது. 2021ஆம் ஆண்டில் இருதரப்பு சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ், இந்தியா-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை மற்றும் பாகிஸ்தான்-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை என்பன தொடர்ந்தும் இலங்கைக்கு நன்மையளித்து, சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழான ஏற்றுமதிகளின் அதிகரிப்புக்குப் பங்களித்தன. இந்தியா மற்றும் பாகிஸ்தான் நாடுகளுடனான சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் ஊடான ஏற்றுமதிகள், 2021ஆம் ஆண்டில் இந்நாடுகளுக்கான மொத்த ஏற்றுமதியின் ஏறத்தாழ 65 சதவீதமாக உயர்வாகக் காணப்பட்டன. அதேவேளை, இந்தியா-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை மற்றும் பாகிஸ்தான்-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை என்பவற்றின் கீழான இறக்குமதிகளின் பங்கு இந்தியாவிடமிருந்தும் பாகிஸ்தானிடமிருந்துமான மொத்த இறக்குமதிகளின் முறையே 5 சதவீதத்திற்கும் (ஐ.அ.டொலர் 209 மில்லியன்) மற்றும் 3 சதவீதத்திற்கும் (ஐ.அ.டொலர் 12 மில்லியன்) கீழேயே காணப்பட்டன. பிராந்திய வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ்வருகின்ற ஆசிய பசுபிக் உடன்படிக்கைகள் (சீனா, தென்கொரியா மற்றும் வங்களாதேசம் நாடுகளுக்கான உயர்வான ஏற்றுமதிகள் காரணமாக) மற்றும் உலகளாவிய வர்த்தக முன்னுரிமை முறைமை (மெக்சிக்கோவிற்கான உயர்வான கறுவா ஏற்றுமதிகள் காரணமாக) என்பவற்றின் கீழான ஏற்றுமதிகள், 2021 காலப்பகுதியில் மேம்பட்டன. 2020 செத்தெம்பரில் ஆசிய பசுபிக் உடன்படிக்கையின் ஏழாவது உறுப்பு நாடாக மொங்கோலியா இணைந்துகொண்டதுடன் இலங்கை உள்ளடங்கலாக ஏனைய பங்கேற்கின்ற நாடுகள் 2021 சனவரி 1 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் மொங்கோலியாவுடன் வரிச்சலுகைகளை எதிரீடான அடிப்படையில் பரிமாற்றம் செய்துகொண்டன. 2021 காலப்பகுதியில் சார்க் முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கை கீழான ஏற்றுமதிகள் குறைவான மட்டத்தில் காணப்பட்ட அதேவேளை தெற்காசிய சுதந்திர வர்த்தக பிரதேசத்தின் கீழான ஏற்றுமதிகள் மேம்பட்டன. உலக வர்த்தக அமைப்புடனான இலங்கையின் பல்தரப்பு வர்த்தக ஈடுபாடு 2021இல் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டது. சீனா, ஜப்பான், இந்தோனேசியா மற்றும் வங்காளதேசம் போன்ற எதிர்கால வாய்ப்புக்களைக் கொண்ட வர்த்தகப் பங்காளர்களுடன் முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கைகள் பற்றி கலந்துரையாடுவதற்கும் உடன்படிக்கைகளுக்கு கைச்சாத்திடுவதற்குமான பணி முன்னெடுக்கப்படுவதுடன் 2021 காலப்பகுதியில் சிங்கப்பூர்-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் மீளாய்வுச் செயன்முறையும் முன்னெடுக்கப்பட்டது. அதேவேளை ஏற்றுமதி சந்தையினை விரிவடையச்செய்து பன்முகப்படுத்துவதற்கு பிராந்திய அனைத்தையுமுள்ளடக்கிய பொருளாதாரப் பங்குடமை போன்ற வேறு பிராந்திய வர்த்தக உடன்படிக்கைகளுடன் இணைந்துகொள்வதற்கான சாத்தியப்பாட்டையும் இலங்கை கண்டறியலாம்.

### 5.2.2 பணிகள் கணக்கு

**பணிகள் கணக்கின் மிகை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றைப் பதிவுசெய்திருப்பினும் உலகளாவிய நோய்த்தொற்றுக்கும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கும் முந்திய மட்டங்களை விடவும் குறைவாகக் காணப்பட்டது.** கணனி சார்ந்த பணிகளிலிருந்தான ஆரோக்கியமான வளர்ச்சி, சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள் படிப்படியாக மேம்பட்டமை அத்துடன் கடல் மற்றும் வான் போக்குவரத்துப் பணிகள் தொடர்புபட்ட சரக்கனுப்பல் பணிகளில் மேம்பாடுகள் இதற்கு முக்கிய காரணங்களாக அமைந்தன. இதன்விளைவாக, பணிகள் கணக்கின் மிகைகள் 2020ஆம் ஆண்டின் ஐ.அ.டொலர் 0.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 1.6 பில்லியனுக்கு வகைகூறின.

#### பயணம் மற்றும் சுற்றுலா

**கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட சுற்றுலாத்துறை, பாதுகாப்பாக பயணிப்பதற்கான அமைவிடமாக இலங்கை பற்றிய மேம்பட்ட உலகளாவிய எண்ணப்பாங்குடன் இணைந்து தொடர்புடைய அதிகாரிகளினால் எடுக்கப்பட்ட காத்திரமான வழிமுறைகளினால் உதவியளிக்கப்பட்டு 2021ஆம் ஆண்டின் பிந்திய பகுதியில் உறுதியான மீட்சியொன்றை அவதானித்தது.** 2021 சனவரியில் வெளிநாட்டுப் பயணிகளுக்காக நாடு திறக்கப்பட்டதிலிருந்து அவ்வப்போதான முடக்கல்களுக்கு மத்தியிலும் பன்னாட்டு பயணிகளின் வருகைகளில் நிலையான அதிகரிப்பொன்றை இலங்கை கண்ணுற்றது. செயல்திறன்மிக்கது என உறுதிப்படுத்தப்பட்ட ஆரோக்கியமானது பாதுகாப்பானதுமான நெறிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கு சுற்றுலாத்துறையை இது இயலச்செய்தது. நோய்த்தொற்றின் மூன்றாம் அலையின் அவசரநிலையின் காரணமாக 2021 ஏப்பிறலில் தற்காலிக கட்டுப்படுத்தலினைத் தொடர்ந்து இலங்கை 2021 யூலையில் தனிமைப்படுத்தலற்ற நுழைவுடன் முழுமையாக தடுப்புமருந்தை பெற்றுக்கொண்ட பயணிகளுக்காக திறக்கப்பட்டது. வெற்றிகரமான உள்நாட்டு தடுப்புமருந்தேற்றல் நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்து இவ்வழிமுறைகளின் விளைவாக பன்னாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2021 செத்தெம்பர் தொடக்கம் உறுதியாக அதிகரித்து, 2021 திசெம்பரில் 89,506 வருகைகளுடன் உச்சத்தை எட்டியது. சுற்றுலாத்துறையினை மீட்டெடுப்பதற்கான ஆதரவளித்தலில் அனைத்து சுற்றுலா தொழில்முயற்சிகள் மற்றும் சுற்றுலாப் பணிகளுக்குமான சுகாதார மற்றும் பாதுகாப்பு ஒழுங்குவிதிகளைக் குறித்துரைக்கின்ற நடத்தைக் கோவைகளைத்

திருத்துதல் மற்றும் சுகாதார மற்றும் பாதுகாப்பு வழிகாட்டல்களை தரமுயர்த்துதல் போன்ற பல்வேறு வழிமுறைகளை அதிகாரிகள் நடைமுறைப்படுத்தினர். 2019இலிருந்து சுற்றுலாத்துறை அனுபவித்த பின்னடைவுகளிலிருந்து மீட்சியடைவதற்கு இயலுமாகவிருந்த காலம் வரையில், இத்துறையானது நிதியியல் துறைக்கு செலுத்தத்தக்க அதன் படுகடன் மீதான நீடித்த கடன் சட்டஇசைவுத்தாமதத்தினையும் வழங்கியது. சுற்றுலாப்பயணிகளின் வருகைகள் 2020ஆம் ஆண்டின் 507,704 உடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் 194,495 ஆக 61.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதில் 507,311 வருகைகள் 2020ஆம் ஆண்டின் முதல் மூன்றுமாத காலப்பகுதியில் பதிவாகியிருந்தன. புவிசார் அரசியல் பதற்றங்களால் தோற்றுவிக்கப்பட்ட உலகளாவிய சுற்றுலாத்துறைக்கான இடையூறுகளுக்கு மத்தியில் சுற்றுலாப்பயணி வருகைகளில் உறுதியான அதிகரிப்பானது 2022ஆம் ஆண்டின் ஆரம்பப்பகுதியில் தொடர்ந்தது.

**சுற்றுலாப்பயணிகளின் வருகைகளுக்கான ஆதிக்கம் செலுத்துகின்ற பிராந்தியமாக ஐரோப்பிய ஒன்றியம் விளங்கிய அதேவேளை சுற்றுலாப்பயணிகளின் வருகைக்கான தனியொரு நாடாக இந்தியா ஆதிக்கம் செலுத்தியது.** ஐரோப்பாவிலிருந்து ஏறத்தாழ 93,496 வருகைகள் பதிவாகி மொத்த சுற்றுலாப் பயணிகள் வருகைகளில் 48 சதவீதத்திற்கு வகைகூறியது. ஆசிய பசுபிக் பிராந்தியமானது சீனாவிலிருந்து பயணிகள் வருகைதராமைக்கு மத்தியிலும் 83,926 சுற்றுலாப்பயணிகளுடன் 2021ஆம் ஆண்டில் இரண்டாவது கூடிய வருகைகளைப் பதிவுசெய்து மொத்த சுற்றுலாப்பயணிகளின் வருகைகளின் 43.2 சதவீதத்திற்கு வகைகூறியது. 2021 காலப்பகுதியில் தனிப்பட்ட நாடுகள் அடிப்படையிலான சுற்றுலாப்பயணி வருகை நியதிகளில் இந்தியா

5


அட்டவணை 5.8
சுற்றுலாத் துறையின் செயலாற்றம்

| | 2017 | 2018 | 2019 | 2020 | 2021(அ) | ஆண்டுக்காண்டு மாற்றம் (%) 2021 |
|---|---|---|---|---|---|---|
| சுற்றுலா பயணிகளின் வருகைகள் (எண்ணிக்கை) | 2,116,407 | 2,333,796 | 1,913,702 | 507,704 | 194,495 | -61.7 |
| வருகையின் நோக்கத்தின் அடிப்படையில் | | | | | | |
| பொழுதுபோக்கு | 1,744,149 | 1,979,819 | 1,592,212 | 444,328 | 157,766 | -64.5 |
| வியாபாரம் | 70,683 | 71,255 | 70,068 | 13,946 | 3,956 | -71.6 |
| ஏனையவை | 301,575 | 282,722 | 251,422 | 49,430 | 32,773 | -33.7 |
| சுற்றுலா விருந்தாளிகளின் இரவுகள் ('000) | 23,068 | 25,205 | 19,902 | 4,315 | 2,937 | -31.9 |
| தங்கும் அறை குடியிருப்பு வீதம் (%) | 73.3 | 72.8 | 57.1 | 15.0 | 18.6 | 24.3 |
| மொத்தச் சுற்றுலா பெறுகைகள் (ரூ.மில்லியன்) | 598,143 | 711,961 | 646,362 | 124,189 | 101,903 | -17.9 |
| தலைக்குரிய சுற்றுலா பெறுகைகள் (ரூ) | 282,622 | 305,066 | 337,755 | 244,609 | 523,936 | 114.2 |
| மொத்த தொழில்நிலை (எண்ணிக்கை) (ஆ) | 359,215 | 388,487 | 402,607 | 347,751 | 357,927 | 2.9 |
| நேரடி தொழில்நிலை | 156,369 | 169,003 | 173,592 | 175,990 | 177,476 | 0.8 |
| மறைமுக தொழில்நிலை | 202,846 | 219,484 | 229,015 | 171,761 | 180,451 | 5.1 |

(அ) தற்காலிகமானது
(ஆ) மதிப்பீடுகள்

*மூலங்கள் :* இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை
இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 5.10
சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் மற்றும் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள்



*மூலம் :* இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை

56,268 வருகைகளுடன் முன்னிலை வகித்து அதனைத் தொடர்ந்து ரஷ்யா, ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி மற்றும் பாகிஸ்தான் என்பன இடம்பிடித்தன. 2021 ஒகத்து பிந்திய பகுதியில் இலங்கை முழுமையாக தடுப்பு மருந்துபெற்றுக்கொண்ட பயணிகளுக்கு அதன் எல்லைகளைத் திறந்து இந்தியாவில் அதன் சுற்றுலாப்பிரச்சாரத்தை மீளத்தொடங்கியது. ரஷ்யாவிலிருந்து ஒப்பந்த அடிப்படையிலான விமான பயணங்களை இலக்கு வைத்து இடம்பெற்ற சுற்றுலா நிகழ்ச்சித்திட்டங்களின் ஊக்குவிப்பு காரணமாக 2021ஆம் ஆண்டில் இரண்டாவது பாரிய சுற்றுலாப்பயணிகள் வருகின்ற நாடாக ஐக்கிய இராச்சியத்தினை ரஷ்யா முந்திச் சென்றது. மரபுசார்ந்த மற்றும் மரபுசாரா சந்தைகள் இரண்டிலுமிருந்தும் சுற்றுலாப்பயணிகளைக் கவருவதற்கான வழிகளாக கிரமமான பயணவழிகள் மற்றும் பருவகால ஒப்பந்த அடிப்படையிலான விமான பயணத்தொழிற்பாடுகள் ஊடாக அதிகரிக்கப்பட்ட தொடர்புகை என்பன ஊக்குவிக்கப்படலாம் என்பதை இது எடுத்துக்காட்டுகின்றது. 2021ஆம் ஆண்டில் இலங்கையின் மொத்த சுற்றுலாப்பயணி வருகைகளின் 56.4 சதவீதத்திற்கு முதல் 5 சுற்றுலாப்பயணிகள் வருகின்ற நாடுகளே வகைகூறின.

**சுற்றுலாப்பயணி ஒருவருக்கான சராசரி செலவிடல் மற்றும் தங்குகின்ற காலம் இரண்டிலும் அதிகரிப்பொன்று காணப்படுகின்ற வேளையில் குறைவடைந்த சுற்றுலாப்பயணி வருகைகளின் விளைவாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள் மிதமடைந்தன.** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் 2021இற்கான சுற்றுலாப்பயணி செலவிடல் மற்றும் தங்கும் காலம் பற்றிய திருத்தப்பட்ட மதிப்பீடுகளின் பிரகாரம், சுற்றுலாப்பயணி ஒருவருக்கான சராசரி செலவிடல் 2020ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு ஐ.அ.டொலர் 158.1இலிருந்து 2021ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு ஐ.அ.டொலர் 172.6 ஆக உயர்வடைந்தது. மேலும், சுற்றுலாப் பயணி ஒருவரின் சராசரி தங்கும் காலமானது 2020ஆம் ஆண்டின் 8.5 நாட்களுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் 15.1 நாட்களாக இருக்குமென மதிப்பிடப்பட்டு,

சிறப்புக்குறிப்பு 5

## இலங்கையில் உலகளாவிய நோய்த்தொற்றிற்குப் பின்னரான மீட்சிக் காலப்பகுதியில் சுற்றுலாத்துறையின் வகிபாகம்

### அறிமுகம்

ஐக்கிய நாடுகளின் உலக சுற்றுலா அமைப்பினால் சுற்றுலாத்துறை என்பது "தனியாள் அல்லது வியாபார/தொழில்சார் நிபுணத்துவ நோக்கங்களுக்காக மக்கள் நாடுகளுக்கு அல்லது தமது வழக்கமான சூழலுக்கு வெளியில் அமைந்துள்ள இடங்களுக்கு நகர்வதனை உள்ளடக்கின்ற ஒரு சமூக, கலாசார மற்றும் பொருளாதார நிகழ்வு" என வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது. பன்னாட்டுச் சுற்றுலாத்துறை (இதனகத்துப் பின்னர் "சுற்றுலாத்துறை எனக் குறிப்பிடப்படும்) என்பது அடிப்படையில் பணிகளின் ஏற்றுமதியாகும். சுற்றுலாத்துறை வருவாய்கள் மற்றும் செலவினம் என்பன சென்மதி நிலுவையின் (சென்மதி நிலுவை மற்றும் பன்னாட்டு முதலீட்டு நிலைமைக் கையேடு -பன்னாட்டு நாணய நிதியத்தின் சென்மதி நிலுவைக் கையேடு 6) பொருட்கள் மற்றும் பணிகள் கணக்கில் "பணிகளின்" கீழ் "பயணம்" எனப் பதியப்படுகின்றன. உள்ளீட்டுக் கணக்கின் மீதான வெளிநாட்டு நாணய வெளிப்பாய்ச்சல்கள் குறைந்தளவில் காணப்படுகின்றமையினால் ஒரு நாட்டிற்கான தேறிய வெளிநாட்டு நாணய வருவாய்களின் முக்கிய மூலமொன்றாக சுற்றுலாத்துறை திகழ்கின்றது. வெளிநாட்டு நாணய வருவாயீட்டலுக்கு மேலதிகமாக சுற்றுலாத் துறையானது பொருளாதார வளர்ச்சி, தொழில்வாய்ப்பு மற்றும் பிராந்திய வருமான ஏற்றத்தாழ்வில் குறைப்பு என்பவற்றிற்கும் பங்களிக்கிறது. அமைதியான, தூய்மையான, பாதுகாப்பான மற்றும் வெளிநாட்டினருக்கு இசைவான சூழல் என்பவற்றுடன்கூடிய இலங்கையின் மூலோபாய அமைவிடம், கவர்ச்சிகரமான இயற்கை வளங்கள், கலாசார பன்முகத்தன்மை மற்றும் வளமான வரலாறு ஆகியன இக்கைத்தொழில் செழிப்படைவதற்கான அடிப்படையை வழங்குகின்றன. ஆதலால், சுற்றுலாத் துறையின் அபிவிருத்தியானது குறிப்பாக உலகளாவிய நோய்த்தொற்றிற்குப் பின்னைய பொருளாதார மீட்சிக் காலப்பகுதியில் நாட்டில் வெளிநாட்டுத் துறைச் சமமின்மைகளைத் தணிப்பதற்கான முக்கிய பொருளாதார முன்னுரிமையாக அமையும்.

### தற்காலத்தில் பொருளாதாரத்திற்குச் சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்களின் முக்கியத்துவம்

2014 மற்றும் 2019இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் வெளிநாட்டு நாணய வருவாய்களின் மூன்றாவது மிகப்பெரும் மூலமாக சுற்றுலாத்துறை காணப்பட்டதுடன் இக்காலப்பகுதியில் மொத்த வெளிநாட்டு நாணய வருவாய்களின் ஏறத்தாழ 14 சதவீதத்திற்குப் பங்களித்தது. வெளிநாட்டு நாணய வருவாய்களின் மிகப்பெரும் மூலமாக விளங்குகின்ற ஏற்றுமதி வருவாய்கள் 2010இல் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 8,626 மில்லியனிலிருந்து 2021இல் ஐ.அ.டொலர் 12,499 மில்லியனிற்கு வளர்ச்சியடைந்த போதிலும், அத்தகைய ஏற்றுமதிகளின் ஊடாக வருவாய்களை உருவாக்குவதானது உள்ளீடுகள் மீதான கணிசமான அளவிலானதொரு இறக்குமதிச் செலவினத்தினைத் தேவைப்படுத்தியது. எனினும், தனியானதொரு கைத்தொழிலாக சுற்றுலாத்துறையானது உள்ளீட்டு இறக்குமதிகள் மீதான ஒப்பீட்டளவிலான தாழ்ந்த தங்கியிருக்கும் தன்மையுடன் கணிசமானளவிலான வருவாய்களை உருவாக்கும் இயலுமையைக் கொண்டிருக்கிறது. உதாரணமாக, இலங்கையில் சுற்றுலாத்துறையின் உச்ச ஆண்டில் அதாவது 2018இல் சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 4,381 மில்லியன் என மதிப்பிடப்பட்டு, ஆடைக் கைத்தொழிலின் தேறிய ஏற்றுமதி வருவாய்கள் அதாவது, புடவைகள் மீதான இறக்குமதிச் செலவினம் நீங்கலாக ஏற்றுமதி வருவாய்கள் (ஐ.அ.டொலர் 2,459 மில்லியன்) மற்றும் தேயிலை (ஐ.அ.டொலர் 1,428 மில்லியன்) மற்றும் இறப்பர் உற்பத்திகள் (ஐ.அ.டொலர் 875 மில்லியன்) போன்ற ஏனைய முக்கிய கைத்தொழில்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் என்பவற்றினை விஞ்சிக் காணப்பட்டன. அதேவேளை, வெளிநாட்டு நாணய வருவாய்களின் இரண்டாவது மிகப்பெரும் மூலமாக விளங்குகின்ற தொழிலாளர் பணவனுப்பல்கள் 2014 மற்றும் 2019இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் ஆண்டு சராசரியில் ஐ.அ.டொலர் 7,023 மில்லியன் கொண்ட சராசரியொன்றினைக் காட்டிய போதிலும் 2021இல் ஐ.அ.டொலர் 5,491 மில்லியனிற்கு வீழ்ச்சியடைந்தன. ஆதலால், சுற்றுலாத்துறையானது இலங்கைக்கான வெளிநாட்டு நாணய வருவாய்களின் முக்கிய மூலமொன்றாகக் காணப்படுவதுடன் வெளிநாட்டுத்துறை அழுத்தங்களுக்கு நாட்டின் தங்கியிருக்கும் தன்மையினைப் பேணுவதற்கான முக்கிய வகிபாகத்தினையும் கொண்டுள்ளது.

### சுற்றுலாத் துறையின் ஆற்றல்வாய்ந்த தன்மை

உலகளாவிய சுற்றுலாத்துறையானது உலகளாவிய நிதி நெருக்கடி மற்றும் தொற்றுநோய்களின் பரவல் போன்ற நிகழ்வுகளினால் காலத்திற்குக் காலம் பின்னடைவுகளைச் சந்தித்த போதிலும் அண்மைய தசாப்தங்களில் வலுவான வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது. ஐக்கிய நாடுகளின் உலக சுற்றுலா அமைப்பின் பிரகாரம் 2019இல் உலகில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 1,468 மில்லியனை அண்மித்தன. இலங்கையும் உள்நாட்டு யுத்தம் முடிவடைந்த 2010இலிருந்து கணிசமான அதிகரிப்பொன்றுடன் கடந்த 2018 வரையிலான காலப்பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகளில் தொடர்ச்சியானதொரு அதிகரிப்பினைக் கண்டுள்ளது. 2018இல் புகழ்பெற்ற சுற்றுலாத்துறைத் தகவல் வழங்குநரான "லோன்லி பிளனட்" இனால் 2019ஆம் ஆண்டிற்கான சிறந்த நாடாக இலங்கை பெயரிடப்பட்டிருந்தது. எனினும், துரதிஷ்டவசமாக 2019 ஏப்பிறலில் உயிர்த்த ஞாயிறன்று மேற்கொள்ளப்பட்ட தீவிரவாதத் தாக்குதல்களின் காரணமாக 2019இல் சுற்றுலாப் பயணிகளின் வருகைகளில் பின்னடைவொன்றினைக் கண்ட போதிலும், உலகளாவிய சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் அவ்வாண்டு காலப்பகுதியில் வரலாற்றில் உயர்ந்தளவிலான எண்ணிக்கைகளைப் பதிவுசெய்து சாதனையை எட்டியது. இப்பின்னடைவுக்கு மத்தியிலும், சுற்றுலாப் பயணிகளின் வருகைகளும் வருவாய்களும் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக மீண்டும் வீழ்ச்சியடைய ஆரம்பிப்பதற்கு முன்னர் 2019இன் இறுதியளவில் மற்றும் 2020இன் முன்னைய காலப்பகுதியில் மீட்சியொன்றினைக் காண்பித்தன. அதேவேளை உலகளாவிய சுற்றுலாத்துறையானது எதிர்வரும் ஆண்டு காலப்பகுதியில் மெதுவானதொரு மீட்சியினைப் பதிவுசெய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது. 2022 சனவரியில் ஐக்கிய நாடுகளின் உலக சுற்றுலா அமைப்பினால் அதன் சுற்றுலாத்துறை நிபுணர்கள் குழாமினுள் மேற்கொள்ளப்பட்ட அளவீட்டின் பிரகாரம், பதிலிறுப்பாளர்களில் 63 சதவீதமானோர் தமது நாடுகளில் பன்னாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2024 வரை 2019இன் மட்டத்திற்கு மீட்சியடையாது என எதிர்பார்த்த வேளையில், பதிலிறுப்பாளர்களில் 79

5

சதவீதமானோர் ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் பயணிகளின் வருகைகள் 2024 வரை 2019இன் மட்டங்களுக்கு மீட்சியடையாது என நம்பினர். எனினும், ஐக்கிய நாடுகளின் உலக சுற்றுலா அமைப்பு, உலக பயண மற்றும் சுற்றுலாத்துறைச் சபை மற்றும் சந்தைப் பகுப்பாய்வாளர்கள் கணிசமானளவு உயர்வடைந்த சேமிப்புக்களும் ஆற்றல்வாய்ந்த பயணர்களுக்கு மத்தியில் பயணிப்பதற்கான அவாவொன்றும் காணப்படுவதாகக் காண்பித்துள்ள வேளையில், சுற்றுலாத்துறைசார் சிறப்பியல்புகள் உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக அடிப்படையிலேயே மாற்றமடைந்துள்ளன. ஆதலால், பொருத்தமான உபாயங்கள் வினைத்திறனுடனும் செயல்திறன்வாய்ந்த விதத்திலும் நடைமுறைப்படுத்தப்படுமேயானால், 2022 மற்றும் 2023ஆம் ஆண்டு காலப்பகுதியிலும்கூட, கணிசமான எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்கு மற்றும்/அல்லது சுற்றுலாத்துறையிலிருந்து கணிசமானளவிலான வெளிநாட்டு நாணய வருவாய்களை உருவாக்குவதற்கான ஆற்றல்வாய்ந்த தன்மை இலங்கைக்குக் காணப்படுகிறது.

### "புதிய இயல்பு நிலை" யுகத்தில் உலகளாவிய நோய்த்தொற்றும் சுற்றுலாத்துறைப் பதிலிறுப்பும்

சுற்றுலாத்துறையை ஆதரிப்பதன் முக்கியத்துவத்தினை அடையாளங்கண்டு அரசாங்கமும் மத்திய வங்கியும் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் படுகடன் சட்ட இசைவுத்தாமதம், சலுகைக் கடன் திட்டங்கள், கட்டணத் தளர்த்தல்கள், மின்பட்டியல்கள் மீதான சலுகை, ஒரே தடவையிலான மானியங்கள் மற்றும் வரிச் சலுகை வழிமுறைகள் போன்ற ஏராளமான நிவாரண வழிமுறைகளை வழங்கின. அதேவேளை, சுற்றுலாத்துறை தொடர்பில் நாட்டிற்கான வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சலினை நிச்சயப்படுத்தும் விதத்தில், சுற்றுலா விடுதிப் பணி வழங்குநர்கள் வதிவற்றோரிடமிருந்தான கொடுப்பனவுகளை வெளிநாட்டு நாணயங்களில் மாத்திரம் ஏற்பதனைத் தேவைப்படுத்துகின்ற விதிமுறைகள் 2022 சனவரியில் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விடுக்கப்பட்டன. துறையானது ரூபாய்களிலும் வெளிநாட்டு நாணயங்களிலும் அதிகளவிலான முதலீடுகளை மேற்கொண்டுள்ளமையினால் பாரியளவிலான மூலதன முதலீடுகளின்றி வெளிநாட்டு நாணயத்தில் அதன் வருவாய்களைச் சுற்றுலாத்துறை வலுப்படுத்துவதனையும் இது அனுமதிக்கிறது. அதேவேளை, துறையானது ஒட்டுமொத்தமாக கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக குறிப்பிடத்தக்க பின்னடைவொன்றினை எதிர்கொண்ட போது சில சிறிய அளவிலான சுற்றுலா விடுதிகள் தனிமைப்படுத்தல் மையங்களாக வாடகைக்குக்கொடுக்கப்பட்டு செயற்பாடுகளைத் தொடர்ந்தன.

"புதிய இயல்பு நிலை" இன் பல்வேறு புதிய பண்புகளை அல்லது உலகளாவிய சுற்றுலாத்துறையில் பின்பற்றப்பட வேண்டிய தற்போதைய போக்குகளை உலக பயண மற்றும் சுற்றுலா சபையானது எடுத்துக்காட்டியுள்ளது (பயணத்தின் போக்குகள் - 2021இல் மற்றும் அதற்கப்பால், பயணத்திலும் சுற்றுலாத்துறையிலும் தோற்றம்பெற்றுவரும் நுகர்வோர் போக்குகள், 2021 நவெம்பர்). உதாரணமாக, பயணிகள் முற்கூட்டியே முற்பதிவுகளை மேற்கொள்வதில் சந்தேகம் கொண்டுள்ளமைக்கு நாடுகள் விதித்துள்ள கட்டுப்பாடுகளில் ஏற்படும் திடீர் மாற்றங்கள் மற்றும் கொவிட்-19 நோய்த்தொற்றிற்குள்ளாகும் இடர்நேர்வுகள் என்பன காரணமாயமைகின்றன. மேலும், பயணிகள் அபராதமின்றி திடீரென இரத்து செய்ய அனுமதிக்கின்ற தங்குமிட மற்றும் போக்குவரத்துத் தெரிவுகளை விரும்புகின்றனர். இரண்டாவதாக, உலகளாவிய நோய்த்தொற்றுக் காலத்தில் தொலைவில் பணிபுரிவதனை இயல்புநிலைக்குட்படுத்துவதன் காரணமாக, "இலத்திரனியல் நாடோடிகள்" மற்றும் "ஸ்ரேகோஷன்" போன்ற எண்ணக்கருக்கள் பிரபல்யமடைந்துள்ளதுடன் பயணிகள் நீண்ட கால வீசாக்கள், தங்குமிடங்களில் நீண்ட கால கழிவுகள், விரைவான இணையத்தள மற்றும் ஏனைய பணியுடன் தொடர்புடைய வசதிகள் போன்றவற்றினை நாடுகின்றனர். 2021இல் தங்கியிருக்கும் காலமும் சுற்றுலாவொன்றிற்கான செலவிடலும் அதிகரித்துள்ளதாகப் பன்னாட்டுச் சுற்றுலாத்துறை அமைப்புக்கள் மேலும் குறிப்பிடுகின்றன. மூன்றாவதாக, சுகாதார கரிசனைகள் காரணமாக வயது முதிர்ந்தவர்கள் அல்லது சிறு குழந்தைகளைக் கொண்ட குடும்பங்களைக் காட்டிலும் அதிகளவிலான இள வயது பயணிகள் (அவர்களது 20 தொடக்கம் 40 வயது வரை) பயணங்களைத் தெரிவுசெய்வதுடன் பயணிகளின் போக்கு மாற்றமடைந்துள்ளது. ஆதலால், சுற்றுலாத்துறை மற்றும் நாடு முழுதளவில் இத்தகைய சுற்றுலாப் பயணிகளின் தேவைகளுக்கும் விருப்பிற்கும் ஏற்ப இசைந்துசெல்வதற்குரிய இயலளவினைக் கொண்டிருத்தல் வேண்டும். இவ்வயதுக் குழுவினர் சாகசத்தையும் தனித்துவத்தையும் பெறுமதியாகக் கருதுவதுடன் அவர்கள் சுற்றுலாப் பயணங்களைத் திட்டமிடுவதற்கும் முற்பதிவுகளை மேற்கொள்வதற்கும் செல்லிடத் தொலைபேசிகளையும் இலத்திரனியல் பணிகளையும் பயன்படுத்துவதுடன் சமூக ஊடகங்கள், வலைப்பதிவுகள் மற்றும் மற்றைய பயணிகளின் இணையவழி மீளாய்வுகள் என்பவற்றில் தங்கியுள்ளனர். நான்காவதாக, உளநலம் மற்றும் தனியாள் ஆரோக்கியம் போன்றவற்றைப் பாராட்டுதல் அண்மைய கடந்த காலங்களில் குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளதுடன் பயணிப்பதன் ஊடாக இத்தேவைகளை அடைந்துகொள்வதிலுள்ள நுகர்வோர் ஆர்வமும் அதிகரித்துள்ளது. சுற்றுலாப் பயணிகள் தம்மைப் பரோபகார நடவடிக்கைகளில் ஈடுபடுத்திக்கொள்ள முடியுமான "பரோபாகாரச் சுற்றுலா" மற்றும் உலகெங்கிலுமுள்ள சூழலியல்சார் மையங்கள் தொடர்பிலான அறிவைப் பெறுவதற்குரிய "சூழல்நேய சுற்றுலா" என்பவற்றிற்கான ஆர்வமொன்றும் காணப்படுகின்றது. ஐந்தாவது, முக்கியமான சுற்றுலாத்துறைத் தளங்களுக்கும் மற்றும் கிராமப்புற சுற்றுலாத்துறை இடங்களுக்கு அண்மையிலுள்ள அதிகளவு அறியப்படாத இடங்களைக் கண்டறியும் இரண்டாந்தர சுற்றுலாப் பயணங்களை மேற்கொள்ளும் போக்கும் அதிகரித்துள்ளது.

### இலங்கைச் சுற்றுலாத்துறை: முன்னோக்கிய பார்வை

சுற்றுலாத்துறை அமைச்சும் அதன் அதிகாரத்திற்குட்பட்ட நிறுவனங்களும் தனியார் துறையுடன் இணைந்து நாட்டின் சுற்றுலாத்துறை உட்கட்டமைப்பினை அபிவிருத்தி செய்வதற்கும் இலக்குச் சந்தைகளில் இலங்கையை ஊக்குவிப்பதற்குமான பெருமளவிலான வழிமுறைகளை வகுத்து நடைமுறைப்படுத்தி வருகின்றன. இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையினால் அபிவிருத்திசெய்யப்பட்ட சுற்றுலாத்துறை மூலோபாய செயற்றிட்டம் 2022-2025ஆனது துறையினைத் தரமுயர்த்துவதற்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குமான நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கான காத்திரமான வழிகாட்டலை வழங்குகிறது. அனைத்தையுமுள்ளடக்கிய சுற்றுலாத்துறைக் கொள்கையொன்று சுற்றுலாத்துறை அமைச்சினால் வரையப்பட்டுள்ளதுடன் அமைச்சரவை ஒப்புதலுக்காகக் காத்திருக்கிறது. எனினும், கொள்கை

5

அபிவிருத்தியிலும் மூலோபாயங்களை நடைமுறைப்படுத்துவதிலும் உள்ள முக்கியத்துவத்தினைத் தேவைப்படுத்துகின்ற சில அம்சங்கள் காணப்படுகின்றன:

**(i) சுற்றுலாத்துறையின் புதிய இயக்கிகளைக் கண்டறிதல்**

ஆரோக்கிய சுற்றுலாத்துறை, கல்விசார் சுற்றுலாத்துறை மற்றும் பரோபகார சுற்றுலாத்துறை போன்ற சுற்றுலாத்துறையின் புதிய பகுதிகளில் பணிகளை விரிவுபடுத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் இலங்கை ஆற்றல்வாய்ந்த தன்மையினைக் கொண்டுள்ளது. ஆரோக்கியமான சுற்றுலாத்துறையில் அமைதியான மற்றும் ஓய்வான தங்குதல்கள், ஓய்விடங்கள், தியானம், யோகா வாய்ப்புக்கள் மற்றும் ஆயுர்வேத சிகிச்சைகள் போன்ற உடல் மற்றும் உள நலனோம்புகையினை மேம்படுத்துகின்ற வசதிகளை வழங்குவதனை இலக்காகக்கொண்ட வாய்ப்புக்கள் விரிவுபடுத்தப்படலாம். கல்விசார் சுற்றுலாத்துறையின் கீழ் ஆங்கிலம் மற்றும் தெற்காசிய கலாசாரம் மற்றும் நாகரீகம் போன்ற பகுதிகளில் குறுங்கால அல்லது நீண்ட கால கல்விசார் நிகழ்வுகள் தற்போதுள்ள அல்லது புதிய கல்விசார் நிறுவனங்களில் வழங்கப்படலாம். கிழக்காசியர்கள் பள்ளிக் கல்வியை முடித்ததன் பின்னர் வெளிநாட்டில் ஆங்கில மொழி நிகழ்ச்சித்திட்டங்களைத் தொடர்வது பொதுவானதொன்றாகக் காணப்படுவதுடன் அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களை இலங்கையில் வழங்க முடியும். வெளிநாட்டு மாணவர்களுக்குப் பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வீட்டில் இருந்தவாறு மேற்கொள்ளும் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பனவும் ஊக்குவிக்கப்பட முடியும். பரோபகார சுற்றுலாத்துறை நாட்டில் அறப்பணிகள் மற்றும் வேளாண்மைத் தொழில் போன்ற பரோபகார நடவடிக்கைகளில் வெளிநாட்டவர்கள் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்களை வழங்க முடியும்.

**(ii) இயற்கைச் சுற்றுச்சூழலைப் பராமரித்தல் மற்றும் பாதுகாத்தல் என்பவற்றின் பெருமளவு முக்கியத்துவம்**

ஐக்கிய நாடுகளின் உலக சுற்றுலா அமைப்பு மற்றும் உலக பயண மற்றும் சுற்றுலாத்துறைச் சபை என்பவற்றின் பல்வேறு வெளியீடுகளிலும் அதேபோன்று இலங்கைச் சுற்றுலா விடுதித் துறையிலிருந்தான தொலைத்தொடர்பூட்டல்களிலும் குறிப்பிடப்பட்டதற்கமைய உலக பயணிகளிடையே இயற்கையைப் பாதுகாத்தல் மற்றும் சூழல் நேயம் என்பன மீதான வலுவான மற்றும் வளர்ந்துவரும் கரிசனையொன்று காணப்படுகிறது. சுற்றுலாப் பயணிகளுக்கான தங்குமிடங்களின் கட்டடவாக்கமானது (கடற்கரையோரங்களில் உள்ள சுற்றுலா விடுதிகள் போன்றன) இயற்கையையோ அல்லது மற்றவர்களுக்கான இயற்கை வனப்புடனான காட்சிகளையோ அழித்துவிடாதிருப்பதனையும் பொதுமக்களது பார்வையிலிருந்து மறைந்துள்ள காடுகள் மற்றும் ஏனைய பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் அத்துமீறுகையினைத் தோற்றுவிக்காதிருப்பதனையும் நிச்சயப்படுத்துகின்ற பாரியளவிலானதொரு வகிபாகத்தினை இலங்கை அதிகாரசபைகள் கொண்டுள்ளன. மேலும், பார்வையிடுமிடங்களுக்கும் தங்குமிடங்களுக்கும் அருகில் ஒலி மாசடைதலானது முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும். சுற்றுலாத்துறைப் பணி வழங்குநர்கள் சூழல் நேயமிக்க விதத்தில் செயற்பாடுகளை மேற்கொள்கின்றனரா (உதாரணமாக, திமிங்கிலங்களைப் பார்வையிடச்செல்லும் சுற்றுலாக்கள் திமிங்கிலங்களுக்கு இடையூறு விளைவிக்கின்றன) என்பதனை மேற்பார்வை செய்யும் நடைமுறைகளும் அவசியமாகின்றன. அத்துடன், அண்மையில் சட்டமாக்கப்பட்ட விலங்கின நலம்பேணல் சட்டமானது யானைகள் மற்றும் வன விலங்குகள், குறிப்பாக சிறுத்தைகள் நடத்தப்படும் விதம் காரணமாக உருவாக்கப்படும் எதிர்மறையான விளம்பரத்தினைக் குறைப்பதற்குப் பயன்படுத்தப்பட வேண்டும்.

**(iii) தனியாள் சுற்றுலாப் பயணிகளின் பயணம் தொடர்பிலான கவனம்**

இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை புறப்படுகின்ற சுற்றுலாப் பயணிகளுக்கு மத்தியில் பெரும்பாலும் ஆண்டு அடிப்படையொன்றில் கணக்கெடுப்பொன்றினை மேற்கொள்கிறது. 2018-2019 கணக்கெடுப்பு அறிக்கையில் சுற்றுலாப் பயணிகளில் 17 சதவீதமானோர் மாத்திரமே பயணத் தொகுதிகளைப் பயன்படுத்தினர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளமையானது, சுற்றுலாப் பயணிகள் தமது சொந்தப் பயணங்களையே பெருமளவில் மேற்கொள்ளத் திட்டமிடுகின்றனர் என்பதனைக் காண்பிக்கின்றது. மேலும், கணக்கெடுப்பிற்குள்ளாக்கப்பட்ட சுற்றுலாப் பயணிகளில் 60 சதவீதமானோர் நண்பர்களிடமிருந்தும் உறவினர்களிடமிருந்தும் பயணத் தகவல்களைப் பெற்றுக்கொண்டுள்ளதுடன் 30 சதவீதமானோர் இணையவழி மூலங்களிலிருந்து தகவல்களைப் பெற்றுக்கொண்டுள்ளமையானது தனியாள் பரிந்துரைகளதும் தனியாள் இணையவழி மீளாய்வுகளதும் முக்கியத்துவத்தினை எடுத்துக்காட்டுகிறது. இக்கண்டறிதல்கள் ஒவ்வொரு சுற்றுலாப் பயணியையும் திருப்திப்படுத்துவதன் முக்கியத்துவத்தினையும் தனிநபர்களினால் மேற்கொள்ளப்படும் விளம்பரப்படுத்தல்கள் தொடர்பிலான தாக்கத்தினையும் எடுத்துக்காட்டுகின்றன. மேலும், சுற்றுலாப் பயணிகளில் 60 சதவீதமானோர் மாத்திரம் அவர்களது தங்கியிருத்தலானது "மிகச் சிறப்பாக" அமைந்திருந்ததெனக் கூறியிருந்ததுடன் சுற்றுலாப் பயணிகளில் 36 சதவீதமானோர் மாத்திரமே மீண்டும் இலங்கைக்கு வருகைதர விரும்புவதாகத் தெரிவித்தமையினால் பொதுவான திருப்தி மட்டமானது மிதமடைந்து காணப்படுகின்றது. சுற்றுலாப் பயணிகளுக்கு ஏற்படுகின்ற நுட்பமான அசௌகரியங்கள், அவர்கள் பெற்றுக்கொண்ட ஒட்டுமொத்த அனுபவத்தையும் அழிக்கவல்லன என்பதுடன் அது எதிர்மறையான விளம்பரப்படுத்தலைத் தூண்டி மொத்த சுற்றுலாத்துறையையும் பாதிப்படையச் செய்யும்.

**(iv) இலத்திரனியல் தொழில்நுட்பத்தின் பாரியளவிலான பயன்பாடு**

சுற்றுலாப் பயணிகளின் அனுபவத்தினையும் உயர் அடர்த்தியிலிருந்து சமூக இடைவெளிகொண்ட சுற்றுலாத்துறைக்கு மாறுதலடைதலினையும் மேம்படுத்தும் பொருட்டு இலத்திரனியல் தொழில்நுட்பங்களின் பயன்பாட்டினை உயர்வடையச் செய்வதற்கான நோக்கெல்லையொன்று காணப்படுகிறது. இப்போக்கில் இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை இணையத்தளம் மற்றும் சுற்றுலாத்துறைச் செல்லிடத் தொலைபேசிச் செயலி (விருத்திசெய்யப்பட்டு வருகிறது) போன்ற சில படிமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும், இலத்திரனியல் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்துவதற்கான மேம்பட்ட வழிமுறைகள் விரைவாக அவசியப்படுகின்றன. ஐக்கிய நாடுகளின் உலக சுற்றுலா அமைப்பு மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பன "கொவிட்-19 மற்றும் ஆசிய மற்றும் பசுபிக் பகுதிகளில் சுற்றுலாத்துறையின் எதிர்காலம்" (2022 மாச்சு) இல் சுற்றுலாத்துறையில் இலத்திரனியல் தொழில்நுட்பத்தின் விரிவடையும் வகிபாகத்தினைச் சுட்டிக்காட்டியுள்ளன.

இலங்கையில், சுற்றுலாத்துறையானது மேற்கு, தெற்கு மற்றும் மத்திய மாகாணங்களிலும் சீகிரியா பிராந்தியத்திலும் கவனம் செலுத்தியுள்ளது. தேசிய பூங்காக்களில் மக்கள் திரள்வதானது அண்மைக் காலமாக கணிசமானளவிலான எதிர்மறையான

5

விளம்பரப்படுத்தலினைப் பெற்றுள்ளது. அதேவேளை, அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவை ஆகிய புராதன நகரங்களும் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதில்லை (புள்ளிவிபரப் பின்னிணைப்பு அட்டவணை 86). நாட்டின் பிற பகுதிகள் ஆரோக்கியம், கிராமப்புற, பரோபாகார, சாகச சுற்றுலாத்துறை போன்றவற்றினை மேற்கொள்வதற்கான சிறந்த இடங்களை வழங்குவதுடன் சுற்றுலாப் பயணிகள் இப்பகுதிகளிலுள்ள இடங்களை நோக்கி ஈர்க்கப்படுவதற்கு நெறிப்படுத்தப்பட வேண்டும். அதேவேளை, தனியாள் சுற்றுலாத்துறைத் தளங்களில் பயணச்சீட்டுக்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் நிகழ்வுகள் (பெரஹராக்கள் மற்றும் திருவிழாக்கள், சிறியளவிலானவையாக இருப்பினும்), பொதுப் போக்குவரத்து, பாதுகாப்புப் பணிகள், சமய ஸ்தானங்களுக்கான ஆடை விதிமுறைகள், தேசிய பூங்காக்களில் தடைசெய்யப்பட்ட விடயங்கள் போன்றன தொடர்பிலான தகவல்களை நேரலையில் இற்றைப்படுத்தாதிருத்தல் போன்ற செயற்பாடுகளின் ஊடாக சுற்றுலாப் பயணிகள் அசௌகரியங்களுக்குள்ளாக வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாகியுள்ளனர். ஆதலால், விருத்தி செய்யப்பட்டுவருகின்ற செல்லிடத் தொலைபேசிச் செயலிக்கு அல்லது சுற்றுலாப் பயணிகளுக்கென்று அர்ப்பணிக்கப்பட்ட இணையத்தளமொன்றிற்கு தனியாள் விருப்பின் பிரகாரம் அத்தகைய தகவல்களினதும் பல்வகைப்படுத்தப்பட்ட பயணச்சீட்டுத் தொகுதிகளின் கொள்வனவிற்கான வசதியினதும் ஒருங்கிணைப்பானது உயர்ந்தளவில் பயனுள்ளதாயமையும். தொடுகையின்றிய பணி வழங்கல் முறைகள் மற்றும் கியுஆர் குறியீட்டினடிப்படையிலமைந்த தொடர்பின்றிய கொடுப்பனவுத் தெரிவுகளை வழங்குவதற்கும் சுகாதார மற்றும் பாதுகாப்புத் தகவல்களைக் களஞ்சியப்படுத்துவதற்கும் பகிர்வதற்கும் இலத்திரனியல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தப்பட முடியும்.

**(v) சிறந்த கொள்கை வகுத்தலுக்காக சுற்றுலாத்துறையின் ஆற்றல்வாய்ந்த தன்மையினை பயன்படுத்திக்கொள்ளும் பொருட்டு தகவல்களை மேம்படுத்தல்**

பொருத்தமான கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்வதானது சிறந்த தகவல் வலையமைப்பில் தங்கியுள்ளது. சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்கு நாடுகளுக்கிடையிலுள்ள தீவிர போட்டித்தன்மை மற்றும் சுற்றுலாப் பயணிகளின் சிறப்பம்சங்களில் பரிணாமமடைந்துவருகின்ற தன்மை என்பவற்றினைக் கருத்திற்கொண்டு கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு வலுவானதொரு தகவல் வலையமைப்பின் பயன்பாடு இன்றியமையாததொன்றாகக் காணப்படுகிறது. ஐக்கிய நாடுகளின் உலக சுற்றுலா அமைப்பின் ஆதரவுடன் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் நடைமுறைப்படுத்தி வருகின்ற “சுற்றுலாத்துறைச் செயற்கைக்கோள் கணக்கியல்” முயற்சியானது தேசிய கணக்கிற்குச் சுற்றுலாத்துறையின் பொருளாதாரப் பங்களிப்பின் சிறந்த மதிப்பீட்டினை இயலுமைப்படுத்தும். ஆதலால், அதன் நடைமுறைப்படுத்தலானது விரைவாகப் பின்தொடரப்பட வேண்டும். மேலும், சுற்றுலா வீசாவின் கீழ் வருகைதருகின்ற ஆட்களின் குணாதிசயங்கள், எவ்வளவு செலவிடுகின்றனர் மற்றும் எதற்காக எங்கு செலவிடுகின்றனர், திருப்தி மட்டம், சுற்றுலாத்துறையில் தொழில்வாய்ப்பு, நேரடி மற்றும் மறைமுக சுற்றுலாத்துறை பணி வழங்குநர்களினது எண்ணிக்கை மற்றும் வகைப்பாடுகள் மற்றும் பல்வேறு இடம்சார்ந்த தகவல்கள் போன்ற பெருமளவிலான பிற அம்சங்கள் தொடர்பிலான அதிகளவில் உயர்ந்த கால இடைவெளியிலமைந்த தரவுகள் அவசியமாகின்றன. தேசிய சுற்றுலாத்துறை அதிகார சபை நுகர்வோர் பயணத்தினை மேம்படுத்துதல், புத்துருவாக்கத்தினைத் தூண்டுதல் மற்றும் தனியார் துறைக்கு நுண்ணறிதல்களை வழங்குதல் என்பவற்றிற்கான தமது சந்தை ஆய்வு இயலுமைகளை மேம்படுத்துவதற்கான தேவையானது பன்னாட்டு நாணய நிதியத்தினால் உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பல்-நாட்டுக் கற்கைகளிலும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. (நோய்த்தொற்றிற்குப் பின்னரான உலகில் சுற்றுலாத்துறை: ஆசிய-பசுபிக் மற்றும் மேற்கு அரைக்கோளத்திற்கான பொருளாதார சவால்களும் வாய்ப்புக்களும், பன்னாட்டு நாணய நிதியம்,2021)

**(vi) சுற்றுலாத்துறையின் இடர் முகாமைத்துவ இயலளவுகளை மேம்படுத்தல்**

சுற்றுலாத்துறையானது இயல்பிலேயே புவிசார் அரசியல் நிகழ்வுகளுக்கு மிகவும் எளிதில் பாதிப்படையக்கூடியதாகவும் பருவகாலத் துறையொன்றாகவும் காணப்படுகின்றமையால், துறையானது படுகடன் சட்ட இசைவுத்தாமதம் மற்றும் இறை ஆதரவு என்பவற்றின் மீது மாத்திரம் தங்கியிருக்காது அதன் சொந்த இடர் முகாமைத்துவ இயலுமைகளை மேம்படுத்த வேண்டும். படுகடன் சட்ட இசைவுத்தாமதமானது வங்கிகளின் வருமானங்களைக் குறைத்து அவற்றின் திரவத்தன்மையினைப் பாதிப்படையச் செய்வதுடன் இடர்நேர்வுகளை அதிகரிக்கிறது. வங்கித்தொழில் துறையில் ஏற்படும் பாதகமான விளைவானது ஒட்டுமொத்த பொருளாதாரத்தின் மீதும் தொடர்ச்சியானதும் பரந்தளவிலுமான தாக்கங்களை ஏற்படுத்தும்.

**(vii) துறையினுள் முறைசாரா துணைத் துறைகளைக் குறைத்தல்**

இலங்கையில் சுற்றுலாத்துறையானது பாரியளவிலான நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளினால் வகைப்படுத்தப்பட்டு, தமது முறைசாரா வியாபாரங்களை முன்னெடுத்து வருகிறது. எனினும், அத்தகைய ஆட்களை அதிகாரசபைகளுடன் பதிவுசெய்வதற்கு ஊக்குவிப்பதானது அரசாங்கம் நடைமுறைப்படுத்துகின்ற மூலோபாயங்கள் ஒழுங்குமுறைப்படுத்தப்படுவதனையும் நிவாரண வழிமுறைகள் தேவைப்படுமேயானால் சகல பங்கேற்பாளர்களுக்கும் சமத்துவமிக்க விதத்தில் வழங்கப்படுவதனையும் நிச்சயப்படுத்துவதற்குத் துணைபுரியும். அத்துடன், தொழில் துறையொன்றின் உயர்ந்தளவிலான முறைசாராத் தன்மையானது கொள்கைத் தீர்மானமெடுக்கும் நோக்கங்களுக்கான தகவல் சேகரிப்பு, அரச பணிகளை வழங்குதல் மற்றும் தர நியமங்களுக்கான ஒழுங்குவிதிகள் என்பவற்றைக் கட்டுப்படுத்துகிறது. வியாபாரங்களைப் பதிவுசெய்வதானது நிதிக்கான அணுகலை மேம்படுத்தும் வேளையில் வரிச் சேகரிப்பினையும் மேம்படுத்தும்.

**(viii) சுற்றுலாப் பயணிகளுக்கு மத்தியில் பன்முகத்தன்மையினை ஊக்குவித்தல்**

தேறிய உயர் வருமானமீட்டும் தனிநபர்களை மாத்திரம் இலக்கிடுவதனைப் பார்க்கிலும் வெவ்வேறு வகையிலான பயணிகளை அவர்களின் ஆர்வம், பிறந்த நாடு மற்றும் செலவிடும் இயலளவு என்பவற்றின் பிரகாரம் திருப்திப்படுத்துவதனை நோக்காகக் கொண்டதாக வசதிகள் அமைய வேண்டும். இது குறிப்பிட்ட குணாதிசயங்களுடன் அல்லது ஒரு நாடு/பிராந்தியத்திலிருந்து வருகைதரும் பயணிகளில் தங்கியிருப்பதனைக் குறைப்பதற்கு உதவும். உண்மையில், சகல வகைகளிலுமான பயணிகள் இலங்கையின் சாதகமான சந்தைப்படுத்தலுக்குப் பங்களிக்கின்றனர். வெவ்வேறு செலவிடும்

5

இயலளவினைக்கொண்ட சுற்றுலாப் பயணிகளுக்கு உபசரித்தல் தொழில் துறையில் வெவ்வேறு முதலீட்டு இயலளவுகளுடனான உள்ளூர் நிறுவனங்கள் தொழிற்படுவதனையும் இயலச்செய்யும்.

**(ix) சுற்றுலாத்துறையின் மீது அதிகளவில் தங்கியிருத்தலைக் குறைத்தல்**

பன்னாட்டு நாணய நிதியம் "நோய்த்தொற்றிற்குப் பின்னரான உலகில் சுற்றுலாத்துறை - ஆசிய-பசுபிக் மற்றும் மேற்கு அரைக்கோளத்திற்கான பொருளாதார சவால்களும் வாய்ப்புக்களும்" (2021) இல் சுற்றுலாத்துறையில் தங்கியிருக்கின்ற நாடுகள் உண்மையில் சிறிய அளவிலானவையெனவும் அவை போதிய வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களையும் தாங்கிருப்புக்களையும் கொண்டிராத, வரையறுக்கப்பட்ட இறை இடைவெளி மற்றும் ஏனைய பேரண்டப்பொருளாதார பாதிப்படையக்கூடிய தன்மைகளைக் கொண்டவையெனவும் குறிப்பிடுகிறது. தற்செயலாக, சுற்றுலாத்துறையில் அதிகளவில் தங்கியிருக்கின்ற நாடுகள் மற்றைய ஏற்றுமதிகளில் குறைவாக வெற்றியீட்டுகின்ற பண்பினைக் கொண்டுள்ளதுடன் அத்தகைய பண்புகளினால் பாதிப்படைகின்றன. சுற்றுலாத்துறையில் தங்கியிருக்கின்ற அத்தகைய நாடுகள் ஒப்பீட்டளவில் குறைந்தளவிலான ஏற்றுமதிச் சிக்கல் தன்மைகளைக் கொண்டுள்ளதுடன் அவை புதிய உற்பத்தி அபிவிருத்திகளுக்கான அவர்களின் தெரிவுகளையும் பாதிக்கின்றன. புதிய உற்பத்திகளின் அபிவிருத்தியானது உற்பத்திசார் அறிவு மற்றும் இயலளவுகளின் விரிவாக்கத்தினைத் தேவைப்படுத்துகிறது. சுற்றுலாத்துறையானது ஒரு நாட்டின் தொழில்நுட்ப இயலளவினை மேம்படுத்துகின்றதொரு தொழில்துறையாகக் காணப்படாததோடு வெளிவாரியான அதிர்வுகளுக்கு உயர்ந்தளவில் பாதிப்படையக்கூடிய தன்மையினைக் கொண்டுள்ளது. மேற்கூறிய வெளியீட்டில், பன்னாட்டு நாணய நிதியமானது புதிய தொழில்நுட்ப பொருளாதாரக் கருவிகளைப் பயன்படுத்தி அல்லது ஒட்டுமொத்த ஏற்றுமதி அபிவிருத்தி தொடர்பிலும் கவனம் செலுத்துகின்ற ஏனைய பொருட்கள் மற்றும் பணிகள் ஏற்றுமதித் துறையினை வளர்ப்பதில் சுற்றுலாத்துறையில் தங்கியிருக்கும் நாடுகளின் (இலங்கை உட்பட) முன்மதியினைக் காண்பிக்கிறது. இவ்வறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டவாறு, நடுத்தர காலத்தில் இலங்கை அதன் சுற்றுலாத்துறை மாதிரி தொடர்பில் மீள்சிந்தனை செய்து அவசியமான கட்டமைப்புசார் மறுசீரமைப்புக்களை முன்னெடுக்க வேண்டும்.

**முடிவுரை**

புவிசார் அரசியல் பதற்ற நிலைகளின் தாக்கம் மற்றும் சவால்மிக்க உள்நாட்டுச் சமூக அரசியல் சுற்றுச்சூழல் என்பவற்றிற்கு மத்தியில் குறுங்காலத்தில் இலங்கைப் பொருளாதாரத்தின் உலகளாவிய தொற்றுநோய்க்குப் பின்னரான மீட்சிக்கான உத்வேகமொன்றினைச் சுற்றுலாத்துறை வழங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. அரசாங்கத்தினதும் தனியார் துறையினதும் ஒருங்கிணைந்த முயற்சிகள் புதிய இயல்புநிலையைத் தழுவுவதனை மாத்திரமன்றி அதனை உருவாக்குவதனையும் நோக்காகக் கொண்டிருத்தல் அவசியமானதொன்றாயமையும். இம்முயற்சிகளில் இலங்கையின் அண்மைக்கால பொருளாதார நிலைமையினை அடிப்படையாகக்கொண்டு சில அரசாங்கங்களினால் விடுக்கப்பட்ட பயண ஆலோசனைகள் சிறந்த ஈடுபாட்டினூடாக இலங்கை அதிகாரிகளினால் எதிர்கொள்ளப்பட வேண்டும். தொழில் துறையில் மீட்சியானது நவீன பயணிகளின் தேவைகளை எந்தளவு சிறப்பாகப் பூர்த்தி செய்கிறது, சாத்தியமான நிரம்பல் மற்றும் வலுப் பற்றாக்குறைகளுக்கான தயார்நிலை மற்றும் கடன் இசைவுத்தாமதத்திற்குப் பின்னரான கட்டங்களில் பொருளாதாரங்களின் சிறந்த முகாமைத்துவம் என்பவற்றில் தங்கியிருக்கும். சந்தைப்படுத்தல் நோக்கிலிருந்து பார்க்கும்போது தியானம் மற்றும் மருத்துவ மற்றும் வரலாற்று ரீதியான ஆய்வுகளுக்கான இளைஞர் குழுக்கள் போன்ற பன்முகப்படுத்தப்பட்ட நலன்களுக்காக சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்கு மேலும் ஆற்றல்வாய்ந்த தன்மை காணப்படுகிறது. இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் தனியார் பயணத் தொழிற்பாட்டாளர்கள் ஆகிய இரண்டும் பிராந்தியத்திலுள்ள நட்பு நாடுகளுடன் ஒப்பிடுகையில் கவர்ச்சியூட்டுகின்ற தொகுதிகளை வழங்கி சுற்றுலாப் பயணிகளின் இவ்விசேட குழுக்கள் இலங்கைக்கு விஜயம் செய்வதனை ஊக்குவிக்க வேண்டும். உலகளாவிய நோய்த்தொற்றின் படிப்படியான குறைதலுடன் சுற்றுலாத்துறையானது இலங்கைப் பொருளாதார மீட்சியில் குறிப்பிட்டதொரு வகிபாகத்தினைக் கொண்டிருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.


**உசாத்துணைகள்**

2009. Balance of Payments and International Investment Position Manual (BPM 6), Sixth Edition. International Monetary Fund.

2020. Survey of Department Tourists from Sri Lanka 2018-2019. Sri Lanka Tourism Development Authority.

2021. Trending in Travel - Emerging Consumer Trends in Travel & Tourism in 2021 and Beyond. World Travel and Tourism Organisation.

2021. Tourism in the Post-Pandemic World - Economic Challenges and Opportunities for Asia-Pacific and the Western Hemisphere. International Monetary Fund.

2022. World Tourism Barometer January 2022. United Nations World Tourism Organisation.

2022. Covid-19 and the Future of Tourism in the Asia and Pacific. Asian Development Bank and United Nations World Tourism Organisation.


கொவிட்-19 கட்டுப்பாடுகளின் காரணமாக தனிமைப்படுத்தலின் தாக்கத்தினைப் பிரதிபலித்தது. சுற்றுலாவிருந்தான வருவாய்கள் 2020ஆம் ஆண்டின் ஐ.அ.டொலர் 682 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021இல் ஐ.அ.டொலர் 507 மில்லியனுக்கு 25.7 சதவீதத்தினால் குறைவடைந்தது. அதேவேளை, 2020 உடன் ஒப்பிடுகையில் 2021இல் சுற்றுலா தொடர்புபட்ட மட்டுப்படுத்தப்பட்ட வெளிப்பாய்ச்சல்களே பதிவாகியிருந்தன.

**சுற்றுலாத்துறை மீதான முதலீடு 2021ஆம் ஆண்டில் மேலும் விரிவடைந்து இலங்கையின் சுற்றுலாத்துறை வாய்ப்பு பற்றிய முதலீட்டாளர்களின் தொடர்ச்சியான நம்பிக்கையினை எடுத்துக்காட்டியது.** மொத்தமாக 1,328 அறைகள் இயலளவுடன் 2021ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 134 மில்லியன் தொகையுடைய சுற்றுலாத்துறையுடன் தொடர்புபட்ட 45 புதிய முதலீட்டுக் கருத்திட்டங்கள் இலங்கை சுற்றுலா அதிகாரசபையின்

5

முதலீட்டாளர் தொடர்புகள் பிரிவுக்கு கிடைக்கப்பெற்றது. அதேவேளை, முதலீட்டாளர் தொடர்புகள் பிரிவானது கூட்டாக 922 அறைகள் இயலளவுடன் ஐ.அ.டொலர் 104 மில்லியன் தொகைக்கு 2021 காலப்பகுதியில் 30 சுற்றுலாவுடன் தொடர்புடைய கருத்திட்டங்களுக்கு அனுமதிகளை வழங்கியது. இதற்கு மேலதிகமாக, 6,265 அறைகளுடன் கூடிய 87 விடுதிக் கருத்திட்டங்கள் பல்வேறு மட்டங்களில் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன. அதற்கமைய, 2021இல் மொத்தமாக 25,958 அறை இயலளவுடன் கூடிய 480 தொகையுடைய தரப்படுத்தப்பட்ட நிறுவனங்கள் மற்றும் சிறிய வில்லா இல்லங்கள், பங்களாக்கள், அதிதி இல்லங்கள், மரபுரிமை பங்களாக்கள், மரபுரிமை இல்லங்கள், வீட்டில் தங்கும் அலகுகள், வாடகைக்கு விடப்படும் அடுக்குமாடி மனைகள் மற்றும் வாடகைக்கு விடப்படும் இல்லங்கள் என்பன உள்ளடங்கலாக மொத்தமாக 21,379 அறை இயலளவுடன்கூடிய 3,177 துணை நிறுவனங்களும் 2021இல் தொழிற்பட்டன.

**சுற்றுலாப் பயணிகளைக் கவருவதற்கு அரசாங்கமும் தனியார் துறையும் இணைந்து பல்வேறு கொள்கை முன்முயற்சிகளையும் பல ஊக்குவிப்பு நிகழ்சித்திட்டங்களையும் 2021ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தின.** கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுக்கு பதிலிறுத்துவதில் 2021 மாச்சு 31 வரை செயற்பாட்டிலிருந்த மத்திய வங்கியின் கோரிக்கையின் பெயரில் உரிமம்பெற்ற வங்கிகள், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் மூலம் வழங்கப்பட்ட சுற்றுலாத்துறை தொடர்பிலான கடன்களைத் காலம்தாழ்த்திச் செலுத்தும் வசதி 2021 ஒத்தோபர் 01 வரை மேலும் நீடிக்கப்பட்டது. எனினும், தொழில்துறை மீது நோய்த்தொற்றின் பாதகமான தாக்கங்கள் நீடித்திருப்பதைக் கருத்திற்கொண்டு, மத்திய வங்கி கடனை காலம்தாழ்த்திச் செலுத்தும் வசதியினை 2022 யூலையில் முடிவடையும் விதத்தில் மேலும் ஒன்பது மாதங்களுக்கு மீண்டும் நீடித்தது. இந்நீடிப்புக்கு இசைவாக, சுற்றுலாத்துறைக்கு பயணிகள் போக்குவரத்துச் சேவைகளை வழங்குகின்ற வியாபார மற்றும் தனியார்துறை வாகனங்கள் மீதான குத்தகை வாடகைக்கான கடனை காலம்தாழ்த்திச் செலுத்தும் வசதியும் நீடிக்கப்பட்டது. மேலும், சுற்றுலாத்துறையிலுள்ள தனிப்பட்டவர்களுக்கும் வியாபாரங்களுக்கும் சலுகை வட்டிவீதத்தில் கடன்களை வழங்குவதற்கு மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட சௌபாக்கியா கொவிட்-19 புத்துயிரளித்தல் கடன்வசதியானது விடயத்திற்கு விடயம் என்ற அடிப்படையில் 2022 யூன் 30 வரை பல தடவைகள் நீடிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக, சுற்றுலாத்துறையின் ஆர்வலர்கள் எதிர்கொண்ட சுமையினைக் குறைப்பதற்கு இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையுடன் பதிவுசெய்துள்ள அனைத்து சுற்றுலா நிறுவனங்களினதும் உரிமங்களின் செல்லுபடிக் காலத்தினை நீடித்தல் மற்றும் சுற்றுலாப்பயணி வழிகாட்டி உரிமங்களின் செல்லுபடியினை 2021 திசெம்பர் 31 வரை நீடித்தல் போன்ற பல வழிமுறைகள் சுற்றுலாத் துறைசார்ந்த அதிகாரிகளினால் எடுக்கப்பட்டன. இலங்கைச் சுற்றுலா மற்றும் விடுதி முகாமைத்துவ நிறுவனத்துடனான கூட்டிணைப்பில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை அனைத்து பதிவுசெய்யப்பட்ட வழிகாட்டிகளின் தொடர்ச்சியான தொழில்சார் பண்பு விருத்திக்காக அவர்களது அறிவினையும் திறன்களையும் மேம்படுத்துவதற்கு இ-கற்றல் தளமொன்றினை அறிமுகப்படுத்தியது. மேலும், முறைசாராத்துறை சுற்றுலாத் தொழிற்பாட்டாளர்களை இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையுடன் பதிவுசெய்வதை ஊக்குவிப்பதற்கு உறுப்புரிமை வழங்கும் செயன்முறையினையும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தொடங்கியது. சுற்றுலா விடுதிகள், அதிதி இல்லங்கள், வீட்டில் தங்குமிட வசதி வழங்குவோர், பங்களாக்கள், பயண முகவர்கள், சுற்றுலாப்பயணி சிநேகமிக்க உணவகங்கள், உணவகங்கள், ஸ்பாக்கள் மற்றும் ஆரோக்கிய நிலையங்கள் என்பன உள்ளடங்கலாக அனைத்து முறைசாரா சுற்றுலா வியாபாரங்களையும் தற்காலிகமாகப் பதிவுசெய்தல் செயன்முறை ஊடாக பதிவுசெய்வதற்கு அனுமதிக்கப்பட்டன. தனித்துவமான துறைகளை மையப்படுத்தி உலகளாவிலுமுள்ளவர்களை கவருவதற்கு உலகளவில் நாட்டை ஊக்குவிப்பதற்காக பல உபாய ரீதியான முயற்சிகள் எடுக்கப்பட்டன. இந்நோக்கில், இலங்கைச் சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் 2021 மாச்சில் ஐந்து வருட உலகளாவிய தொடர்பூட்டல் பிரசாரத்தினைத் தொடங்கி 2021 ஒத்தோபரில் இந்திய சினிமாவுக்கான திரைப்படச் சுற்றுலா ஊக்குவிப்பினைத் தொடங்கியது. மேலும், 2021 ஒத்தோபர் 1 தொடக்கம் 2022 மாச்சு 31 வரை டுபாயில் இடம்பெற்ற வேல்ட் எக்ஸ்போ 2020 நிகழ்வு இலங்கைக்கு வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா ஊக்குவிப்புக்கான வாய்ப்பினை வழங்கியது. 2021இல் இணையவழி ஈடுபாட்டினை மேம்படுத்துவதற்காக நேரலை வனவிலங்கு காணொளியான ‘கோ ஒன் கோச் சபாரி’ என்ற டிஜிட்டல் நிகழ்சித்திட்டம் போன்ற பல புதிய தொனிப்பொருட்கள் முதற்தடவையாக இலங்கை சுற்றுலாத்துறைக்குச் சேர்க்கப்பட்டன. தீவிரமான சுற்றுலா ஊக்குவிப்புக்கள், கொண்டே நஸ்ட், ட்ரெவல் அன்ட் லெசர் சஞ்சிகை, சீஎன்என் ட்ரெவல் போன்றன மூலம் 2021 காலப்பகுதியில் பயணம் செய்வதற்கு சிறந்த அடைவிடமாக உலகப்புகழ் பெற்ற சுற்றுலா அமைப்புக்களிடமிருந்து பல பாராட்டுக்களைப் பெற்றுக்கொண்ட அதேவேளை ஆரோக்கியச் சுற்றுலாவுக்கான மிகச் சிறந்த அடைவிடமாக விமன் சோலோ ட்ரெவல் சுட்டெண்ணின் தரப்படுத்தப்படுத்தலில் இலங்கை இரண்டாம் நிலையை அடைவதற்கு வழிவகுத்தன.

## போக்குவரத்து, தொலைத்தொடர்பூட்டல், கணனி மற்றும் தகவல் பணிகள் மற்றும் ஏனைய பணிகள்

**2021 காலப்பகுதியில் தகவல் தொழில்நுட்பம்/ வெளியிலிருந்து சேவைபெற்றுக்கொள்ளும் துறை ஐ.அ.டொலர் 1 பில்லியனை விஞ்சி சிறப்பாக செயலாற்றியது.** நோய்த்தொற்றுக் காரணமாக 2020ஆம் ஆண்டில் கடல்வழிச் சரக்குப் போக்குவரத்துப் பணிகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க

5

இடையூறுகளுக்குப் பின்னர் சரக்குப் போக்குவரத்துப் பணிகள் 2021இல் சாதகமான வளர்ச்சியினைப் பதிவுசெய்தன. நாட்டின் துறைமுகங்களுக்கான கப்பல் போக்குவரத்துகள் 2021இல் சிறிதளவு வீழ்ச்சியடைந்த போதிலும் உள்நாட்டு கொள்கலன் கையாளுதல், மாற்றிக் கப்பலேற்றுதல் மற்றும் மாற்றியேற்றுதல் தொழிற்பாடுகள் உள்ளடங்கலாக மொத்த கொள்கலன் கையாளுதலில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்று காணப்பட்டது. ஏற்றப்பட்ட கப்பல் சரக்கு மற்றும் இறக்கப்பட்ட கப்பல் சரக்கு என்ற நியதிகளில் கையாளப்பட்ட மொத்த கப்பல் சரக்கும் ஆண்டுகாலப்பகுதியில் அதிகரித்தது. இது உலகளாவிய உயர்வான கப்பல் சரக்கு கையாளல் வீதங்களுடன் ஒன்றிணைந்ததாகக் காணப்பட்டு, நாட்டின் ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகள் இரண்டுக்குமான நாட்டின் உயர்வான கப்பல் சரக்கு அனுப்புதல் கட்டணங்களுக்கு வழிவகுத்தது. அதேவேளை, உலகளாவிய நோய்த்தொற்றுடன் சுற்றுலாப்பயணிகளின் வருகைகளில் வீழ்ச்சி காரணமாக விமானப் பயணி பணிகளிலிருந்தான வருவாய்களில் குறிப்பிடத்தக்களவு குறைவு அவதானிக்கப்பட்டது. நோய்த்தொற்றின் காரணமாக வதிவைக்கொண்டிராத விமான நிறுவனங்களில் பயணிப்பதற்காக இலங்கையர்களுக்கு பயண வாய்ப்புகள் தடைப்பட்டதன் விளைவாக பயணி பணிகளின் வெளிப்பாய்ச்சல்களும் குறைவடைந்தன. நிதியியல் பணிகள், நிர்மாணப் பணிகள், அரசாங்கப் பணிகள் மற்றும் ஏனைய வியாபாரப் பணிகள் உள்ளடங்கலாக ஏனைய பணிகள் துணைத் துறைகளும் 2021இல் மிதமான தேறிய வெளிப்பாய்ச்சல்களைப் பதிவுசெய்தன. அதற்கமைய பணிகள் கணக்கின் மிகைகள், 2020இன் ஐ.அ.டொலர் 0.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021இல் 1.6 பில்லியனுக்கு அதிகரித்தன. எனினும், பிரதானமாக சுற்றுலாத்துறையிலிருந்தான குறைவடைந்த வருவாய்களினால் 2020 மற்றும் 2021 இல் பணிகள் கணக்கு மிகைகள் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கு முந்திய மட்டங்களுடன் ஒப்பிடுகையில் கணிசமாகக் குறைவடைந்து காணப்பட்டது.

### 5.2.3 முதலாந்தர வருமானம்

**நேரடி முதலீட்டுத்தொழில் முயற்சிகளின் மீள்முதலிடப்பட்ட வருவாய்களின் அதிகரிப்பிற்கு மத்தியிலும் குறைவான வெளிநாட்டுக் கடன்களின் வட்டிக்கொடுப்பனவுகள், அரசாங்கப் பிணையங்களில் முதலீட்டுக் கணக்குகள் மீதான கூப்பன் கொடுப்பனவுகள் மற்றும் நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளின் பங்கிலாபக் கொடுப்பனவுகள் என்பவற்றின் விளைவாக 2021ஆம் ஆண்டில் முதலாந்தர வருமானக்கணக்குப் பற்றாக்குறைச் சுருக்கமொன்றினைப் பதிவுசெய்தது.** அரசாங்கம், தனியார்துறை மற்றும் அரசுக்குச் சொந்தமான வியாபார தொழில்முயற்சிகள் என்பவற்றின் வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டிக்கொடுப்பனவுகள் ஆண்டுகாலப்பகுதியில் வீழ்ச்சியடைந்த அதேவேளை வைப்புக்களை ஏற்கும் நிறுவனங்கள் மூலமான வதியாதோருக்கான வட்டிக்கொடுப்பனவுகள் ஆண்டுகாலப்பகுதியில் மிதமான அதிகரிப்பினைப் பதிவுசெய்தன. அரசாங்கமானது குறைந்த செலவு சலுகை நிதியளித்தலை நோக்கிப் படிப்படியாக நகர்வதுடன் அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் வீழ்ச்சியடைந்த அதேவேளை சில குறுகியகால வர்த்தக கடன்கள் கொடுப்பனவு செய்யப்பட்டு வந்தன. மேலும், நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் சொத்தாண்மையின் ஒரு பாகம் வதியாதவர்களிடமிருந்து வதிபவர்களுக்கு மாற்றம்பெற்றமை அதேபோன்று புதிய வழங்கலின்றி 2020 மற்றும் 2021ஆம் ஆண்டுகளில் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் முதிர்ச்சி என்பன காரணமாக வதியாதோர்களுக்கான நாட்டின் பன்னாட்டு முறிகளின் கூப்பன் கொடுப்பனவுகளில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியொன்று காணப்பட்டது. எனினும், 2020 உடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் மீள்முதலிடப்பட்ட வருவாய்களில் அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. அதேவேளை, 2021ஆம் ஆண்டில், பன்னாட்டு ஒதுக்குகள் கணக்கின் முதலீட்டு வருமானத்தில் குறைவடைதலின் முதன்மை காரணமாக முதலாந்தர கணக்கிற்கான உட்பாய்ச்சல்கள் வீழ்ச்சியடைந்தன. இவ்வபிவிருத்திகளுடன் இணைந்து முதலாந்தர கணக்கின் பற்றாக்குறையானது 2020ஆம் ஆண்டின் ஐ.அ.டொலர் 2.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 2.0 பில்லியனாக இருந்ததென மதிப்பிடப்பட்டுள்ளது.

### 5.2.4 இரண்டாந்தர வருமானம்

**தொழிலாளர் பணவனுப்பல்களில் மிதமடைதலின் விளைவாக இரண்டாந்தர வருமானக் கணக்கு 2021ஆம் ஆண்டில் பலவீனமடைந்தது.** 2021ஆம் ஆண்டில் முதல் ஐந்து மாதங்களில் ஆரோக்கியமான வளர்ச்சியினைப் பதிவுசெய்த தொழிலாளர் பணவனுப்பல்கள் 2021 யூன் தொடக்கம் படிப்படியாக வீழ்ச்சியினைப் பதிவுசெய்தன. 2020ஆம் ஆண்டில் பதிவாகிய 5.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இது, 2021ஆம் ஆண்டில் 22.7 சதவீதம் கொண்ட தொழிலாளர் பணவனுப்பல்களில் வீழ்ச்சியினை ஏற்படுத்தியது. அலுவல்சார் வீதத்துடன் ஒப்பிடுகையில் கண்காணிக்கப்படாத சந்தையில் நிலவிய செலாவணி வீதங்களின் குறிப்பிடத்தக்க வேறுபாடு காரணமாக உத்தியோகபூர்வ வழிகள் ஊடாக கிடைக்கப்பெற்ற குறைந்தளவான பணவனுப்பல்களே இவ்வீழ்ச்சிக்கு முதன்மைக் காரணமாகயிருக்கக்கூடும். இவ்வபிவிருத்திகளுடன் இணைந்து இரண்டாந்தர வருமானக்கணக்கிற்கான தேறிய உட்பாய்ச்சல்கள் 2020ஆம் ஆண்டின் ஐ.அ.டொலர் 6.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 5.2 பில்லியனுக்கு குறைவடைந்தது. 2022 மாச்சு தொடக்கத்திலிருந்து செலாவணி வீதத்தில் ஏற்பட்ட சடுதியான தேய்வுடன் 2022ஆம் ஆண்டில் பணவனுப்பல்களில் குறிப்பிடத்தக்களவு மீட்சி ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. வங்கித்தொழில்துறையினூடாக தொழிலாளர்களின் பணவனுப்பல்களை வசதிப்படுத்தும்

பொருட்டு மத்திய வங்கியானது ‘வெளிநாட்டு பணவனுப்பல்கள் வசதிப்படுத்தல் திணைக்களம்’ என்ற பெயரில் புதிய திணைக்களமொன்றினைத் தாபித்த அதேவேளை, வங்கித்தொழில் துறையூடாக பணவனுப்புகின்ற தொழிலாளர்களுக்காக பல ஊக்குவிப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்தியது. மேலும், அநேகமான உரிமம்பெற்ற வங்கிகளின் பங்கேற்புடன் லங்காகிளியர் மூலம் ‘லங்கா ரெமிட்’ என அழைக்கப்படும் வெளிநாட்டு பணவனுப்பல்கள் செல்லிடச் செயலி தொடங்கி வைக்கப்பட்டது. ரூபாய்களாக மாற்றல்செய்யப்பட்ட தொழிலாளர் பணவனுப்பல்களுக்காக சாதாரண செலாவணி வீதத்திற்கு மேல் தற்காலிக பண ஊக்குவிப்புத் தொகையொன்று வழங்கப்பட்ட அதேவேளை புலம்பெயர்ந்த பணியாளர்களினதும் அவர்களது குடும்பங்களினதும் நலனோம்புகையினை மேம்படுத்துவதனை மையப்படுத்தி தொழிலாளர் பணவனுப்பல்களை ஊக்குவிப்பதற்கு வேறு பல ஊக்குவிப்புத்திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கான முனைப்புகள் முன்னெடுக்கப்பட்டன.

## 5.3 மூலதனக் கணக்கு நிலுவை


**மூலதனக் கணக்கிற்கான தேறிய உட்பாய்ச்சல்கள் 2021ஆம் ஆண்டில் பரந்தளவில் மாற்றமின்றி காணப்பட்டன.** முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் அரசாங்கத்திற்கான மூலதன மாற்றல்கள் குறைவடைந்த அதேவேளை தனியார் துறைக்கான மாற்றல்கள் அதிகரிப்பொன்றினை பதிவுசெய்தன. இதன் விளைவாக, மூலதனக் கணக்கானது 2020ஆம் ஆண்டின் பதிவாகிய ஐ.அ.டொலர் 28 மில்லியன் கொண்ட மிகையுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 25 மில்லியன் மிகையினைப் பதிவுசெய்தது.

5

## 5.4 நிதியியல் கணக்கு

**சென்மதி நிலுவையின் நிதியியல் கணக்கில் 2021ஆம் ஆண்டு காலப்பகுதியில் பொறுப்புக்களின் தேறிய உறுதல் அதிகரித்த அதேவேளை சொத்துக்களின் தேறிய கையகப்படுத்தல் குறிப்பிடத்தக்க குறைவொன்றினைப் பதிவுசெய்தது.** பொறுப்புக்களின் தேறிய உறுதல் 2020ஆம் ஆண்டின் ஐ.அ.டொலர் 1.7 பில்லியன் கொண்ட குறைவுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 1.9 பில்லியன் கொண்ட அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது. கொவிட்-19 நோய்த்தொற்று அதேபோன்று உள்நாட்டுச் சூழ்நிலைகள் என்பனவற்றினால் தூண்டப்பட்ட தொடர்ச்சியான நிச்சயமின்மையினைப் பிரதிபலித்து நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்கள் உள்ளடங்கலாக வெளிநாட்டு நேரடி முதலீடுகள், முன்னைய ஆண்டினைப் போன்றே 2021ஆம் ஆண்டில் மிதமானதாகக் காணப்பட்டது. இதன் விளைவாக, நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்கள் உள்ளடங்கலாக வெளிநாட்டு நேரடி முதலீடுகள் 2020ஆம் ஆண்டின் ஐ.அ.டொலர் 670 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 784 மில்லியனுக்கு மிதமான

வரைபடம் 5.11
நிதியியல் கணக்கு




*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

தொகையுடையதாகயிருந்தது. மேலும், நேரடி வெளிநாட்டு தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்கள் நீங்கலாக வெளிநாட்டு நேரடி முதலீடுகள் 2020ஆம் ஆண்டின் பதிவாகிய ஐ.அ.டொலர் 434 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 598 மில்லியனாகவிருந்தது. துறைரீதியான அடிப்படையில் தொலைத்தொடர்புகள், ஆதன அபிவிருத்தி, புடவைகள் மற்றும் விடுதிகள் தொடர்புபட்ட கருத்திட்டங்களுக்காக பாரிய வெளிநாட்டு நேரடி முதலீடுகள் கிடைக்கப்பெற்றிருந்த அதேவேளை அத்தகைய வெளிநாட்டு நேரடி முதலீடுகள், ஏற்கனவே நிறுவப்பட்ட நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளுக்கே முதன்மையாக கிடைக்கப்பெற்றது. 2021ஆம் ஆண்டில் நேரடி வெளிநாட்டு முதலீடுகளில் மிதமடைதலுக்கு மத்தியில் முன்னோக்கிச் சென்று, நேரடி வெளிநாட்டு முதலீடுகள் குறிப்பாக கொழும்பு துறைமுக நகரத்திற்கும் அம்பாந்தோட்டை துறைமுக கருத்திட்டத்திற்கும் கிடைக்கப்பெறுமென எதிர்பார்க்கிறது. மேலும், நாட்டிற்கான வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்களுக்கு பங்களிப்புச் செய்யும் முகமாக, நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழுள்ள கீழ்செயலாற்றுமிக்க சொத்துக்களைப் பணமாக்குவதற்கான முயற்சிகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

**2021 காலப்பகுதியில் அரசாங்கத்திற்கான முக்கிய நிதியியல் உட்பாய்ச்சல்கள், சீனா அபிவிருத்தி வங்கியிடமிருந்து மொத்தமாக, ஏறத்தாழ ஐ.அ.டொலர் 810 மில்லியன் தொகையுடைய 2021 ஏப்பிறலிலும் செத்தெம்பரிலும் கிடைக்கப்பெற்ற இரண்டு வெளிநாட்டு நாணயத் தவணை நிதியளித்தல் வசதிகளின் கிடைப்பனவை உள்ளடங்கியிருந்தன.** இதற்கு மேலதிகமாக, நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் மற்றும் ரூபா பெயர் குறிக்கப்பட்ட அரசாங்கப் பிணையங்களில் வெளிநாட்டு முதலீடுகளைப் பிரதானமாக உள்ளடக்குகின்ற படுகடன் பிணையங்கள் வடிவிலான முதலீடுகள் 2021ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 670 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தது. இதற்கு 2021 யூலையில் ஐ.அ.டொலர் 1.0 பில்லியன் கொண்ட நாட்டிற்கான பன்னாட்டு முறியொன்றின் முதிர்ச்சியின் தேறிய தாக்கம் காரணமாக

சிறப்புக்குறிப்பு 6

## நிதியியல் சந்தைகள் மற்றும் பொருளாதாரத்தின் மீது முறைசாரா பணமாற்றல்களின் தாக்கம்

### அறிமுகம்

நாட்டிற்குள்ளும் நாடுகளுக்கிடையிலும் வினைத்திறனும் பாதுகாப்பானதுமான நிதியத்தின் நகர்வு நாடொன்றின் நிதியியல் முறைமையில் முக்கியமானதொரு கூறாகக் காணப்படுகிறது. வெளிநாட்டுச் செலாவணி தொடர்புபடுகின்றவிடத்து, நாடுகளுக்கிடையிலான மாற்றல்களுக்கு இது மிக முக்கியமானதாகும். வழமையாக, இக்கொடுக்கல்வாங்கல்களில் பாரிய பெரும் பங்கு முறைசார்ந்த மார்க்கங்களூடாகவே நிகழ்கின்றன. எனினும், எந்தவொரு பொருளாதாரத்திலும் வேறுபட்ட அளவுகளில், முக்கியமாக, நாடுகளுக்கிடையிலான கொடுக்கல்வாங்கல்களுக்காக முறைசாரா மார்க்கங்களூடாகவும் நாணய மாற்றல்கள் இடம்பெறுகின்றன. முறைசாரா மார்க்கங்களின் அளவு மற்றும் பணம் அனுப்புபவர்களினால் முறைசார்ந்த மார்க்கங்கள் பயன்படுத்திக் கொள்ளப்படுவதும் குறிப்பிட்ட பொருளாதாரம், நிதியியல் சந்தை மற்றும் அத்தகைய கொடுக்கல்வாங்கல்களின் சட்டபூர்வத்தன்மை என்பனவற்றின் குணாம்சங்களில் தங்கியிருக்கிறது. முறைசார்ந்த மார்க்கங்கள் நிதியியல் நிறுவனங்கள் போன்ற உரிமம்பெற்ற மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தப்படும் நிறுவனங்களினால் வழங்கப்படும் பணிகளை உள்ளடக்குகிறது. முறைசாரா மார்க்கங்கள் ஹவாலா, உண்டி அல்லது உண்டியல் (தென்னாசியா), வெய்ஹியன் அல்லது சீட்டு (தென்கிழக்காசியா) மற்றும் கறுப்புச் சந்தை பீசோ (ஐக்கிய நாடுகள்) போன்ற பணிகளை வழங்கும் ஒழுங்குமுறைப்படுத்தப்படாத சந்தைகளின் பங்கேற்பாளர்களை உள்ளடக்குகிறது. பெரும்பாலான நாடுகளின் பணவனுப்பல் பணிகளை ஆற்றுவதற்கு இவர்களுக்கு உரிமம் வழங்கப்படுவதில்லை. எனினும், தற்பொழுது, ஜேர்மனி, ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐக்கிய அமெரிக்கா போன்ற குறிப்பிட்ட நாடுகளில் முறைசாரா நாணய மாற்றல் மார்க்கங்கள் பணம் தூயதாக்கலைத் தடைசெய்யும் தேவைப்பாடுகள் விதிக்கப்படுவதுடன், அத்தகைய பணி வழங்குவோரைப் பதிவுசெய்தல், உரிமம் வழங்கல் போன்ற ஒழுங்குமுறைப்படுத்தல் அணுகுமுறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றன. நிதியத்தின் பௌதீக அசைவுகளில்லாமல் பணத்தின் பெறுமதியினை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு நகர்வதற்கு, முறைசார்ந்த வங்கித்தொழில் மார்க்கங்கள் காணப்படாத பண்டைக் காலத்திலிருந்து ஹவாலா மார்க்கங்கள் தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன. வங்கித்தொழில் கொடுக்கல்வாங்கல்கள் மிக இலகுவாக்கப்பட்டு, வசதிப்படுத்தப்பட்டு செல்லிடத் தொலைபேசிச் செயலிகளைப் பயன்படுத்துவதன் மூலம் வங்கித்தொழில் கொடுக்கல்வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்ற இன்றைய நிலையிலும் கூட, இன்றும் அத்தகைய முறைசாரா மார்க்கங்கள் இருக்கவே செய்கின்றன. இம்முறைசாரா பணவனுப்பல் பணிகள் சட்டபூர்வமான அதேபோன்று சட்டபூர்வமல்லா நோக்கங்களுக்காக பல்வேறுபட்ட தனிப்பட்டவர்களினாலும் குழுமங்களினாலும் நிறுவனங்களினாலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அத்தகைய பணிகள் பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் உள்ளிட்ட குற்றவியல் நடவடிக்கைகளுக்காக பாரியளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. எடுத்துக்காட்டாக, 2001இல் ஐக்கிய அமெரிக்காவின் உலக வர்த்தக மையத்தின் மீதான கொடிய பயங்கரவாத தாக்குதல்களுக்கு வழிவகுத்த நடவடிக்கைகளுக்கு நிதியிட ஹவாலா மார்க்கங்களே பயன்படுத்தப்பட்டன. குறைந்த செலவிலான கொடுக்கல்வாங்கல்கள், இலகுவாக அணுகக்கூடிய தன்மை, குறைந்த எழுத்து வேலைகள் மற்றும் விரைவான மாற்றல் போன்ற சில சாதகமான பண்புகள் பணம் அனுப்புபவர்களிடையே பிரபல்யமடையக் காரணமாயின. எனினும், முறைசாரா வியாபாரங்கள் குற்றவியல் நடவடிக்கைகளுடன் தொடர்புபடுவதற்கான சாத்தியங்களைக் கொண்டுள்ளமையினால் பணத்தினை இழக்கின்ற சாத்தியங்களை இது ஏற்படுத்துமென்பதனால் இடர்நேர்வுகளை ஏற்படுத்தும் மார்க்கமாகக் காணப்படுகிறது. மிக முக்கியமான அம்சம் யாதெனில் பணம் தூயதாக்குவோர் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடுவோர் இதனை தவறான பயன்பாட்டிற்குப் பயன்படுத்துவதனால் இம்மார்க்கங்கள் அதிகளவிற்குப் பாதிக்கப்படும் தன்மையினைக் கொண்டுள்ளது. முறைசாரா மற்றும் சட்டத்திற்கு மாறான கொடுப்பனவு மார்க்கங்களின் இவ்வகைகள் பொருளாதார மூலவளங்களை முறைசார்ந்த துறையிலிருந்து பொருளாதாரமொன்றின் முறைசாரா மார்க்கங்களுக்கு நகரச்செய்து விடுமென்பதனால் நாட்டின் நிதியியல் முறைமையின் சுமுகமான தொழிற்பாட்டிற்கும் பொருளாதார நடவடிக்கைகளுக்கும் தீங்கினை ஏற்படுத்தக்கூடும். இக்கட்டுரையின் நோக்கம் நிதியியல் முறைமையின் மீதும் பொருளாதாரத்தின் மீதும் முறைசாரா பணவனுப்பல் மார்க்கங்களின் மோசமான தாக்கங்களின் மீதும் கவனத்தினைச் செலுத்துவதாக இருக்கிறது. இம்முறைசாரா பணவனுப்பல் மார்க்கங்கள் அனைத்தும் பெரும்பாலும் ஒரே மாதிரியான பண்புகளைக் கொண்டிருப்பதனால் இக்கட்டுரையானது இலங்கையில் முக்கியமாக பயன்படுத்தப்படும் மார்க்கமான ஹவாலா மீது கவனம் செலுத்துவதுடன் இது ஹவாலா மார்க்கம் அல்லது மாற்று ஏற்பாடாக முறைசாரா மார்க்கம் எனக் குறிப்பிடப்படுகிறது.

### ஹவாலா கொடுக்கல்வாங்கல்களின் அறிமுகம்

இப்பணவனுப்பல் மார்க்கங்கள் வலையமைப்பு ஏற்பாடுகளாகத் தொழிற்படுவதுடன் சில நேரங்களில் குறிப்பிட்ட சமூகத்திலுள்ள குறிப்பிட்ட சமூகத்தவரினுள் காணப்படுகின்றது. இவ்வேற்பாடுகளில், பெறுமதி மாற்றல்களுக்கு உலகம் முழுவதிலும் அமைந்துள்ள இவ்வலையமைப்புக்களுக்குச் சொந்தக்காரராகவுள்ள முகவர்களினால் வசதியளிக்கப்படுகிறது. ஹவாலா மார்க்கங்களில், ஹவாலா முகவர்கள் அல்லது வணிகர்கள் (ஹவாலா டர்ஸ் எனவும் அறியப்படுகிறது) வேறுபட்ட நாடுகளில் வசிப்பதுடன் கொடுக்கல்வாங்கல் தீர்ப்பனவுகள் முழுமையாக நம்பிக்கையினை அடிப்படையாகக் கொண்டே இடம்பெறுகின்றன. நாடொன்றிலுள்ள முகவரொருவர் மற்றொரு நாட்டிற்குப் பணத்தினை அனுப்புவதற்குத் தேவையுள்ள மக்களிடமிருந்து பணத்தினை சேகரித்து குறிப்பிட்ட நாட்டிலுள்ள முகவருக்கு உரிய பெறுநருக்கு அத்தொகையினை அவர்கள் விரும்பிய நாணயத்தில் தீர்ப்பனவு செய்வதற்காக அனுப்பி வைப்பார். இதன்படி, நாடுகளுக்கிடையேயான பௌதீக ரீதியான காசு நகர்வுகள் ஏதுமில்லை. நாடுகளுக்கிடையேயான கொடுக்கல்வாங்கல்களில் நிதியியல் நிறுவனங்கள் தொடர்புபடுவதில்லை. இம்மார்க்கங்களின் கீழ் கொடுக்கல்வாங்கல்கள் எதுவும் சரியான முறையில் பதிவுசெய்யப்படுவதில்லை. எனினும், உள்நாட்டு நிதிய மாற்றல்கள் தேவைப்படும் போது நிதியியல் நிறுவனங்கள் இச்சம்பவத்தில் தொடர்புபடக்கூடும்.

**ஹவாலா மார்க்கங்களின் பயன்படுத்துநர்கள்**

ஹவாலா, வேறுபட்ட பொருளாதார முகவர்களினால் சட்டபூர்வமான அதேபோன்று சட்டபூர்வமற்ற நோக்கங்கள் இரண்டிற்குமாகப் பயன்படுத்தப்படுகின்றது. இவை (அ) வெளிநாட்டு வேலையாட்களினால் தமது நாட்டிலுள்ள குடும்பங்களுக்காக அனுப்பப்படுகின்ற பணம் (ஆ) இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்கான வர்த்தகர்கள் செலுத்துகின்ற நிதி மற்றும் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களுக்காகப் பெறப்படுகின்ற நிதி (இ) பெற்றோர் தமது பிள்ளைகளின் கல்விக்காக மாற்றல் செய்யும் நிதியம் (ஈ) மக்கள் வசிக்கும் பிரதேசங்களிலுள்ள வங்கிகள் பணவனுப்பல் பணிகளை வழங்குகின்ற அபிவிருத்தியடைந்த மார்க்கங்களைக் குறைவாகக் கொண்டிருத்தல் (உ) சரியான விசா இல்லாத புலம்பெயர்ந்தோர் அனுப்புகின்ற நிதி (ஊ) பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடுவோர் சட்டத்திற்கு மாறான பயன்படுத்துநர் ஆகியோரை உள்ளடக்குகிறது.

***ஹவாலா மார்க்கங்களின் முக்கிய பண்புகள்***

ஹவாலா மற்றும் முறைசாரா மார்க்கங்கள் விசேட பண்புகளைப் கொண்டுள்ளன. இவை மேற்கொள்ளும் பணவனுப்பல் மார்க்கங்கள் பயன்படுத்துநரை கவர்வனவாகவுள்ளன. அவற்றின் பண்புகளில் சில பின்வருமாறு. **அணுகக்கூடிய தன்மை:** முறைசாரா மார்க்கங்கள் உலகின் ஒவ்வொரு மூலையிலும் நுணுக்கமான விதத்தில் நுழைந்திருப்பதுடன் முறைசார்ந்த வங்கித்தொழில் வசதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ள அல்லது கிடைக்காத தூர இடங்கள் உட்பட பெரும்பாலான பொருளாதார நடவடிக்கைகளில் அவர்களுக்கே உரிய முறையில் நுழைந்து கொள்ளும் தன்மை. **தாங்கிக் கொள்ளக்கூடிய தன்மை:** ஹவாலாவுடன் தொடர்புபட்டுள்ள தரகுக் கட்டணங்களுடன் ஒப்பிடுகையில் முறைசார்ந்த வங்கித்தொழில் மார்க்கங்களின் ஊடாகச் செய்யப்படும் நிதிய மாற்றல்களுடன் தொடர்பான கட்டணம் செலவுகூடியதாக இருத்தல். அத்துடன், வழமையாக, ஹவாலா முகவர்களினால் வழங்கப்படுகின்ற செலாவணி வீதம் வெளிநாட்டுச் செலாவணியிலுள்ள அதிகாரம்பெற்ற வணிகர்களினால் வழங்கப்படும் வீதத்தினை விடக் கூடியளவிற்கு கவர்ச்சிகரமானதாக இருத்தல். **விரைவுத்தன்மை:** இம்முறைசாரா மார்க்கங்களில் நாடுகளுக்கிடையிலான நகர்வுகள் நாணயத்தில் இடம்பெறுவதில்லை என்பதுடன் வெளிநாட்டு நாணய பெறுமதிக்குச் சமமான தொகையினை பெறுநரின் கணக்கிற்கொன்றில் வைப்புச் செய்வதன் மூலம் அல்லது காசாகத் தீர்ப்பனவு செய்வதன் மூலம் உள்நாட்டில் தீர்ப்பனவு செய்யப்படுகிறது. சில சந்தர்ப்பங்களில், பெறுநர் பணத்தினை இரண்டொரு மணித்தியாலங்களிலும் சிலர் ஹவாலா முகவரிடம் தமது கடவுச்சொல்லினை தெரிவிப்பதன் மூலம் வீட்டுவாசலிலும் பெற்றுக்கொள்கின்றனர். **வசதி:** குவைத், தென் கொரியா, மாலைதீவு போன்ற நாடுகளில் தொழில்புரியும் இலங்கை வேலையாட்களைப் பொறுத்தவரையில், அந்நாடுகளிலுள்ள முகவர்கள், வேலையாட்கள் தொழில்புரியும் பணிமனைகளிலிருந்தே, அவர்களது குடும்பங்களுக்கு அனுப்புகின்ற நோக்கத்திற்கான பணத்தினை அவர்களின் சம்பளத்திலிருந்து சேகரித்துக் கொள்ளும் பொறிமுறையொன்றினைக் கொண்டிருப்பதனால் பணம் அனுப்புகின்றவர்களின் கண்ணோட்டத்தில் இம்முறைசாரா ஏற்பாடுகள் வசதியானவைகளாகக் காணப்படுகின்றன. **சாத்தியமான அநாமதேயம்:** ஹவாலாவின் மிக முக்கியமான கவனத்தைக் கவரும் பண்பு இதுவாகும். இவ்வேறுபாடுகளுக்கு காகிதம் அல்லது ஆவண எண்பிப்பு எதுவும் தேவையில்லை. எனவே, தமது கொடுக்கல்வாங்கல்களில் இரகசியமான தன்மையினைப் பேண விரும்பும் மக்களுக்கு இது ஒரு மறைமுகமான அழைப்பாகும். மேலும், இம்முகவர்கள் எந்தவொரு ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாட்டிற்கும் உட்பட்டிராததன் காரணமாக நிதியத்தின் மூலம் தொடர்பான சட்டபூர்வத்தன்மை பற்றிய கேள்வி எதுவும் பணிவழங்குநரால் கேட்கப்படமாட்டாது.

**ஹவாலா மார்க்கங்களினூடாகப் பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல்**

முறைசாரா பணவனுப்பல் மார்க்கங்கள், பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் நடவடிக்கைகளூடாக சட்டத்திற்கு மாறான பணமாற்றல்களுக்கு வசதியான தளங்களை வழங்குகின்றன. பணம் தூயதாக்கல் என்பது சட்டத்திற்கு மாறான குற்றவியல் நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட பணத்தினை சட்ட ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பணமாக மாற்றுதலாகும். பணம் தூயதாக்கல் செய்முறை பின்வரும் மூன்று படிமுறைகளுடன் தொடர்புபடுகிறது. முதலாவது படிமுறை யாதெனில் சட்டத்திற்கு மாறான பணப் பெறுகைகள் நிதியியல் மார்க்கத்தில் அதாவது வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யப்படுகிறது. இரண்டாவது படிமுறை அடுக்கு முறைப்படுத்தலாம். இது சட்டத்திற்கு மாறான குற்றவியல் பணத்தின் தோற்றுவாயினை மறைப்பதற்கான தொடர்ச்சியான கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்புபட்டதாகும். மூன்றாவது கட்டம் சட்டத்திற்கு மாறான குற்றப்பணம் பொருளாதாரத்திற்குள் ஈர்த்துக் கொள்ளப்படும் ஒருங்கிணைத்தலுடன் தொடர்புபட்டதாகும். பயங்கரவாதிகளுக்கு நிதியளித்தல் என்பது பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளுக்கு அத்துடன்/ அல்லது நிறுவனங்களுக்கு நிதியிடும் நடவடிக்கையாகும். பயங்கரவாதத்திற்கு நிதியளிக்கின்ற மூலம் சட்ட ரீதியானதாக அல்லது சட்டத்திற்கு மாறானதாக இருக்கலாம். பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளைப் பலப்படுத்துவதற்காக தொடர்ச்சியாக உட்பாய்கின்ற பணம் பயங்கரவாதக் குழுவினரின் நிகழ்ச்சிநிரலைத் தொடர்கின்ற விதத்தில் தொடர்ச்சியாக இடம்பெறுதல் வேண்டும். எனவே, பயங்கரவாதிகள் அவர்களின் நிதியிடல் தேவைகளுக்காக வேறுபட்ட வழிவகைகளைத் தவறாகப் பயன்படுத்துகின்றனர்.

ஹவாலா மார்க்கங்கள் அநேக வழிகளில் பணம் தூயதாக்கலுக்கும் பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதற்கும் உதவுகிறது. இம்மார்க்கங்களைக் கட்டுப்படுத்துவதற்கும் ஏதேனும் குறைபாடுகள் மற்றும் எதிர்மறையான விளைவுகளை அடையாளம் காண்பதற்கும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பொன்று இல்லாமையானது பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலிலிருந்து அவர்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கான காரணிகளிலொன்றாகக் காணப்படுகிறது. இம்முகவர்களினால் சரியான பதிவேடுகளைப் பேணும் நடைமுறை காணப்படாமை மற்றொரு உதவு காரணியாக விளங்குகிறது. வங்கித்தொழில் துறையுடன் ஒப்பிடுகையில் இக்கொடுக்கல்வாங்கல்களின் போது நிதியின் மூலம் மற்றும் பயன்பாடு தொடர்பான கவனக் குறையும் பணம் தூயதாக்குபவர்களையும் பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பவர்களையும் ஊக்குவிக்கிறது. சட்ட நடவடிக்கைகளை தொடங்குவதில் காணப்படும் இடர்ப்பாடு மற்றொரு குறிப்பிடத்தக்க பண்பாகும்.

**முறைசாரா மார்க்கங்களைப் பயன்படுத்துவதிலுள்ள இடர்நேர்வுகள்**

அநேக அப்பாவிப் பொதுமக்கள் சட்ட ரீதியானதும் சட்டபூர்வமானதுமான கொடுக்கல்வாங்கல்கள் மூலம் பெறப்பட்ட பணத்தினை மாற்றல் செய்வதற்கு ஹவாலா மார்க்கங்களைப் பயன்படுத்துவதற்கு அவர்கள் தெரிவுசெய்வதன் விளைவாக சட்ட நடைமுறைப்படுத்தல் விசாரணைகளில் அகப்பட்டுக் கொள்கிறார்கள். ஹவாலா குறிப்பிட்ட பணமாற்று சாதனங்களையோ அல்லது தந்தி மாற்றல்களையோ அடிக்கடி பயன்படுத்துவதில்லை. பதிலாக பணமாற்றல்கள் ஹவாலா வணிகரின் உறுப்பினர்களுக்கிடையேயான தொடர்பூட்டலின் அடிப்படையிலேயே இடம்பெறுகிறது. எனவே, கொடுக்கல்வாங்கல்களை நிரூபிப்பதற்கான வழி எதுவுமில்லை என்பதுடன் மாற்றல் செய்யப்பட வேண்டிய கஷ்டப்பட்டு உழைத்த பணத்தினை இழக்கக்கூடிய சாத்தியங்களும் அதிகளவில் காணப்படுகின்றன. சில சமயங்களில் ஹவாலா வணிகர்கள் மோசடி மற்றும் போதை மருந்து கடத்தல் போன்ற குற்ற நடவடிக்கைகளுடன் நேரடியாக அல்லது மறைமுகமாக தொடர்புபடுகிறார்கள். எனவே, சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் முகவர்கள் ஹவாலா முகவர்களை விசாரணை செய்வதற்கு அதிகளவு சாத்தியங்கள் காணப்படுகின்றன. அத்தகையதொரு சந்தர்ப்பத்தில் அப்பாவித்தனமாகவோ அல்லது தெரியாமலோ ஹவாலா மார்க்கங்களைப் பயன்படுத்துகின்ற மக்கள் அதிகாரிகளினால் விசாரணை செய்யப்படும் சாத்தியங்கள் காணப்படுகின்றன.

**நிதியியல் சந்தைகள், பொருளாதாரம் மற்றும் நாட்டின் மீதான ஹவாலாவின் தாக்கம்**

நாடுகளுக்கிடையிலான முறைசாராக் கொடுக்கல்வாங்கல்கள் நிதியியல் சந்தைகள், பொருளாதாரம் மற்றும் நாட்டின் தேசிய பாதுகாப்பு என்பன மீது எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தக்கூடும். கணிசமான அளவினைக் கொண்ட முறைசாரா நாடுகளுக்கிடையிலான மார்க்கங்களின் கணிசமான அளவினைக் கொண்டிருப்பதன் மூலம் தாக்கத்தினைக் கொண்டிருக்கக்கூடிய முக்கிய துறைகள் வருமாறு:

**குறைந்த வரி வருமானம்**

ஹவாலா மார்க்கங்கள் தனிப்பட்டவர்களை அல்லது நிறுவனங்களை பணமாற்றல்களை முறைசாரா மார்க்கங்களினூடாக மேற்கொள்ள அனுமதிப்பதன் மூலம் வரி ஏய்ப்புக்களுக்கு வசதியளிக்கிறது. வருமான வரிகள் வடிவில் நேரடி வரிகளிலிருந்தும் அதேபோன்று அத்தகைய கொடுக்கல்வாங்கல் தொடர்பான மறைமுக வரிகளிலிருந்தும் அரசாங்கத்திற்கு இழப்புக்கள் ஏற்படுகின்றன. ஹவாலா மார்க்கங்களினூடாக மேற்கொள்ளப்படும் கொடுக்கல்வாங்கல்கள் பதிவுசெய்யப்படாமையின் காரணமாகவும் அத்தகைய தகவல்கள் உள்நாட்டு வரி அதிகாரிகளுக்குக் கிடைக்காமையின் காரணமாகவும் இக்கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபட்ட தரப்பினரின் வருமானமும் ஹவாலா முகவர்களின் வருமானமும் நாட்டின் வருமான வரியிலிருந்து விலக்கப்படுகின்றன. மேலும், முறைசார்ந்த முறைமைகளினூடாக மேற்கொள்ளப்படும் கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்பான பதிவுசெய்தல் கட்டணம் மற்றும் பணிக் கட்டண வரிகள் போன்ற மறைமுக வரிகளும் தவிர்க்கப்படுகின்றன. இதன் மூலம் அரசாங்கத்தின் வருமானம் எதிர்க்கணியமாகப் பாதிக்கப்படுகின்றது. பொருட்கள் மீதான வரி விதிப்பினைத் தவிர்க்கும் நோக்கத்திற்காக நாட்டின் இறக்குமதியாளர்களும் ஏற்றுமதியாளர்களும் ஹவாலா கொடுக்கல்வாங்கல்களைப் பயன்படுத்துகின்றனர். உதாரணமாக இறக்குமதியாளர் வெளிநாட்டிலுள்ள ஏற்றுமதியாளரை பொருட்பட்டியலிலுள்ள விலைப்பட்டியலின் பெறுமதியினைக் குறைத்துக் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்வதன் மூலம் இறக்குமதியாளரினால் அரசாங்கத்திற்குச் செலுத்தப்படக்கூடிய வரி குறைக்கப்படுகிறது. உண்மையான செலவிற்கும் பொருட்பட்டியலிலுள்ள செலவிற்குமிடையிலான வேறுபாடு, வரி அதிகாரிகளினால் கவனிக்கப்படாத ஹவாலா மார்க்கங்களின் ஊடாகத் தீர்ப்பனவு செய்யப்படுகின்றன.

**சென்மதி நிலுவை மற்றும் நாட்டின் வெளிநாட்டு ஒதுக்குகள் மீதான தாக்கம்**

இலங்கை போன்ற தோற்றம் பெற்றுவரும் பொருளாதாரங்களின் வெளிநாட்டு உட்பாய்ச்சல்களிலும் சென்மதி நிலுவையிலும் தொழிலாளர் பணவனுப்பல்கள் முக்கியமானதொரு கூறாக மாறியுள்ளன. தொழிலாளர்கள் ஹவாலா போன்ற முறைசாரா மார்க்கங்களினூடாக வெளிநாட்டு வருவாய்களை அனுப்பும் போது அத்தகைய வருவாய்கள் சென்மதி நிலுவையைக் கணிக்கும் போதும் வருவாய்களாகப் பிரதிபலிக்கப்படுவதில்லை. இது வணிகப்பொருள் வர்த்தகத்தினைப் போன்று சென்மதி நிலுவையில் அறிவிக்கப்பட்ட மற்றைய பல கூறுகளுடன் தொடர்பானதாகும். இதன்படி, சென்மதி நிலுவைப் புள்ளிவிபரங்கள் நாடொன்றின் வெளிநாட்டுத் துறையின் உண்மையான நிலைமையினைப் பிரதிபலிக்கமாட்டாது. மேலும், நாட்டின் வெளிநாட்டு ஒதுக்குகள் முறைசார்ந்த மார்க்கங்களுடாக நிதியின் மாற்றல் மூலமொன்று திரள்வதன் காரணமாக, ஹவாலா மாற்றல்கள், நாட்டின் வெளிநாட்டு ஒதுக்குகளைக் கட்டியெழுப்ப உதவாது, உண்மையில் இது முறைசார்ந்த மற்றும் முறைசாரா மார்க்கங்களுக்கிடையிலான சாத்தியமான மாற்றல்கள் காரணமாக ஒதுக்குகளைக் குறைத்துவிடக்கூடும்.

**பணநிரம்பல் மீதான தாக்கம்**

ஹவாலா கொடுக்கல்வாங்கல்களில் காசின் பௌதீக ரீதியான நகர்வு எதுவும் இல்லையாகையால் பொருளாதாரமொன்றின் விரிந்த பணநிரம்பல் மீதான தக்கம் பெரும்பாலும் பூச்சியமாகும். எனினும், காசுக் கொடுக்கல்வாங்கல்களின் சார்பில் வங்கி வைப்புக் கணக்குகளில் (சேமிப்பு மற்றும் தவணை வைப்புக்கள்) வீழ்ச்சி ஏற்படக்கூடுமென்பதனால் கொடுக்கல்வாங்கல்களினது காசு செறிவுத்தன்மையின் காரணமாக பெறுநரின் நாட்டின் விரிந்த பணத்தின் உள்ளமைப்பு ஹவாலா கொடுக்கல்வாங்கல்களினால் பாதிக்கப்படக்கூடும். வங்கித்தொழில் துறை மீதான ஹவாலா மார்க்கங்களின் எதிர்க்கணியமான தாக்கமும் பணத்திற்கான கேள்வியில் உறுதிப்பாடின்மையினை தோற்றுவிக்கக்கூடிய காசுப் பொருளாதாரத்தின் அபிவிருத்தியும் நிதியியல் இடையேற்பாடுகளையும் நாணயப் பரிமாற்றச் செயன்முறையினையும் மட்டுப்படுத்துவதன் மூலம் நாணயக் கொள்கையின் வினைத்திறனற்ற தன்மைக்குக் காரணமாகிறது.

5

**நிதியியல் இடையேற்பாடுகளின் மீதான தாக்கம்**

வங்கித்தொழில் முறைமையிலிருந்து கசிகின்ற பணம் வங்கித்தொழில் மூலங்களின் கிடைப்பனவுத் தன்மையினை தடைசெய்கிறது. இது, உயர்ந்த வட்டி வீதங்களை வழங்குவதன் மூலம் வைப்புக்களைக் கவர்வதற்கு வங்கிகள் முயற்சிக்கும் போது சந்தை வட்டி வீதங்களில் அதிகரிப்பொன்று ஏற்படக் காரணமாகிறது. மேலும், நிதியியல் இடையேற்பாடுகளின் இன்றியமையாத தொழிற்பாடுகள் மாற்று முறைசாரா நாணயம் மற்றும் மார்க்கங்களின் அச்சுறுத்தல்களுக்குள்ளாகின்றன. ஹவாலா வலையமைப்பில் ஏற்படும் அதிகரிப்பொன்றின் காரணமாக வங்கிகளும் அவற்றின் சந்தைப் பங்குகளை இழக்கக்கூடும்.

**தேசிய பாதுகாப்பின் மீதான தாக்கம்**

உலகின் பல பாரிய பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு அத்தகைய மார்க்கங்களே பகுதியளவில் நிதியிட்டிருப்பதனால் முறைசாரா மார்க்கங்கள் நிலை பெற்றிருப்பது தேசிய பாதுகாப்பு முகவர்களுக்குச் சவால்மிக்கதாகக் காணப்படுகிறது. ஹவாலா தலைமறைவான வங்கித்தொழில் முறையாக இருப்பதனால், பயங்கரவாத நிதியிடலின் குறிப்பிட்ட மூலங்கள் முறைசாரா பொறிமுறைகளினூடாக வழிப்படுத்தப்படுவதன் காரணமாக பயங்கரவாதிகளுக்கு நிதியிடுவதற்கெதிராக போராட்டங்களின் காத்திரமான தன்மைக்கு அச்சுறுத்தலாக விளங்குமெனக் கருதப்படுகிறது. இதற்கமைய, இம்மார்க்கங்கள் விரிவடைவதனை நிறுத்துவதற்கும் ஹவாலா மார்க்கங்களையும் பயங்கரவாதிகள் பயன்படுத்துவதனை நிறுத்துவதற்கும் ஒவ்வொரு முயற்சிகளும் எடுக்கப்படல் வேண்டும்.

**இலங்கையும் ஹவாலா மார்க்கங்களும்**

***முறைசாரா நாணய மாற்றல் மார்க்கங்களின் வளர்ச்சி:***

2021இல் இலங்கையில் தொழிலாளர் பணவனுப்பல்களில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி அவதானிக்கப்பட்டமைக்கு உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் ஒரு சில தொழிலாளர்களே வெளிநாடுகளுக்குச் சென்றமையும் முறைசார்ந்த சந்தைக்கும் போலிச் சந்தைக்குமிடையிலான பெருமளவு செலாவணி வீத வேறுபாடுகளின் காரணமாக ஹவாலா மார்க்கங்கள் விரிவடைந்தமையும் காரணங்களாக அமைந்தன. ஹவாலா முகவர்களினால் வெளிநாட்டுச் செலாவணி மாற்றல் மீது செலுத்தப்படும் முதற் கட்டணத்தின் மூலம் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் ஹவாலா மார்க்கங்களுக்கு மாறிக் கொள்வதற்கு ஊக்குவிக்கப்பட்டனர். 2021இல் தொழிலாளர் பணவனுப்பல்களில் ஏற்பட்ட கடுமையான வீழ்ச்சி இலங்கையின் சென்மதி நிலுவையின் நிலைமை மீது எதிர்க்கணியமான தாக்கத்தினை ஏற்படுத்தின. வெளிநாட்டு நாணயத்தினைப் பெறுவதற்கு ஹவாலா மார்க்கங்களைப் பயன்படுத்துவது செலவு கூடியதாக இருந்த போதும் கூட, செலாவணி வீத வேறுபாடுகளிலிருந்து தோன்றுகின்ற முறைசார்ந்த மார்க்கங்களில் காணப்படும் வெளிநாட்டு நாணய வழங்கலில் காணப்படும் பற்றாக்குறை காரணமாக இலங்கையின் இறக்குமதியாளர்களும் கூட தமது இறக்குமதி உண்டியல்களைச் செலுத்துவதற்கு ஹவாலா மார்க்கங்களைப் பயன்படுத்தியிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பொதுவாக. அண்மைக் காலத்தில் ஹவாலா மார்க்கத்தின் பிரபல்யம், நாட்டினை, முறைசார்ந்த மார்க்கங்களினூடாக வெளிநாட்டு நாணயத்தில் முக்கியமான பாய்ச்சல்களைப் பெற்றுக்கொள்வதிலிருந்து கவர்ந்து கொண்டதன் காரணமாக வெளிநாட்டுச் செலாவணியின் நிரம்பல் குறைவடைந்ததுடன் வெளிநாட்டு நாணய ஒதுக்குகள் சுருக்கமடைந்து சென்மதி நிலுவையில் கரிசனைகளைத் தோற்றுவித்தது. எனவே, ஹவாலா மார்க்கங்கள் விரிவடைந்தமையானது இலங்கையில் சென்மதி நிலுவை நிலைமையில் குறிப்பிடத்தக்க அச்சுறுத்தலைத் தோற்றவித்தது. எனினும், முறைசார்ந்த மார்க்கங்கள் தொடர்ச்சியாக போட்டித்தன்மை வாய்ந்த செலாவணி வீதம் சந்தையின் கேள்வி மற்றும் நிரம்பலை அடிப்படையாகக் கொண்டது. செலாவணி வீத வேறுபாடு கணிசமாகக் குறைவடையுமென எதிர்பார்க்கப்படுவதனால் முறைசாரா பணவனுப்பல் மார்க்கங்களுக்கான கேள்வி கட்டுப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

***ஹவாலா மார்க்கங்களுக்கெதிராக எடுக்கப்பட்ட அண்மைய நடவடிக்கைகள்***

முன்னர் கலந்துரையாடப்பட்டவாறு, பொருளாதாரத்திற்கு ஹவாலா ஏற்படுத்திய கடுமையான அச்சுறுத்தலைக் கருத்திற் கொண்டு நாட்டில் அதன் மார்க்கங்களின் விரிவாக்கத்தினைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகள் 2021இல் வலுப்படுத்தப்பட்டன. ஹவாலா வகை கொடுக்கல்வாங்கல்களின் இடர்நேர்வு மீதான பொதுமக்களின் புரிந்துணர்வின் மட்டத்தினை அதிகரிப்பதற்காக செய்தித்தாள் விளம்பரங்கள் மற்றும் கட்டுரைகள் என்பனவற்றை உள்ளடக்கிய பொதுமக்கள் விழிப்புணர்வு அமர்வுகள் நடத்தப்பட்டன. அத்தகைய கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்பான கணக்குகளின் நிதியம், சட்டத்திற்கு மாறான நடவடிக்கைகளுடன் அவர்கள் கொண்டிருந்த தொடர்புகளின் சாத்தியம் பற்றிய விசாரணைகள் முடிவடையும் வரை முடக்கப்படுகின்றன. மேலும், வெளிநாட்டுத் தொழிலாளர்கள் அவர்களது வருவாய்களை வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் போன்ற முறைசார்ந்த மார்க்கங்களினூடாக அனுப்புவதற்கு அவர்களை ஊக்குவிப்பதற்காக மேலதிக ரூபாய்களை வழங்குவது போன்ற மேலதிக நிதியியல் ஊக்குவிப்புக்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. மேலும், முறைசார்ந்த பணவனுப்பல் மார்க்கங்களை ஊக்குவிக்கும் நோக்குடனும் முறைசாரா மார்க்கங்களின் பயன்பாட்டினை ஊக்கம் குன்றச் செய்யும் நோக்குடன் வெளிநாட்டுப் பணவனுப்புநர்களுக்கான ஓய்வுகால நன்மைகள் மற்றும் கடன் வசதிகள் போன்ற மற்றைய ஊக்குவிப்புக்களும் முன்மொழியப்பட்டுள்ளன.

***முன்னோக்கிப் பயணித்தல்***

ஹவாலா மார்க்கங்கள் நிலைபெற்றிருப்பது உலகளாவிய பொருளாதாரத்திற்கு பெரும் இடர்நேர்வாக இருப்பதுடன் இம்மார்க்கங்களின் பாரிய விரிவினால் ஏற்படும் அச்சுறுத்தல் வேறுபட்ட உத்திகளைப் பயன்படுத்துவதன் மூலம் வேறுபட்ட நாடுகளினால் கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தியாவில், ஹவாலா கொடுக்கல்வாங்கல்கள் இந்திய ஒதுக்கு வங்கியிலிருந்தான நிபந்தனை ரீதியான ஒப்புதல் இல்லாமல் இந்தியாவிற்கு வெளியே எந்தவொரு ஆளுக்கும் எந்தவொரு கொடுப்பனவினையும் செய்வதனைத் தடை செய்ததன் மூலம் கட்டுப்படுத்தப்பட்டன. மேலும், இந்திய றிசேர்வ் வங்கி ஹவாலா மார்க்கங்களின் தாக்கத்தினைக் கட்டுப்படுத்துவதற்கான

5

பணமாற்றல் பணிகள் திட்டங்களை அணுகுவதற்கு முறைசார்ந்த நிதியியல் பணிகள் மற்றும் அனுமதிக்கப்பட்ட வங்கியல்லா நிதியியல் துறைகளை அணுகுவதற்குமாக/ முறைசார்ந்த நிதியியல் பணிகள்/ கிராமியப் பகுதிகளில் வர்த்தக வங்கிகளின் கிளைகளை நிறுவுவது போன்ற முறைசாரா நிதியியல் பணிகளின் தரத்தினை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தியது. இதனைத் தொடர்ந்து, இந்திய அரசாங்கம் 1970களில் நிதியியல் செலாவணி முகாமைத்துவச் சட்டத்தினை இயற்றியது. பாகிஸ்தான நாணய மாற்றுநர்களை வெளிநாட்டுச் செலாவணிக் கம்பனிகளாக மாற்றியமைப்பதனை நோக்கிய நடவடிக்கைகளை மேற்கொண்டது. இது தொடர்பில் அவை பதிவுசெய்து கொள்ளவும் இணங்கி நடப்பதற்கும் இரண்டு ஆண்டுகள் வழங்கப்பட்டன. நிதியியல் நடவடிக்கை செயலணிக் குழுவினால் 2013இல் வெளியிடப்பட்ட பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பில் ஹவாலாவினதும் அதனையொத்த பணி வழங்குநர்களினதும் வகிபாகம் என்ற பெயரிலான நூல் ஒழுங்குமுறைப்படுத்தப்படாத ஹவாலா மற்றும் அதனையொத்த பணி வழங்குபவர்களை அடையாளம் காண்பதற்கான உத்திகளையும் அவர்களது வியாபாரங்களை முறைப்படுத்துவதற்கான ஊக்குவிப்புக்களை உருவாக்குவதற்கான சாத்தியமான வழிகளையும் விளக்குகிறது. தற்பொழுது, அதிகாரிகள் இலங்கையில் ஹவாலா மார்க்கங்களைக் கண்காணித்து சட்டபூர்வமாக்குவதற்குப் பொருத்தமான சட்டக் கட்டமைப்பொன்றினை நடைமுறைப்படுத்துவதற்கான திட்டங்களைத் தொடங்கியுள்ளனர்.


**உசாத்துணைகள்**

1. Chene, M., 2008. Hawala Remittance System and Money Laundering, U4 Help Desk, Transparency International. [online] U4.no. Available at: <https://www.u4.no/ publications/hawala-remittance-system-and-money-laundering.pdf> [Accessed 18 March 2022].
2. Qorchi, M., Maimbo, S. and Wilson, J., 2003. Informal Funds Transfer Systems An Analysis of the Informal Hawala System. [online] Available at: <https://www.imf.org/external/pubs/nft/op/222/index.htm> [Accessed 18 March 2022].
3. Mumin, D., 2014. The Implications of Hawala Remittance System to The Somali Businesses: A Case Study of Eastleigh, Nairobi. [online] Erepo.usiu.ac.ke. Available at: <http://erepo.usiu.ac.ke/bitstream/handle/11732/48/Deeqo.pdf?isAllowed=y&sequence=1> [Accessed 18 March 2022].
4. Passas, N., 2003. Informal Value Transfer Systems, Terrorism and Money Laundering A Report To The National Institute Of Justice. [online] Ojp.gov. Available at: <https://www.ojp.gov/pdffiles1/nij/grants/208301.pdf> [Accessed 18 March 2022].
5. El Qorchi, M., Maimbo, S. and Wilson, J., 2003. Informal Funds Transfer Systems: An Analysis of the Informal Hawala System. Occasional Papers, [online] Available at: <https://doi.org/10.5089/9781589062269.084> [Accessed 7 April 2022].


அமைந்தது. இதில், ஆண்டுகாலப்பகுதியில் வதியாதோர்களுக்கு செலுத்தவேண்டிய ரூபா பெயர் குறிக்கப்பட்ட அரசாங்கப் பிணையங்கள் சந்தையில் வெளிநாட்டு முதலீடுகளின் தேறிய விற்பனைகள் மற்றும் இலங்கையின் நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் தொடர்பில் இரண்டாந்தரச் சந்தையிலிருந்து வதியாதோர்களால் செய்யப்பட்ட தேறிய கொள்வனவுகள் என்பவற்றுக்கு ஐ.அ.டொலர் 700 மில்லியன் செலுத்தவேண்டியிருந்தது. 2021 ஓகத்தில் பன்னாட்டு நாணய நிதியத்திடமிருந்து சிறப்பு எடுப்பனவு உரிமை ஒதுக்கீட்டின் கிடைப்பனவு (ஐ.அ.டொலர் 787 மில்லியன்), 2021 ஓகத்து மற்றும் செத்தெம்பரில் வங்களாதேச வங்கியுடனான இருதரப்பு நாணயப் பரஸ்பரப் பரிமாற்றல் ஒப்பந்த வசதியிடமிருந்து கிடைத்த பெறுகைகள் (ஐ.அ.டொலர் 200 மில்லியன்) என்பன உள்ளடங்கலாக சில முக்கிய உட்பாய்ச்சல்களின் அளவினை மத்திய வங்கி பெற்றுக்கொண்டது. மேலும், மத்திய வங்கியானது 2021 திசெம்பரில் செயற்படுத்தப்பட்ட ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1.5 பில்லியனுக்கு சமமான இருதரப்புப் பரஸ்பரப் பரிமாற்றல் ஒப்பந்த வசதியினை 2021 மாச்சில் சீன மக்கள் வங்கியுடன் கைச்சாத்திட்டது. மேலும், 2020ஆம் ஆண்டில் பெற்றுக்கொண்ட ஐ.அ.டொலர் 400 மில்லியன் தொகையினைக் கொண்ட இந்திய ரிசேர்வ் வங்கியுடனான பரஸ்பரப் பரிமாற்றல் ஒப்பந்த வசதியினை மத்திய வங்கி ஆண்டுகாலப்பகுதியில் தீர்ப்பனவு செய்தது. 2021ஆம் ஆண்டில் தனியார் துறைக்கான நிதியியல் உட்பாய்ச்சல்களும் மிதமடைந்து காணப்பட்டன. இதனால், நேரடி முதலீட்டு கொடுக்கல்வாங்கல்கள் தவிர கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் வெளிநாட்டில் வதிபவர்களின் முதலீடுகளை உள்ளடக்குகின்ற பங்குரிமை மூலதனம் வடிவிலான சொத்துப்பட்டியல் முதலீடுகள் 2020ஆம் ஆண்டின் ஐ.அ.டொலர் 217 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 236 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்தது. மேலும், தனியார்துறைக்கும் அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்குமான வெளிநாட்டு கடன் உட்பாய்ச்சல்களும் 2020ஆம் ஆண்டைப்போன்றே 2021ஆம் ஆண்டில் மிதமான தேறிய வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்தன. அதேவேளை, வங்கித்துறைக்கான வெளிநாட்டு உட்பாய்ச்சல்களின் நியதிகளில் நாணயம் மற்றும் வைப்புகள், தேறிய அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்த அதேவேளை குறுகிய கால வெளிநாட்டு கடன்பொறுப்புக்களின் தீர்ப்பனவுகளும் வங்கித்தொழில் துறைகளினால் தீர்ப்பனவுசெய்யப்பட்டன. உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் குறைவான எரிபொருள் கேள்வி காரணமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மேற்கொண்ட எரிபொருள் விலைப்பட்டியல்களின் தீர்ப்பனவுகளின் முதன்மைக் காரணமாக வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்களின் தேறிய உறப்பட்ட பொறுப்புக்கள் வீழ்ச்சியடைந்தன. மேலும், மத்திய வங்கியினால் முகாமை செய்யப்படுகின்ற ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியப் பொறுப்புக்களைப் பிரதானமாக உள்ளடக்குகின்ற ஏனைய கொடுப்பனவு செய்யத்தக்க கணக்குகள் 2021ஆம் ஆண்டில் தேறிய அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தன.

**2021இல் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் வீழ்ச்சியினைப் பிரதிபலித்து நிதியியல் சொத்துக்களின் தேறிய கையகப்படுத்தல் குறிப்பிடத்தக்க குறைவொன்றினைப் பதிவுசெய்தது.** நிதியியல் சொத்துக்களின் தேறிய கையகப்படுத்தல், மத்திய வங்கியின் வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட குறைவினைப் பிரதான காரணமாகக் கொண்டு 2021ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 2.1 பில்லியனால் வீழ்ச்சியடைந்தது. அரசாங்கத்தின் பாரிய வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகள், மத்திய

## அட்டவணை 5.9 அ
## நிதியியல் கணக்கு

ஐ.அ.டொ.மில்லியன்

| விடயம் | 2020 (அ) | | 2021 (ஆ) | |
|---|---|---|---|---|
| | நிதியியல் சொத் துக்களின் தேறிய கையகப் படுத்தல் | பொறுப் புக்களின் தேறிய உறப்படல் | நிதியியல் சொத் துக்களின் தேறிய கையகப் படுத்தல் | பொறுப் புக்களின் தேறிய உறப்படல் |
| **நிதியியல் கணக்கு** | **-2,113** | **-1,718** | **-2,122** | **1,907** |
| **நேரடி முதலீடு** | **15** | **434** | **17** | **598** |
| பங்கு மூலதனம் மற்றும் முதலீட்டு நிதியப்பங்குகள் | 10 | 211 | 13 | 317 |
| வருவாய்களின் மீள் முதலீடு தவிர்ந்த பங்கு மூலதனம் | 7 | 20 | 9 | 27 |
| நேரடி முதலீட்டு தொழில் முயற்சிகளில் நேரடி முதலீட்டாளர் | 7 | 20 | 9 | 27 |
| வருவாய்களின் மீள் முதலீடு | 3 | 191 | 4 | 290 |
| படுகடன் கருவிகள் | 4 | 223 | 5 | 281 |
| நேரடி முதலீட்டு தொழில் முயற்சிகளில் நேரடிமுதலீட்டாளர் | 4 | 223 | 5 | 281 |
| **சொத்துப்பட்டியல் முதலீடு** | **-** | **-2,383** | **-** | **-906** |
| பங்கு மூலதனம் மற்றும் முதலீட்டு நிதியப் பங்குகள் | - | -217 | - | -236 |
| படுகடன் பிணையங்கள் | - | -2,166 | - | -670 |
| பொது அரசாங்கம் | - | -2,166 | - | -670 |
| குறுங்காலம் (திறைசேரி உண்டியல்கள்) | - | -122 | - | -2 |
| நீண்ட காலம் | - | -2,044 | - | -668 |
| திறைசேரி முறிகள் | - | -431 | - | -25 |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் | - | 22 | - | -2 |
| நாட்டுக்கான முறிகள் | - | -1,635 | - | -640 |
| வழங்கல்கள் | - | - | - | - |
| உடமைகளின் முதிர்வுகள் | - | -859 | - | -700 |
| இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் | - | -776 | - | 60 |
| **நிதியியல் பெறுதிகள்** | - | - | - | - |
| **ஏனைய முதலீடு** | **-136** | **231** | **387** | **2,216** |
| நாணயமும் வைப்புக்களும் | 64 | -15 | 306 | 4,016 |
| மத்திய வங்கி | - | 400 | - | 1,375 |
| குறுங்காலம் | - | ... | - | 1 |
| நீண்ட காலம் | - | 400 | - | 1,374 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 64 | -415 | 306 | 2,641 |
| குறுங்காலம் | 259 | -415 | 256 | 2,641 |
| நீண்ட காலம் | -194 | - | 50 | - |
| **பக்கம் XXX இல் தொடர்கிறது.** | | | | |
| **ஞாபகார்த்த விடயங்கள்** | | | | |
| **வெளிநாட்டு நேரடி முதலீடுகள்** | | | | |
| பங்கு மூலதனம் | | 20 | | 27 |
| வருவாய்களின் மீள் முதலீடு | | 191 | | 290 |
| கம்பனிகளுக்கிடையிலான கடன்கள் | | 223 | | 281 |
| **மொத்த வெளிநாட்டு நேரடி முதலீடு (1)** | | **434** | | **598** |
| முதலீட்டுச்சபை கம்பனிகளுக்கான கடன்கள் (2) | | 236 | | 187 |
| **முதலீட்டுச்சபை கம்பனிகளுக்கான கடன்கள் உள்ளடங்கலாக மொத்த வெளிநாட்டு நேரடி முதலீடு (1+2) (இ)** | | **670** | | **784** |
| **கொழும்பு பங்கு பரிவர்த்தனைக்கான மொத்த தேறிய உட்பாய்ச்சல்கள்** | | **-225** | | **-238** |
| நேரடி முதலீடுகள் | | -8 | | -2 |
| சொத்துப்பட்டியல் முதலீடுகள் | | -217 | | -236 |
| **ரூபாயில் குறித்துரைக்கப்பட்ட அரச பிணையங்கள் (திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள்) மீதான தேறிய வெளிநாட்டு முதலீடு** | | **-553** | | **-27** |
| வெளிநாட்டு கொள்வனவுகள் | | 120 | | 17 |
| வெளிநாட்டு விற்பனைகள் | | 673 | | 44 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) முதலீட்டு சபையின் மதிப்பீடுகளுடனான வித்தியாசம் விடயப்பரப்பு மற்றும் தொகுப்பு ஏதாவது முறைமைகளிலான வேறுபாட்டினாலானது.

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 5.9 ஆ
## நிதியியல் கணக்கு

ஐ.அ.டொ.மில்லியன்

| விடயம் | 2020 (அ) | | 2021 (ஆ) | |
|---|---|---|---|---|
| | நிதியியல் சொத்துக்களின் தேறிய கையகப் படுத்தல் | பொறுப் புக்களின் தேறிய உறப்படல் | நிதியியல் சொத்துக்களின் தேறிய கையகப் படுத்தல் | பொறுப் புக்களின் தேறிய உறப்படல் |
| **ஏனைய முதலீடு (பக்கம் XXX இலிருந்து தொடர்கிறது)** | | | | |
| கடன்கள் | - | 174 | - | -1,552 |
| மத்திய வங்கி | - | -14 | - | -57 |
| ப.நா.நி. உடனான கொடுகடன் மற்றும் கடன்கள் | - | -14 | - | -57 |
| விரிவாக்கப்பட்ட நிதிய வசதி | - | -14 | - | -57 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | - | 75 | - | -2,152 |
| குறுங்காலம் | - | 403 | - | -2,169 |
| நீண்ட காலம் | - | -328 | - | 17 |
| பொது அரசாங்கம் | - | 169 | - | 664 |
| நீண்ட காலம் | - | 169 | - | 664 |
| ஏனைய துறைகள் (இ) | - | -56 | - | -7 |
| நீண்ட காலம் | - | -56 | - | -7 |
| வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்கள் | -224 | 185 | 257 | -428 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 9 | - | -3 | - |
| குறுங்காலம் | 9 | - | -3 | - |
| ஏனைய துறைகள் (ஈ) | -233 | 185 | 260 | -428 |
| குறுங்காலம் | -233 | 185 | 260 | -428 |
| ஏனைய பெறத்தக்க/ கொடுபடத்தக்க கணக்குகள் | 24 | -114 | -176 | 180 |
| மத்திய வங்கி | - | -114 | - | 180 |
| குறுங்காலம் (உ) | - | -114 | - | 180 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 24 | - | -176 | - |
| குறுங்காலம் | 24 | - | -176 | - |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | - | - | - | 787 |
| **ஒதுக்குச் சொத்துக்கள்** | **-1,992** | | **-2,526** | |
| நாணய தங்கம் | -667 | | -212 | |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | -5 | | 123 | |
| பா.நா. நிதியத்தில் ஒதுக்கு நிலைமை | - | | - | |
| ஏனைய ஒதுக்குச் சொத்துக்கள் | -1,319 | | -2,437 | |
| நாணயமும் வைப்புக்களும் | -177 | | 1,536 | |
| நாணய அதிகார சபைகள் மீதான கோரல்கள் | -1,092 | | 1,055 | |
| ஏனைய நிறுவனங்கள் மீதான கோரல்கள் | 914 | | 481 | |
| பிணையங்கள் | -1,143 | | -3,976 | |
| படுகடன் பிணையங்கள் | -1,143 | | -3,976 | |
| நீண்ட காலம் | -1,143 | | -3,976 | |
| ஏனைய கோரல்கள் | 1 | | 3 | |
| **நிதியியல் கணக்கு (தேறிய)** | **-394** | | **-4,029** | |
| ஞாபகார்த்த விடயங்கள் | | | | |
| **அரசாங்கத்திற்கான நீண்டகால கடன்கள் (தேறிய)** | **169** | | **664** | |
| உட்பாய்ச்சல்கள் (பகிர்ந்தளிப்புக்கள்) | 1,882 | | 2,418 | |
| செயற்திட்டக்கடன்கள் | 1,382 | | 1,608 | |
| வெளிநாட்டு நாணய கால நிதியிடல் வசதிகள் | 500 | | 810 | |
| மீள்கொடுப்பனவுகள் | 1,713 | | 1,754 | |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) அரசுக்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகள் மற்றும் தனியார்துறை கம்பனிகளை உள்ளடக்குகின்றது.
(ஈ) இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய தனியார் கம்பனிகளினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வர்த்தக கொடுகடன்களை உள்ளடக்குகின்றது.
(உ) ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறுப்புக்களின் தேறிய கொடுக்கல்வாங்கல்கள்

*மூலம் :* இலங்கை மத்திய வங்கி

வங்கியின் முதிர்ச்சியடைகின்ற கடன் பொறுப்புக்களை நிறைவேற்றுதல் அதேபோன்று எரிபொருள், எரிவாயு, நிலக்கரி, மருந்து மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் உள்ளடங்கலாக அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதிகளுக்கு வசதியளிப்பதற்கு 2021ஆம் ஆண்டின், குறிப்பாக பிற்பகுதியில் மத்திய வங்கியின் குறிப்பிடத்தக்க வெளிநாட்டுச் செலாவணி வழங்கல் என்பன காரணமாக மொத்த அலுவல்சார் ஒதுக்குகள், ஆண்டுக்காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 2.5 பில்லியனால் வீழ்ச்சியடைந்தன. எனினும், வைப்புக்களை ஏற்கும் நிறுவனங்களின் நாணய மற்றும் வைப்புகள் வடிவிலான சொத்துகளின் தேறிய கையகப்படுத்தலும் இலங்கை ஏற்றுமதியாளர்களால் அவர்களின் கடல்கடந்த வர்த்தகப் பங்காளர்களுக்கு வழங்கப்பட்ட வர்த்தகக்

**அட்டவணை 5.10**
**2021 இல் வெளிநாட்டுக் கடன் பெறுகைகளின் மூலம் நிதியிடப்பட்ட பிரதான செயற்றிட்டங்கள்**

| கடன் வழங்குநரும் செயற்றிட்டங்களும் | பகிர்ந்தளிக்கப்பட்ட தொகை ஐ.அ.டொ.மில் |
|---|---|
| அரசாங்க செயற்றிட்டங்கள் - மொத்தம் | 1,608 |
| இதில், | |
| **ஆசிய அபிவிருத்தி வங்கி** | **613** |
| இதில், | |
| ஒருங்கிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் | 221 |
| இரண்டாம் நிலைக் கல்வித்துறை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் | 52 |
| மகாவலி நீர்ப்பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் | 42 |
| **பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு** | **294** |
| இதில், | |
| காலநிலை தாக்குப்பிடித்தல் மேம்பாட்டு முகாமைத்துவம் | 36 |
| உபாய நகரங்கள் அபிவிருத்தி செயற்திட்டம் | 28 |
| **யப்பானிய அரசு** | **135** |
| இதில், | |
| களனி நதியின் மேலான புதிய பால கட்டடவாக்க செயற்திட்டம் | 51 |
| தேசிய ஊடுகடத்தல் மற்றும் பகிர்ந்தளிப்பு வலையமைப்பு அபிவிருத்தி மற்றும் வினைத்திறன்மிக்க மேம்பாட்டுச் செயற்திட்டம் | 34 |
| **புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான பன்னாட்டு வங்கி** | **131** |
| இதில், | |
| கொவிட் - 19 அவசர பதிலிறுப்பு மற்றும் சுகாதார முறைமைகளின் தயார்நிலை செயற்திட்டத்திற்கான இரண்டாவது மேலதிக நிதியிடல் | 54 |
| முதன்மை சுகாதார கவனிப்பு முறைமையினை வலுப்படுத்தும் செயற்திட்டம் | 42 |
| **சீன ஏற்றுமதி - இறக்குமதி வங்கி** | **126** |
| இதில், | |
| கண்டி வடக்கு பாததும்பர ஒன்றிணைந்த நீர்வழங்கல் செயற்திட்டம் | 54 |
| தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் கட்டடவாக்க விரிவாக்கம், | 36 |
| வீதிகளின் விரிவாக்கம் மற்றும் மேம்பாடு மற்றும் மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் 13 பாலங்களின் புனரமைப்பு | 34 |
| **இந்திய ஏற்றுமதி இறக்குமதி வங்கி** | **81** |
| இதில், | |
| புகையிரத துறை அபிவிருத்திக்கான டொலர் கொடுகடன் வசதி | 80 |
| **பிரான்ஸ் அபிவிருத்தி நிறுவனம்** | **27** |
| இதில், | |
| அம்பத்தளை நீர் வழங்கல் முறைமை மேம்பாடு மற்றும் வலுச் சேமிப்பு செயற்திட்ட அமுலாக்கம் | 10 |
| **ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி** | **22** |
| இதில், | |
| கொழும்பு நகர்ப்புற மீளுருவாக்க செயற்திட்டதிற்கான ஆதரவு | 19 |
| **கூட்டுறவு மத்திய ரைபைசன் - போரன்லீன்பன் வங்கி** | **22** |
| இதில், | |
| களுத்துறை பொது வைத்தியசாலையின் அபிவிருத்தி | 13 |

மூலம் : நிதி அமைச்சு

கொடுகடன் மற்றும் முற்பணங்களைப் பிரநிதித்துவப்படுத்துகின்ற வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்கள் மீதான சொத்துக்களின் தேறிய கையகப்படுத்தலும் ஆண்டுகாலப்பகுதியில் அதிகரித்த அதேவேளை, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் ஏனைய கிடைக்கப்பெறத்தக்க கணக்குகள் ஆண்டுகாலப்பகுதியில் தேறிய குறைவொன்றினைப் பதிவுசெய்தன.

## 5.5 திரண்ட நிலுவை

**தேறிய பன்னாட்டு ஒதுக்குகளின் மாற்றங்களைப் எடுத்துக்காட்டுகின்ற சென்மதி நிலுவையின் திரண்ட நிலுவை 2021ஆம் ஆண்டில் தொடர்ந்தும் குறிப்பிடத்தக்க பற்றாக்குறையினைப் பதிவுசெய்தது.** நிதியியல் கணக்கிற்கான உட்பாய்ச்சல்கள் தொடர்ச்சியாக மிதமடைதல், கணிசமான வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் அத்துடன் ஆண்டுகாலப்பகுதியில் மத்திய வங்கி மூலம் உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தைக்கான தேறிய விற்பனைகள் என்பன காரணமாக மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2021ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தன. இதன் விளைவாக, 2021 இறுதியளவில் தேறிய பன்னாட்டு ஒதுக்குகள் பற்றாக்குறையொன்றினைப் பதிவுசெய்து 2020இன் ஐ.அ.டொலர் 2.3 பில்லியன் கொண்ட பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் 2021இல் திரண்ட நிலுவையில், ஏறத்தாழ 4.0 பில்லியன் கொண்ட பற்றாக்குறையினைப் பதிவுசெய்வதற்கு வழிவகுத்தது.

## 5.6 பன்னாட்டு முதலீட்டு நிலைமை

**பன்னாட்டு முதலீட்டு நிலைமை நியதிகளில் 2020 இறுதியிலிருந்து 2021 இறுதியில் இலங்கையின் வெளிநாட்டுப் பொறுப்பு நிலைமையானது அதிகரித்த அதேவேளை வெளிநாட்டுச் சொத்து நிலைமை வீழ்ச்சியடைந்தது.** அதற்கமைய, நாட்டின் வெளிநாட்டுப் பொறுப்பு நிலைமையானது 2020 இறுதியில் ஐ.அ.டொலர் 58.6 பில்லியனிலிருந்து 2021 இறுதியில் ஐ.அ.டொலர் 64.5 பில்லியனுக்கு அதிகரித்த அதேவேளை நாட்டின் வெளிநாட்டு சொத்து நிலைமை 2020 இறுதியில் அறிக்கையிடப்பட்ட ஐ.அ.டொலர் 10.9 பில்லியனிலிருந்து 2021 இறுதியில் ஐ.அ.டொலர் 8.8 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. இதன் விளைவாக, பன்னாட்டு முதலீட்டு நிலையின் தேறிய பொறுப்பு நிலைமை 2020 இறுதியில் ஐ.அ.டொலர் 47.7 பில்லியனிலிருந்து 2021 இறுதியில் ஐ.அ.டொலர் 55.7 பில்லியனுக்கு அதிகரித்தது.

**வதிவற்றவர்களுடனான இலங்கையின் வெளிநாட்டு சொத்துநிலைமை 2021 காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியினைப் பதிவுசெய்தது.** மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் வீழ்ச்சியின் பிரதான காரணமாக வெளிநாட்டு சொத்துக்களின் இருப்புநிலைமை 2020ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறான ஐ.அ.டொலர் 5.7 பில்லியனிலிருந்து 2021 இறுதியில் 3.1 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது.[1] அதேவேளை, வதிகின்ற இலங்கையர்களின் வெளிநாட்டு நேரடி முதலீடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற நேரடி முதலீட்டுச் சொத்து நிலைமை ஆண்டுகாலப்பகுதியில் சிறிதளவு அதிகரித்தது. நாணயம் மற்றும் வைப்புகள் வடிவில் வைப்பு ஏற்கின்ற நிறுவனங்களின் சொத்து நிலைமை அதிகரித்த அதேவேளை ஏனைய பெறத்தக்க கணக்குகள் வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்தன. அதேவேளை, தனியார்துறை மூலம் வதியாதோருக்கு வழங்கப்பட்ட வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்களின் செலுத்தவேண்டிய சொத்துநிலைமை 2020 இறுதியில் அவதானிக்கப்பட்ட நிலையிலிருந்து 2021 இறுதியில் அதிகரித்தது.

**பன்னாட்டு முதலீட்டு நிலைமை பிரதிபலித்து வதியாதோர்களுக்கான இலங்கையின் மொத்தப் பொறுப்பு நிலைமையும் 2021 இறுதியளவில் குறிப்பிடத்தக்களவு**

1 ஒதுக்குச் சொத்து நிலைமை பற்றிய விரிவான பகுப்பாய்வினை 5.6.1ஆம் பிரிவு தருகின்றது.

5

### அட்டவணை 5.11
### பன்னாட்டு முதலீட்டு நிலைமை

ஐ.அ.டொ.மில்லியன் (கால முடிவிலான நிலைமை)

| வகை | 2020 (ஆ) சொத்துக்கள் | 2020 (ஆ) பொறுப்புக்கள் | 2021 (ஆ) சொத்துக்கள் | 2021 (ஆ) பொறுப்புக்கள் |
|---|---|---|---|---|
| **நேரடி முதலீடு (இ)** | **1,509** | **13,655** | **1,522** | **17,891** |
| பங்கு மூலதனம் மற்றும் முதலீட்டு நிதியப் பங்குகள் | 1,473 | 8,665 | 1,482 | 12,626 |
| படுகடன் கருவிகள் | 36 | 4,990 | 40 | 5,264 |
| **சொத்துப்பட்டியல் முதலீடுகள்** | **...** | **8,579** | **...** | **7,508** |
| பங்கு மூலதனம் மற்றும் முதலீட்டு நிதியப் பங்குகள் | | 867 | | 1,148 |
| ஏனைய துறைகள் | | 867 | | 1,148 |
| படுகடன் பிணையங்கள் (ஈ) | ... | 7,712 | ... | 6,360 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | ... | | ... | |
| குறுங்காலம் | ... | | ... | |
| பொது அரசாங்கம் | | 7,616 | | 6,266 |
| குறுங்காலம் | | 4 | | 1 |
| நீண்ட காலம் | | 7,613 | | 6,265 |
| ஏனைய துறைகள் | | 96 | | 94 |
| நீண்ட காலம் | | 96 | | 94 |
| **நிதியியல் பெறுதிகள்** | - | - | - | - |
| **ஏனைய முதலீடு** | **3,710** | **36,340** | **4,096** | **39,100** |
| **நாணயமும் வைப்புக்களும்** | **835** | **1,734** | **1,142** | **5,749** |
| மத்திய வங்கி | | 400 | | 1,775 |
| குறுங்காலம் | | ... | | 1 |
| நீண்ட காலம் | | 400 | | 1,774 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 835 | 1,333 | 1,142 | 3,974 |
| குறுங்காலம் | 622 | 1,333 | 878 | 3,974 |
| நீண்ட காலம் | 214 | | 264 | |
| **கடன்கள்** | | **31,353** | | **29,585** |
| மத்திய வங்கி | | 1,378 | | 1,265 |
| ப.நா.நி. உடனான கொடுகடன் மற்றும் கடன்கள் | | 1,378 | | 1,265 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | | 5,324 | | 3,172 |
| குறுங்காலம் | | 4,174 | | 2,005 |
| நீண்ட காலம் | | 1,150 | | 1,167 |
| பொது அரசாங்கம் | | 20,570 | | 21,077 |
| நீண்ட காலம் | | 20,570 | | 21,077 |
| ஏனைய துறைகள் (உ) | | 4,081 | | 4,071 |
| நீண்ட காலம் | | 4,081 | | 4,071 |
| **வர்த்தக கொடுகடன்கள் மற்றும் முற்பணங்கள்** | **954** | **2,341** | **1,211** | **1,913** |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 101 | | 98 | |
| குறுங்காலம் | 101 | | 98 | |
| ஏனைய துறைகள் (ஊ) | 853 | 2,341 | 1,113 | 1,913 |
| குறுங்காலம் | 853 | 2,341 | 1,113 | 1,913 |
| **ஏனைய பெறத்தக்க/ கொடுபடத்தக்க கணக்குகள்** | **1,920** | **343** | **1,744** | **523** |
| மத்திய வங்கி (எ) | | 343 | | 523 |
| குறுங்காலம் | | 343 | | 523 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 1,920 | | 1,744 | |
| குறுங்காலம் | 1,920 | | 1,744 | |
| **சிறப்பு எடுப்பனவு உரிமைகள்** | | **570** | | **1,330** |
| **ஒதுக்குச் சொத்துக்கள்** | **5,664** | | **3,139** | |
| நாணய தங்கம் | 409 | | 175 | |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | 3 | | 124 | |
| ப.நா.நி. இல் ஒதுக்கு நிலைமை | 69 | | 67 | |
| ஏனைய ஒதுக்குச் சொத்துக்கள் | 5,184 | | 2,773 | |
| நாணயமும் வைப்புக்களும் | 2,210 | | 2,729 | |
| நாணய அதிகார சபைகள் மீதான கோரல்கள் | 861 | | 899 | |
| ஏனைய நிறுவனங்கள் மீதான கோரல்கள் | 1,350 | | 1,830 | |
| பிணையங்கள் | 2,974 | | 44 | |
| படுகடன் பிணையங்கள் | 2,974 | | 44 | |
| **மொத்த சொத்துக்கள்/பொறுப்புக்கள்** | **10,883** | **58,574** | **8,758** | **64,498** |
| **தேறிய பன்னாட்டு முதலீட்டு நிலைமை** | | **-47,691** | | **-55,740** |
| **ஞாபகார்த்த விடயங்கள்** | | | | |
| பமுநி-முதிர்ச்சி அடிப்படையிலான பகுப்பாய்வு | 10,883 | 58,574 | 8,758 | 64,498 |
| குறுங்காலம் | 6,184 | 9,062 | 6,804 | 9,564 |
| நீண்ட காலம் | 4,699 | 49,512 | 1,954 | 54,934 |

(அ) திருத்தப்பட்டது

(ஆ) தற்காலிகமானது

(இ) முதலீட்டு சபை, கொழும்புப் பங்கு பரிவர்த்தனை மற்றும் ஏனைய தனியார் கம்பனிகளின் நேரடி முதலீட்டு நிலைமைகளினை உள்ளடக்குகின்றது.

(ஈ) உள்நாட்டு நாணய வழங்கல்கள் புத்தகப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்ட அதேவேளை வெளிநாட்டு நாணய படுகடன் வழங்கல்கள் சந்தைப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

(உ) அரசிற்கு சொந்தமான வியாபார தொழில் முயற்சிகளால் பெறப்பட்ட செயற்திட்ட கடன்களின் வெளிநின்ற நிலைகளை உள்ளடக்குகின்றது.

(ஊ) இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் தனியார் துறை கம்பனிகள் என்பவற்றின் வெளிநின்ற வர்த்தக கொடுகடன் நிலைமையை உள்ளடக்குகின்றது.

(எ) மத்திய வங்கியினால் முகாமைத்துவம் செய்யப்படும் ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறுப்புக்களின் வெளிநின்ற நிலைமை

*மூலம் :* இலங்கை மத்திய வங்கி



**அதிகரித்தது.** நேரடி முதலீட்டுப் பொறுப்புகளில் அதிகரிப்பு, மத்திய வங்கி மற்றும் வைப்பு ஏற்கும் நிறுவனங்களின் நாணயம் மற்றும் வைப்புப் பொறுப்புகளில் அதிகரிப்பு அதேபோன்று சிறப்பு எடுப்பனவு ஒதுக்கீட்டிலிருந்து ஏற்பட்ட அதிகரிப்பு என்பன இதற்கு பிரதான காரணங்களாக அமைந்தன. பங்குரிமை மூலதன வடிவில் செலுத்தவேண்டிய நேரடி முதலீடுகளின் பொறுப்பு நிலைமையானது கொழும்பு பங்குப்பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட சில முக்கிய வதியாதோர் பங்குரிமை மூலதன நிலைமைகளில் கணிசமான பெறுமதி ஈட்டல்கள் காரணமாக ஏறத்தாழ ஐ.அ.டொலர் 4.0 பில்லியனை அண்மித்த தொகையினால் அதிகரித்தது. ஆண்டின் தொடக்கத்திலிருந்து பங்குரிமை மூலதன நிலை கணிசமாக அதிகரித்தமையினால் பங்குரிமை மூலதனத்தின் இவ்வீட்டல் குறிப்பாக சில கம்பனிகளில் முக்கியமானதாக அமைந்து, 2021 இறுதியளவில் இவ்வதியாத முதலீட்டாளர்களுக்கான குறிப்பிடத்தக்க பெறுமதி ஈட்டல்களைத் தோற்றுவித்தது. மேலும், ஆண்டுகாலப்பகுதியில் சீன மக்கள் வங்கியுடன் சீன யுவான் 10 பில்லியன் தொகையுடைய (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1.5 பில்லியனுக்கு சமனான) அத்துடன் வங்காளதேச வங்கியுடன் (ஐ.அ.டொலர் 200 மில்லியன்) புதிதாக இருதரப்பு நாணயப் பரஸ்பரப் பரிமாற்றல் ஒப்பந்த உடன்படிக்கைகளை கைச்சாத்திட்டமையும் இந்திய ரிசேர்வ் வங்கியுடனான (ஐ.அ.டொலர் 400 மில்லியன்) சார்க் நிதிய பரஸ்பரப் பரிமாற்றல் ஒப்பந்த வசதியின் தீர்ப்பனவினதும் ஒன்றிணைந்த தாக்கத்தினால் 2021இன் இறுதியளவில் மத்திய வங்கியின் நாணய மற்றும் வைப்புக்களின் பொறுப்பு நிலைமை அதிகரித்தது. அதேவேளை, வைப்பினை ஏற்கும் நிறுவனங்களின் நாணய மற்றும் வைப்பு பொறுப்பு நிலைமையும் 2021 இறுதியில் அதிகரித்தது. மேலும் ஆண்டுகாலப்பகுதியில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 787 மில்லியன் கொண்ட பன்னாட்டு நாணய நிதியம் மூலமான சிறப்பு எடுப்பனவு உரிமையின் புதிய ஒதுக்கீட்டுடன் இணைந்து சிறப்பு எடுப்பனவு உரிமைப் பொறுப்பு நிலைமையும் 2021 இறுதியில் அதிகரித்தது. எனினும், ஆண்டுகாலப்பகுதியில் முதிர்ச்சியடைந்த நாட்டிற்கான பன்னாட்டு முறியின் மீள்கொடுப்பனவு அத்துடன் வெளிநின்ற அரசாங்க நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் சந்தை விலைகளின் வீழ்ச்சி என்பவற்றுடன் சொத்துப்பட்டியல் முதலீட்டுப் பொறுப்பு நிலைமையானது 2020 இறுதியுடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியளவில் வீழ்ச்சியடைந்தது. மத்திய வங்கியின் மற்றும் வைப்பு ஏற்கும் நிறுவனங்களின் வெளிநாட்டு கடன்பொறுப்புக்களில் குறைவடைதல் மூலம் பிரதானமாகப் பங்களிக்கப்பட்டு நேரடி முதலீட்டு நிலைமையின் வெளிநாட்டுக் கடன்பொறுப்பு நிலைமையும் 2021 இறுதியில் வீழ்ச்சியடைந்தது. ஆண்டுகாலப்பகுதியில் பிரதானமாக பெற்றுக்கொண்ட இரண்டு வெளிநாட்டு நாணயத் தவணை நிதியளித்தல் வசதிகளின் நோக்கில் அரசாங்கத்தின் வெளிநாட்டு கடன் பொறுப்புநிலைமை அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது. மேலும், இலங்கை இறக்குமதியாளர்களால் பெற்றுக்கொள்ளப்பட்ட செலுத்தவேண்டிய வர்த்தகக் கொடுகடன்கள் 2021ஆம் ஆண்டுகாலப்பகுதியில் வீழ்ச்சியடைந்த அதேவேளை ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்துடன்

தொடர்புபட்ட மத்திய வங்கியின் பொறுப்புக்களின் அதிகரிப்புடன் ஏனைய செலுத்தத்தக்க கணக்குகளின் செலுத்தவேண்டிய நிலையும் அதிகரித்தது.

## 5.6.1 ஒதுக்குச் சொத்துநிலைமை

**மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2020 இறுதியில் பதிவாகிய ஐ.அ.டொலர் 5.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியில் ஐ.அ.டொலர் 3.1 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது.** மொத்த அலுவல்சார் ஒதுக்கில் ஏற்பட்ட வீழ்ச்சியானது குறிப்பிடத்தக்க வெளிநாட்டு நாணய படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் மற்றும் ஆண்டுகாலப்பகுதியில் வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களை மிதமடையச்செய்யும் நோக்கில் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கியின் தலையீடு என்பவற்றின் ஒன்றிணைந்த விளைவாகவிருந்தது. ஆண்டுகாலப்பகுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளை மீளமைப்பதற்கு உதவிய முக்கிய உட்பாய்ச்சல்களாக சீன அபிவிருத்தி வங்கியிடமிருந்து கிடைத்த ஏறத்தாழ ஐ.அ.டொலர் 810 மில்லியன் கொண்ட இரண்டு வெளிநாட்டு நாணயத் தவணை நிதியளித்தல் வசதிகள், பன்னாட்டு நாணய நிதியத்தின் மூலமான ஏறத்தாழ ஐ.அ.டொலர் 787 மில்லியன் கொண்ட சிறப்பு எடுப்பனவு உரிமைகள் ஒதுக்கீடு மற்றும் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1.5 பில்லியன் (சீன யுவான் 10 பில்லியன்), கொண்ட சீன மக்கள் வங்கியுடனான அத்துடன் ஐ.அ.டொலர் 200 மில்லியன் கொண்ட வங்காளதேச வங்கியுடனான இருதரப்பு நாணயப் பரஸ்பரப் பரிமாற்றல் ஒப்பந்த வசதிகள் என்பன உள்ளடங்கியிருந்தன. எனினும், ஆண்டுகாலப்பகுதியில் முதிர்ச்சியடைந்த நாட்டிற்கான பன்னாட்டு முறி மீள்கொடுப்பனவு (ஐ.அ.டொலர் 1.0 பில்லியன்), வெளிநாட்டுக் கருத்திட்டக் கடன்கள் அத்துடன் வெளிநாட்டு நாணயத் தவணை நிதியளித்தல் வசதிகளுடன் தொடர்புடைய முதன்மை மற்றும் வட்டிக்கொடுப்பனவுகள் (ஐ.அ.டொலர் 2.2 பில்லியன்), இலங்கை அபிவிருத்தி முறிகள் மற்றும் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளிலிருந்தான கடன்கள் என்பவற்றுக்கான மூலதன மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் (ஐ.அ.டொலர் 2.3 பில்லியன்) உள்ளடங்கலாக கணிசமான வெளிநாட்டு நாணய படுகடன் தீர்ப்பனவுகள் அத்துடன் அத்தியாவசிய இறக்குமதிச் செலவுகளுக்கு நிதியளிப்பதற்கு வெளிநாட்டுச் செலாவணியை வழங்கல் செய்வதன் வாயிலாக உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் மத்திய வங்கியின் தலையீடு என்பன மொத்த அலுவல்சார் ஒதுக்கு மட்டத்தின் வீழ்ச்சிக்கு பிரதானமாக பங்களித்தன. ஆண்டின் இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குமட்டம் 1.8 மாதங்களுக்கான இறக்குமதிகளுக்கு (2020இல் 4.2 மாதங்களுக்கான இறக்குமதிகள்) போதுமானதாகவும் எஞ்சியிருக்கின்ற முதிர்ச்சி அடிப்படையில் நாட்டின் குறுகியகால படுகடன் மற்றும் பொறுப்புக்களின் 23 சதவீதத்திற்கு (2020இல் 43 சதவீதம்) சமமானதாகவும் காணப்பட்டது. அதேவேளை, வைப்பு ஏற்கின்ற நிறுவனங்களின் வெளிநாட்டுச் சொத்து உரித்துகள் மிதமான அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்த போதிலும் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் வீழ்ச்சி காரணமாக மொத்த அலுவல்சார் ஒதுக்குகளையும் வங்கித்தொழில்துறையின் வெளிநாட்டு சொத்துக்களையும் உள்ளடக்குகின்ற மொத்தப் பன்னாட்டு ஒதுக்குகளும் 2021ஆம் ஆண்டின் இறுதியை நோக்கி வீழ்ச்சியடைந்தன. நாட்டின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 2020இல் 6.4 மாதங்களுக்கான இறக்குமதிகளுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டின் இறுதியளவில் 3.6 மாத இறக்குமதிகளுக்கு போதுமானதாகவிருந்தது.

அட்டவணை 5.12
மொத்த அலுவல்சார் ஒதுக்குகள், மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் மற்றும் திரண்ட நிலுவை


ஐ.அ.டொலர் மில்லியன்
(கால இறுதியிலான நிலைமை)

| விடயம் | 2017 | 2018 | 2019 | 2020 | 2021(அ) |
|---|---|---|---|---|---|
| 1. அரசின் வெளிநாட்டு சொத்துக்கள் | 488 | 817 | 386 | 155 | 177 |
| 2. மத்திய வங்கியின் வெளிநாட்டு சொத்துக்கள் | 7,470 | 6,102 | 7,256 | 5,510 | 2,962 |
| **3. மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் (1+2)** | **7,959** | **6,919** | **7,642** | **5,664** | **3,139** |
| 4. வைப்புக்களை ஏற்கும் கூட்டுத் தாபனங்களின் வெளிநாட்டு சொத்துக்கள் | 2,478 | 2,664 | 2,760 | 2,856 | 2,983 |
| **5. மொத்த வெளிநாட்டு சொத்துக்கள் (3+4) (ஆ)** | **10,436** | **9,583** | **10,402** | **8,521** | **6,122** |
| 6. ஒதுக்குடன் தொடர்புடைய பொறுப்புக்கள் (இ) | 1,361 | 1,425 | 1,771 | 2,121 | 3,562 |
| **7. தேறிய பன்னாட்டு ஒதுக்குகள் (3-6)** | **6,597** | **5,495** | **5,871** | **3,543** | **-423** |
| **8. திரண்ட நிலுவை (ஈ)** | **2,068** | **-1,103** | **377** | **-2,328** | **-3,967** |
| 9. மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மாதங்களின்படி: | | | | | |
| 9.1 பொருட்களின் இறக்குமதிகள் | 4.6 | 3.7 | 4.6 | 4.2 | 1.8 |
| 9.2 பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதிகள் | 3.8 | 3.1 | 3.7 | 3.7 | 1.8 |
| 10. மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் மாதங்களின்படி: | | | | | |
| 10.1 பொருட்களின் இறக்குமதிகள் | 6.0 | 5.2 | 6.3 | 6.4 | 3.6 |
| 10.2 பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதிகள் | 4.9 | 4.3 | 5.1 | 5.6 | 3.4 |

(அ) தற்காலிகமானது
(ஆ) 'வெளிநாட்டில் நேரடி முதலீடு' மற்றும் 'வழங்கப்பட்ட வர்த்தகக்கடன் மற்றும் முற்பணங்கள்' வடிவிலுள்ள வெளிநாட்டுச் சொத்துக்கள் நீங்கலாக
(இ) வெளிநின்ற சிறப்பு எடுப்பனவு உரிமைகள் நீங்கலாக மத்திய வங்கியின் மொத்த வெளிநின்ற படுகடன்
(ஈ) ஆண்டுக்காலப்பகுதியில் தேறிய பன்னாட்டு ஒதுக்கு நிலைமையின் மாற்றம்

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 5.12
காலாண்டுக்கான மொத்த அலுவல்சார் ஒதுக்குகளும் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்களும்




*மூலம்* : இலங்கை மத்திய வங்கி


5

## 5.7 வெளிநாட்டுப் படுகடன் மற்றும் படுகடன் தீர்ப்பனவுகள்

### 5.7.1 வெளிநாட்டுப் படுகடன்

**இலங்கையின் மொத்த வெளிநாட்டுப் படுகடன் நிலை பிரதானமாக மத்திய வங்கியின் மற்றும் வைப்பு ஏற்கும் நிறுவனங்களின் வெளிநாட்டுப் படுகடன் அதிகரிப்புடன் 2021இல் உயர்வடைந்தது.** நாட்டின் மொத்த வெளிநாட்டுப் படுகடனானது 2020 இறுதியில் ஐ.அ.டொலர் 49.0 பில்லியனிலிருந்து 2021 இறுதியில் ஐ.அ.டொலர் 50.7 பில்லியனுக்கு அதிகரித்தது. பிரதானமாக சீன அபிவிருத்தி வங்கியிடமிருந்து பெற்றுக்கொண்ட இரண்டு வெளிநாட்டு நாணயத் தவணை நிதியளித்தல் வசதிகளின் கிடைப்பனவு காரணமாக அரசாங்கத்தின் மொத்த செலுத்தவேண்டிய வெளிநாட்டுக் கடன்களில் ஆண்டுகாலப்பகுதியில் அதிகரிப்பொன்று பதிவாகிய போதிலும், சந்தை விலையில் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்ட அரசாங்கத்தின் வெளிநாட்டுப் படுகடன் இருப்பானது 2020 இறுதியில் ஐ.அ.டொலர் 28.2 பில்லியனிலிருந்து 2021 இறுதியில் ஐ.அ.டொலர் 27.3 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. இது, இலங்கையின் வெளிநிற்கின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் சந்தை விலைகளில் வீழ்ச்சி அத்துடன் 2021 யூலையில் முதிர்ச்சியடைந்த நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் மீள்கொடுப்பனவு என்பவற்றின் ஒன்றிணைந்த விளைவின் பெறுபேறாக அமைந்திருந்தது. 2021ஆம் ஆண்டின் வெளிநின்ற அரசாங்க படுகடனின் குறைவுக்கு பிரதான காரணமாக பன்னாட்டு சந்தைகளிலிருந்தான புதிய கடன்பெறுகைகளின் பற்றாக்குறை காணப்பட்ட அதேவேளை, அரசாங்கத்தின் சில வெளிநாட்டு படுகடன் கடப்பாடுகள் மத்திய வங்கியின் ஒதுக்குகளை பயன்படுத்துவதன் மூலம் மீளச் செலுத்தப்பட்டது. அதேவேளை, 2020ஆம் ஆண்டில் பெற்றுக்கொண்ட இந்திய ரிசேர்வ் வங்கியுடனான பன்னாட்டு நாணயப் பரஸ்பரப் பரிமாற்றல் வசதி ஆண்டுகாலப்பகுதியில் மீளக்கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் வங்காளதேச வங்கி மற்றும் சீன மக்கள் வங்கி என்பவற்றுடன் புதிய இருதரப்பு நாணயப் பரஸ்பரப் பரிமாற்றல் ஒப்பந்த ஏற்பாடுகள் காரணமாக 2020 இறுதியுடன் ஒப்பிடுகையில்

வரைபடம் 5.13
வெளிநாட்டுப் படுகடன்




*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 5.13
வெளிநின்ற வெளிநாட்டு படுகடனின் நிலை

ஐ.அ.டொ.மில்லியன்
(கால இறுதியிலான நிலைமை)

| வகை | 2020(ஆ) | 2021(ஆ) |
|---|---|---|
| **பொது அரசாங்கம்** | **28,187** | **27,344** |
| **குறுங்காலம்** | 4 | 1 |
| படுகடன் பிணையங்கள் | 4 | 1 |
| திறைசேரி உண்டியல்கள் (இ) | 4 | 1 |
| **நீண்ட காலம்** | **28,183** | **27,343** |
| படுகடன் பிணையங்கள் | 7,613 | 6,265 |
| திறைசேரி முறிகள் (இ) | 31 | 8 |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் (ஈ) | 27 | 24 |
| நாட்டுக்கான பன்னாட்டு முறிகள் (உ) | 7,555 | 6,233 |
| கடன்கள் | 20,570 | 21,077 |
| **மத்திய வங்கி** | **2,690** | **4,892** |
| **குறுங்காலம்** | **343** | **524** |
| நாணயம் மற்றும் வைப்புக்கள் | ... | 1 |
| ஏனைய கொடுபடத்தக்க கணக்குகள் | 343 | 523 |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறுப்புக்கள் | 343 | 523 |
| **நீண்ட காலம்** | 2,348 | 4,368 |
| சிறப்பு எடுப்பனவு உரிமை ஒதுக்குகள் | 570 | 1,330 |
| நாணயம் மற்றும் வைப்புக்கள் | 400 | 1,774 |
| கடன்கள் | 1,378 | 1,265 |
| ப.நா.நி உடனான கொடுகடன் மற்றும் கடன்கள் | 1,378 | 1,265 |
| விரிவாக்கப்பட்ட நிதிய வசதி மற்றும் அவசர உதவி | 1,378 | 1,265 |
| **வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள்** | **6,657** | **7,146** |
| **குறுங்காலம்** | **5,507** | **5,979** |
| நாணயம் மற்றும் வைப்புக்கள் (ஊ) | 1,333 | 3,974 |
| வர்த்தக வங்கிகள் | 1,333 | 3,974 |
| கடன்கள் | 4,174 | 2,005 |
| வர்த்தக வங்கிகள் | 4,174 | 2,005 |
| **நீண்ட காலம்** | **1,150** | **1,167** |
| கடன்கள் | 1,150 | 1,167 |
| வர்த்தக வங்கிகள் | 1,109 | 1,084 |
| ஏனைய வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 41 | 83 |
| **ஏனைய துறைகள் (எ)** | **6,517** | **6,078** |
| **குறுங்காலம்** | **2,341** | **1,913** |
| வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்கள் (ஏ) | 2,341 | 1,913 |
| **நீண்ட காலம்** | **4,176** | **4,165** |
| படுகடன் பிணையங்கள் (உ) | 96 | 94 |
| கடன்கள் | 4,081 | 4,071 |
| தனியார் துறை கூட்டுத்தாபனங்கள் | 2,315 | 2,425 |
| அரசிற்கு சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளும் அரச கூட்டுத்தாபனங்களும் | 1,766 | 1,646 |
| **நேரடி முதலீடு : கம்பனிகளுக்கிடையிலான கடன் வழங்கல் (ஐ)** | **4,990** | **5,264** |
| **மொத்த வெளிநாட்டு படுகடன் நிலைமை** | **49,041** | **50,724** |
| **மொ.உ.உ. சதவீதமாக** | | |
| மொத்த வெளிநாட்டு படுகடன் | 60.5 | 60.0 |
| குறுங்கால படுகடன் | 10.1 | 10.0 |
| நீண்டகால படுகடன் | 50.4 | 50.0 |
| **மொத்த வெளிநாட்டு படுகடனின் சதவீதமாக** | | |
| குறுங்கால படுகடன் | 16.7 | 16.6 |
| நீண்டகால படுகடன் | 83.3 | 83.4 |
| **ஞாபகார்த்த விடயங்கள்** | | |
| **படுகடன் பிணையங்கள்-முகப்பெறுமதியில் துறைவாரியான பகுப்பாய்வு** | **12,058** | **11,400** |
| பொது அரசாங்கம் | 11,883 | 11,225 |
| திறைசேரி உண்டியல்கள் | 4 | 1 |
| திறைசேரி முறிகள் | 33 | 9 |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் | 27 | 24 |
| நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் | 11,820 | 11,191 |
| ஏனைய துறைகள் | 175 | 175 |
| **நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் முகப்பெறுமதி** | **14,050** | **13,050** |
| வதிவற்றோரினால் வைத்திருக்கப்படும் நாட்டுக்கான பன்னாட்டு முறிகள் | 11,820 | 11,191 |
| வதிவுள்ளோரினால் வைத்திருக்கப்படும் வெளிநின்ற நாட்டுக்கான பன்னாட்டு முறிகள் (2019 திசெம்பரில் முதல் வெளிநாட்டுப் படுகடன் புள்ளிவிபரங்களிலிருந்து நீக்கப்பட்டுள்ளன) | 2,230 | 1,859 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) புத்தகப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டது
(ஈ) முகப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டது
(உ) சந்தை விலைகளை அடிப்படையாகக் கொண்டது
(ஊ) வெளிநாட்டு நாணயங்களை வைத்திருக்கும் வதிவற்றோரின் வைப்புக்களை உள்ளடக்கியுள்ளது
(எ) தனியார் துறை மற்றும் அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சிகளை உள்ளடக்கியுள்ளது
(ஏ) இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் தனியார் துறை கம்பனிகளின் வெளிநின்ற வர்த்தக கொடுகடனை உள்ளடக்கியுள்ளது
(ஐ) முதலீட்டுச்சபையில் பதிவு செய்யப்பட்ட கம்பனிகளின் கம்பனிகளுக்கிடையிலான கடன் பெறுகைகள் மற்றும் பங்குதாரர் முற்பணங்கள் உள்ளடங்கலாக

*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

5

2021 இறுதியில் மத்திய வங்கியின் செலுத்தவேண்டிய வெளிநாட்டுப் படுகடன் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. குறுகிய கால கடன்களின் நிலை குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தபோதிலும், நாணய மற்றும் வைப்புகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக் காரணமாக வைப்பு ஏற்கின்ற நிறுவனங்களின் செலுத்தவேண்டிய வெளிநாட்டுப் படுகடன் கணிசமாக அதிகரித்தது. அதேவேளை தனியார் துறையினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டுக் கடன்களின் அதிகரிப்புக்கு மத்தியிலும் தனியார் துறைக்கு கிடைக்கப்பெற்ற செலுத்தவேண்டிய வர்த்தக கொடுகடன்களின் குறைவுடனும் அரசுக்குச் சொந்தமான வியாபார தொழல்முயற்சிகளின் வெளிநாட்டுக் கடன்களின் மீள்கொடுப்பனவுடனும் இணைந்து 2021ஆம் ஆண்டில் தனியார் துறையினதும் அரசுக்குச் சொந்தமான வியாபார முயற்சிகளினதும் செலுத்தவேண்டிய வெளிநாட்டுப் படுகடன் வீழ்ச்சியடைந்தது. மேலும், ஆண்டுகாலப்பகுதியில் நேரடி முதலீட்டுக் கம்பனிகளில் அநேகமானவை கம்பனிகளுக்கிடையிலான கடன்களையும் பங்குடமையாளர் முற்பணங்களையும் பெற்றுக்கொண்டமை மூலம் நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளின் கம்பனிகளுக்கிடையிலான கடன்பெறுதல் 2021 காலப்பகுதியில் அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது.

**மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக நாட்டின் மொத்த செலுத்தவேண்டிய வெளிநாட்டுப் படுகடன் ஆண்டு காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தது.** மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக நாட்டின் மொத்த செலுத்தவேண்டிய வெளிநாட்டுப் படுகடன் 2020 இறுதியில் அறிக்கையிடப்பட்ட 60.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியில் 60.0 சதவீதமாகக் காணப்பட்டு 2020 உடன் ஒப்பிடுகையில் 2021 காலப்பகுதியில் பெயரளவு உள்நாட்டு உற்பத்தியில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியில் அதிகரிப்பொன்றினைப் பிரதிபலிக்கின்றது. மொத்த வெளிநாட்டுப் படுகடன் நிலையில் அரசாங்கத்தின் செலுத்தவேண்டிய வெளிநாட்டுப் படுகடன் நிலை 2020 இறுதியில் பதிவாகிய 57.5 சதவீதத்திலிருந்து 2021 இறுதியில் 53.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. படுகடன் முதிர்ச்சித் தொகுப்பு நியதிகளில் நீண்டகால முதிர்ச்சியுடன் கூடிய படுகடன், 2020 இறுதியளவில் இருந்த மொ.உ.உற்பத்தியின் 50.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியளவில் மொ.உ.உற்பத்தியின் 50.0 சதவீதத்திற்கு சிறிதளவு வீழ்ச்சியடைந்தது.

### 5.7.2 வெளிநாட்டு படுகடன் பணிக் கொடுப்பனவுகள்

**மூலதன மீள்கொடுப்பனவுகளில் சிறிதளவு அதிகரிப்புக்கு மத்தியில் வட்டிக் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட குறைவு காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் 2021ஆம் ஆண்டில் வீழ்ச்சியடைந்தன.** வெளிநாட்டுப் படுகடன் மீதான மூலதனக் கொடுப்பனவுகள் 2020ஆம் ஆண்டில் பதிவாகிய ஐ.அ.டொலர் 3.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 3.1 பில்லியனுக்கு அதிகரித்தன. 2021ஆம் ஆண்டில் மூலதன மீள்கொடுப்பனவுகள், இந்திய ரிசேர்வ் வங்கியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட இருதரப்பு நாணயப் பரஸ்பரப் பரிமாற்றல் ஒப்பந்த வசதியினை உள்ளடக்கியிருந்தன. மேலும், 2021 காலப்பகுதியில் முதிர்ச்சியடைந்த ஐ.அ.டொலர் ஒரு பில்லியன் பெறுமதியுடைய நாட்டிற்கான பன்னாட்டு முறியில் ஐ.அ.டொலர் 700 மில்லியன் முதிர்ச்சியின் அடிப்படையில் வதியாதோர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்ட அதேவேளை எஞ்சிய தீர்ப்பனவுகளை வதிவோர் பெற்றனர். ஆண்டுகாலப்பகுதியில் அரசாங்கத்தின் வெளிநாட்டுக்கடன்களின் மூலதனக் கொடுப்பனவுகள் சிறிதளவு அதிகரித்தன. அதேவேளை, தனியார்துறை, அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் மற்றும் வைப்பு ஏற்கின்ற நிறுவனங்கள் மூலமான வெளிநாட்டுக் கடன்களின் மூலதன மீள்கொடுப்பனவுகள், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுகாலப்பகுதியில் கணிசமாக வீழ்ச்சியடைந்தன. ஆண்டுகாலப்பகுதியில் மத்திய வங்கியானது சென்மதி நிலுவை ஆதரவளித்தல் வழியொன்றாக பன்னாட்டு நாணய நிதியத்திடமிருந்து 2016இல் பெற்றுக்கொள்ளப்பட்ட நீடிக்கப்பட்ட நிதி வசதியுடன் தொடர்புடைய கடன் தவணைக் கொடுப்பனவுகளைத் தொடர்ந்தும் மீளச்செலுத்தியது. வெளிநாட்டுப் படுகடன் மீதான வட்டிக்கொடுப்பனவுகள் 2020ஆம் ஆண்டின் ஐ.அ.டொலர் 1.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 1.4 பில்லியனுக்கு ஆண்டுகாலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன. இதற்கு, ஆண்டுகாலப்பகுதியில் வதியாதோருக்குவழங்கப்பட்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் கூப்பன் கொடுப்பனவுகளின் வீழ்ச்சி, ரூபா பெயர் குறிக்கப்பட்ட அரசாங்கப் பிணையங்கள் சந்தையில் வெளிநாட்டு முதலீட்டுகள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் மற்றும் அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டிக்கொடுப்பனவுகள் என்பன காரணமாக அமைந்தன. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் வணிகப்பொருள் ஏற்றுமதிகள் மற்றும் பணிகளிலிருந்தான வருவாய்களின் அதிகரிப்பினதும் வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளின் வீழ்ச்சியினதும் இணைந்த தாக்கத்தின் காரணமாக பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதியின் சதவீதமாக மொத்த வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் 2020ஆம் ஆண்டின் 35.2 சதவீதத்திலிருந்து 2021ஆம் ஆண்டில் 30.0 சதவீதத்திற்கு குறைவடைந்தது. அரசாங்கத்தின் வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகளின் பங்கும் 2020ஆம் ஆண்டின் 86.5 சதவீதத்திலிருந்து 2021இல் மொத்த வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவின் 81.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

## 5.8 செலாவணி வீத அசைவுகள்

**இலங்கை ரூபா, 2022ஆம் ஆண்டின் மாச்சு ஆரம்பப்பகுதியில் செலாவணி வீதத்தில் சீராக்கமொன்றை இடமளிப்பதற்கு முன்னர் 2021 காலப்பகுதியிலும் 2022ஆம் ஆண்டின் ஆரம்பகாலத்திலும் பரந்தளவில் நிலையான மட்டத்திலேயே காணப்பட்டது.** உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மட்டுப்படுத்தப்பட்ட வெளிநாட்டு நாணய திரவத்தன்மை காரணமாக, குறிப்பாக 2021ஆம் ஆண்டின் முதல் நான்கு காலப்பகுதியின்போது தேய்வுறுவதற்கான அழுத்தத்துடன் ரூபா சில தளம்பலை வெளிக்காட்டியது. இறக்குமதிச் செலவுகளை நிறைவுசெய்வதற்கான

அட்டவணை 5.14
வெளிநாட்டுப் படுகடன் பணிக்கொடுப்பனவுகள்

ரூபா.மில்லியன்

| வகை | 2020 (அ) | 2021 (ஆ) |
|---|---|---|
| **1. படுகடன் பணிக் கொடுப்பனவுகள்** | **4,604** | **4,498** |
| **1.1 கடன் தவணைக் கொடுப்பனவு** | **3,004** | **3,111** |
| பொது அரசாங்கம் | 2,577 | 2,460 |
| செயற்றிட்டக் கடன்கள் | 1,713 | 1,754 |
| படுகடன் பிணையங்கள் | 864 | 706 |
| மத்திய வங்கி | 14 | 457 |
| பன்னாட்டு நாணய நிதியம் | 14 | 57 |
| பரஸ்பர பரிமாற்றல் மற்றும் ஏனைய பொறுப்புகள் | - | 400 |
| தனியார் துறை மற்றும் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 412 | 193 |
| வெளிநாட்டு கடன்கள் | 412 | 193 |
| **1.2 வட்டிக்கொடுப்பனவுகள்** | **1,601** | **1,388** |
| பொது அரசாங்கம் | 1,405 | 1,187 |
| செயற்றிட்ட கடன்கள் | 497 | 394 |
| படுகடன் பிணையங்கள் | 908 | 793 |
| மத்திய வங்கி | 19 | 15 |
| பன்னாட்டு நாணய நிதியம் | 18 | 15 |
| பரஸ்பர பரிமாற்றல் மற்றும் ஏனைய பொறுப்புகள் | 2 | 1 |
| தனியார் துறை மற்றும் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 167 | 175 |
| வெளிநாட்டு கடன்கள் | 167 | 175 |
| நேரடி முதலீட்டு தொழில் முயற்சிகளின் கம்பனிகளுக்கிடையிலான படுகடன் | 10 | 11 |
| **2. பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதியிலிருந்தான வருவாய்கள்** | **13,083** | **14,974** |
| **3. பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகள் வருமானம் மற்றும் நடைமுறை மாற்றல்களிலிருந்தான பெறுகைகள்** | **20,398** | **20,587** |
| **4. படுகடன் பணி விகிதம்** | | |
| 4.1 மேலுள்ள 2இன் சதவீதமாக | | |
| ஒட்டு மொத்த விகிதம் | 35.2 | 30.0 |
| ப.நா.நி. கொடுக்கல் வாங்கல்கள் நீங்கலாக | 35.0 | 29.6 |
| 4.2 மேலுள்ள 3இன் சதவீதமாக | | |
| ஒட்டு மொத்த விகிதம் | 22.6 | 21.8 |
| ப.நா.நி. கொடுக்கல்வாங்கல்கள் நீங்கலாக | 22.4 | 21.5 |
| **5. அரச படுகடன் பணிக் கொடுப்பனவுகள்** | | |
| 5.1 அரச படுகடன் பணிக் கொடுப்பனவுகள் (இ) | 3,982 | 3,648 |
| 5.2 மேலுள்ள 1இன் சதவீதமாக | 86.5 | 81.1 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) பன்னாட்டு நாணய நிதியத்துடனான கொடுக்கல்வாங்கல்கள் நீங்கலாக

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

தொடர்ச்சியான வெளிப்பாய்ச்சல்களுக்கும் அரசாங்கத்தின் படுகடன் பணித் தீர்ப்பனவுத் தேவைப்பாடுகளுக்கும் மத்தியில் படுகடன் மற்றும் படுகடனற்ற உட்பாய்ச்சல்கள் என்ற இருவடிவிலும் குறைவடைந்த வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள் இதற்கு பெருமளவில் காரணங்களாக அமைந்தன. உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கியின் தலையீடு மற்றும் தொடர்ச்சியான தார்மீக நெறிமுறைகள் என்பன ஆண்டின் எஞ்சிய காலப்பகுதியிலும் அதேபோன்று 2022ஆம் ஆண்டின் சில மாதங்களிலும் இலங்கை ரூபாவின் வெளிநாட்டுப் பெறுமதியினை நிலைநிறுத்துவதற்கு உதவின. அதற்கமைய, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட ஆதரவுடன், மத்திய வங்கியின் ஈடுபாட்டுடன் வங்கிகளுக்கிடையிலான சந்தையில் நிறையேற்றப்பட்ட சராசரி உடனடி செலாவணிவீதம் 2021ஆம் ஆண்டின் பிந்திய காலப்பகுதியில் ஐ.அ.டொலர் ஒன்றுக்கு ஏறத்தாழ ரூபா 200-203 ஆகப் பரந்தளவில் உறுதியாகக் காணப்பட்டது. ஆகையினால், 2021 இறுதியில் ரூபாவின் வருடாந்த தேய்மானம் ஐ.அ.டொலருக்கெதிராக 7.0 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இது உலகளாவிய நோய்த்தொற்றிலிருந்து நாசம் விளைவிக்கும் அதிர்விலிருந்து மீட்சியடைகின்ற போக்கில் பொருளாதாரம் காணப்பட்ட காலத்தில் நாணயத்தின் மிதமிஞ்சிய தேய்மானத்தின் பாதகமான விளைவுகளைத் தணிப்பதற்கு உதவியது. உள்நாட்டு வெளிநாட்டுச் சந்தையில் அவதானிக்கப்பட்ட அழுத்தங்களுக்கு வெளிநாட்டுச் செலாவணியை உழைப்போர்களால் வெளிநாட்டுச் செலாவணி வருவாய்கள் போதியளவு மாற்றப்படாமை பகுதியளவில் காரணமாக அமைந்திருக்கலாம். ஏற்றுமதிப் பெறுகைகளின் கட்டாயமாக மாற்றுதல் தேவைப்படுத்தல்கள் மீதான ஒழுங்குவிதிகளை விதித்தமையுடன் உள்நாட்டுச் சந்தையில் வெளிநாட்டுச் செலாவணி திரவத்தன்மை நிலைமை ஓரளவிற்கு மேம்பட்டது. அதேவேளை, குறுக்கு நாணய செலாவணி வீத அசைவுகளைப் பிரதிபலித்து 2021 காலப்பகுதியில் இலங்கை ரூபா ஜப்பான் யென் (3.8 சதவீதம்) மற்றும் யூரோ (1.1 சதவீதம்) என்பவற்றுக்கெதிராக உயர்வடைந்ததுடன், ஸ்ரேலிங் பவுன் (6.0 சதவீதம்) மற்றும் இந்திய ரூபா (5.5 சதவீதம்) என்பவற்றுக்கெதிராகத் தேய்வடைந்தது. 2022ஆம் ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் உயர்தர தார்மீக நெறிமுறைகள் காரணமாக இலங்கை ரூபா பரந்தளவில் நிலையானதாகக் காணப்பட்டது. எனினும், 2021இலும் 2022 ஆரம்பப்பகுதியிலும் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் இறுக்கமடைந்த திரவத்தன்மைக்கு மத்தியில் செலாவணி வீதத்தில் அனுமதிக்கப்பட்ட அளவிடப்பட்ட சீராக்கமொன்றை தேவைப்படுத்தின. எனினும், அதற்கு பின்னர் 2022 மாச்சின் ஆரம்பப்பகுதியில் அனுமதிக்கப்பட்ட செலாவணிவீத நெகிழ்ச்சித்தன்மையின் பெறுபேறானது சந்தை அழுத்தங்களால் ஏற்பட்ட பாரிய விஞ்சுதல் காரணமாக குறைந்த எதிர்பார்பை உணரச்செய்தது. அதற்கமைய, 2022 மாச்சு இறுதியளவில் இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக 33 சதவீதத்தினால் தேய்வடைந்தது. அத்தகைய அபிவிருத்திகளானது, ஏனைய தொடர்புடைய ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டுப்பாடுகளை அகற்றுதல் மற்றும் புதிதாக விதிக்கப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகள் என்பவற்றுடன் இணைந்து, குறிப்பாக ஏற்றுமதியாளர்களுக்கும் பணவனுப்புவோருக்கும் தேறிய ஈட்டலை ஏற்படுத்தும் அதேவேளை அவசியமற்ற இறக்குமதிகளையும் ஏனைய வெளிப்பாய்ச்சல்களையும் ஊக்கமிழக்கச செய்வதன் காரணமாக போன்றன உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தைக்கு அதிக வெளிநாட்டு உட்பாய்ச்சல்களைத் தூண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. குறுக்கு நாணய செலாவணி வீதத்தை பிரதிபலித்து இலங்கை ரூபா 2022 மாச்சு இறுதியளவில் யூரோ (32.1 சதவீதம்), ஸ்ரேலிங்பவுன் (31.1 சதவீதம்), இந்திய ரூபா (31.7 சதவீதம்) மற்றும் ஜப்பானிய யென் (28.9 சதவீதம்) ஆகிய நாணயங்களுக்கெதிராக தேய்வடைந்தது.

அட்டவணை 5.15
செலாவணி வீத அசைவுகள்

| நாணயம் | வெளிநாட்டு நாணய அலகு ஒன்றிற்கான ரூபா | | | | | | முன்னைய ஆண்டுடனான சதவீத மாற்றம் (அ) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண்டிறுதி வீதம் | | | ஆண்டுச் சராசரி வீதம் | | | ஆண்டிறுதி | | ஆண்டுச் சராசரி | |
| | 2019 | 2020 | 2021 | 2019 | 2020 | 2021 | 2020 | 2021 | 2020 | 2021 |
| யூரோ | 203.67 | 229.42 | 226.86 | 200.14 | 212.07 | 235.10 | -11.23 | 1.13 | -5.62 | -9.80 |
| இந்திய ரூபா | 2.55 | 2.55 | 2.69 | 2.54 | 2.50 | 2.69 | 0.00 | -5.45 | 1.46 | -6.95 |
| யப்பானிய யென் | 1.67 | 1.81 | 1.74 | 1.64 | 1.74 | 1.81 | -7.54 | 3.82 | -5.65 | -3.96 |
| ஸ்டேர்லிங் பவுண் | 238.46 | 254.35 | 270.60 | 228.20 | 238.22 | 273.51 | -6.25 | -6.00 | -4.21 | -12.90 |
| ஐ.அ.டொலர் | 181.63 | 186.41 | 200.43 | 178.78 | 185.52 | 198.88 | -2.56 | -7.00 | -3.64 | -6.72 |
| சிறப்பு எடுப்பனவு உரிமை (சி.எ.உ.) | 251.17 | 268.48 | 280.53 | 246.97 | 258.61 | 283.18 | -6.45 | -4.29 | -4.50 | -8.68 |
| தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் (ஆ) (இ) | ஆண்டிறுதி சுட்டெண் | | | ஆண்டுச் சராசரி சுட்டெண் | | | முன்னைய ஆண்டை விட சதவீத மாற்றம் | | | |
| | | | | | | | ஆண்டிறுதி சுட்டெண் | | ஆண்டுச் சராசரி சுட்டெண் | |
| (2017=100) | 2019 | 2020 | 2021 | 2019 | 2020 | 2021 | 2020 | 2021 | 2020 | 2021 |
| பெ.தா.செ.வீ 24 - நாணயங்கள் | 86.74 | 83.12 | 79.65 | 88.17 | 85.93 | 78.64 | -4.17 | -4.18 | -2.54 | -8.48 |
| உ.தா.செ.வீ 24 - நாணயங்கள் | 90.74 | 88.37 | 86.06 | 90.42 | 91.52 | 86.13 | -2.61 | -2.61 | 1.22 | -5.90 |

(அ) இலங்கை ரூபாவின் வெளிநாட்டு நாணயங்களிற்கு சமமான அடிப்படையில் மாற்றங்கள் கணிக்கப்பட்டுள்ளன. (-) அடையாளம் என்பது ஒவ்வொரு நாணயத்துக்கும் எதிரான இலங்கை ரூபாவின் தேய்மானத்தை குறிப்பிடுகின்றது.

(ஆ) பெயரளவு தாக்கமுள்ள செலாவணி வீதமென்பது (பெ.தா.செ.வீ) 24 வர்த்தகப் பங்காளர்கள் மற்றும் போட்டி நாடுகளின் பெயரளவுச் நாணயமாற்று வீதத்தின் நிறையேற்றப்பட்ட சராசரியாகும். ஒவ்வொரு நாணய கூடைகளிலுள்ள ஒவ்வொரு நாணயத்தினதும் ஒப்பீட்டு ரீதியான முக்கியத்துவத்தினை பிரதிபலிக்கும் வர்த்தகப் பங்குகளின் அடிப்படையில் நிறையிடப்பட்டது. நாணயக் கூடையிலுள்ள ஒவ்வொரு நாணயத்துடனும் தொடர்புடைய பணவீக்க வேறுபாடுகளுக்காக பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதங்களை சீராக்குவதன் மூலமாக உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதம் (உ.தா.செ.வீ) கணிக்கப்படுகின்றது. கழித்தல் அடையாளம் பெறுமானத் தேய்வினைக் குறிப்பிடுகின்றது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் உண்மை தாக்கமுள்ள நாணயமாற்று வீதத்தை கணிப்பிட பயன்படுத்தப்பட்டது.

(இ) நாணயமாற்று வீதமானது சுட்டெண்களின் அடிப்படையில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டதனால் ஏனைய நாணயங்களுடன் ஒப்பிடும்போது ரூபாவின் பெறுமதி உயர்வு/பெறுமதி தேய்வு என்பது தாக்கமுள்ள நாணயமாற்று வீதங்களின் சுட்டெண்களின் பெறுமதிகளின் உயர்ச்சி/வீழ்ச்சியில் நேரடியாக பிரதிபலிக்கின்றது.


மூலம்: இலங்கை மத்திய வங்கி

**சக்தி விலைகளில் உயர்வடைந்த மேல்நோக்கிய தளம்பல், பங்குரிமை மூலதன கீழ்செயலாற்றுகை, ஐக்கிய அமெரிக்கா பெடரல் ரிசேர்வ் மூலமான கொள்கை வீத உயர்வுகள் அத்துடன் பாதுகாப்பான நாணயமாக ஐக்கிய அமெரிக்க டொலரை நாடுகின்ற முதலீட்டாளர்களுக்கான தொடர்ச்சியாக அழுத்தம் கொடுப்பதற்கான திரவத்தன்மை கரிசனைகள் போன்ற பல காரணிகளால், 2021ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் பரந்தளவில் வலுப்படுத்தப்பட்டதற்கமைவாக ஏனைய முக்கிய நாணயங்களும் ஐ.அ.டொலருக்கெதிராக தேய்வடைந்தன.** அதற்கமைய, 2021ஆம் ஆண்டின் இறுதியளவில் ஐ.அ.டொலருக்கெதிராக யப்பானிய யென் (10.4 சதவீதம்), யூரோ (8.0 சதவீதம்), இந்திய ரூபா (1.6 சதவீதம்) மற்றும் ஸ்ரேலிங் பவுன் (1.1 சதவீதம்) ஆகிய நாணயங்கள் தேய்வடைந்தன. அநேகமான முக்கிய நாணயங்களுக்கெதிராக ரூபாவின் தேய்மானத்தின் ஒன்றிணைந்த தாக்கத்துடன் 2021 காலப்பகுதியிலும் 2022 காலப்பகுதியில் மாச்சு இறுதிவரையிலும் இலங்கை ரூபா சிறப்பு எடுப்பனவு உரிமைக்கெதிராக முறையே 4.3 சதவீதத்தினாலும் 32.1 சதவீதத்தினாலும் தேய்வடைந்தது.

### 5.8.1 பெயரளவு மற்றும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதங்கள்


**நாணயங்கள் கூடைக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவுகளை அளவிடுகின்ற 5-நாணய மற்றும் 24-நாணய பெயரளவுத் தாக்கமுள்ள விளைவு செலாவணி வீதச் சுட்டெண்கள் ஆண்டுகாலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன.** குறுக்கு நாணய செலாவணி வீதங்களின் அசைவுகளுடன் இணைந்து தெரிவுசெய்யப்பட்ட முக்கிய நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் பெயரளவுத் தேய்மானத்தைப் பிரதிபலித்து பெயரளவு

வரைபடம் 5.14
செலாவணி வீத அசைவுகள்




*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 5.15
வங்கிகளுக்கிடையிலான முன்னோக்கிய நடவடிக்கைகளின் காலாண்டுக்கான அளவுகள்




மூலம் : இலங்கை மத்திய வங்கி

தாக்கமுள்ள செலாவணி வீத சுட்டெண்கள் வீழ்ச்சியடைந்தன. அதற்கமைய 5-நாணய மற்றும் 24-நாணய பெயரளவு தாக்கமுள்ள செலாவணி வீத குறிகாட்டிகள் 2021ஆம் ஆண்டில் முறையே 3.6 சதவீதத்தினாலும் 4.2 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. கூடையில் உள்ள பெயரளவு செலாவணி வீதங்களின் மாறுபாட்டினையும் அதேபோன்று நாடுகளுக்கிடையிலான பணவீக்க வேறுபாடுகளையும் கருத்திற்கொள்கின்ற உண்மைத் தாக்கமுள்ள செலாவணிவீதச் சுட்டெண்கள் கலந்த செயலாற்றங்களைக் காண்பித்தன. அதற்கமைய, 2021ஆம் ஆண்டில் 5-நாணய உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண் 6.9 சதவீதத்தினால் அதிகரித்த அதேவேளை, 24-நாணய உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச்சுட்டெண் 2.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. எனினும், 2021ஆம் ஆண்டில் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் பெரும்பாலும் அடிப்படையாண்டு மட்டத்திற்கு (2017=100) கீழ் காணப்பட்டு இலங்கை ரூபாவின் தொடர்ச்சியான போட்டித்தன்மையை எடுத்துக்காட்டியது. 2022 மார்ச்சில் செலாவணி வீதத்தின் சடுதியான தேய்மானத்துடன் பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீத மற்றும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீத சுட்டெண்கள் இரண்டும் கணிசமாக வீழ்ச்சியடைந்து ஐ.அ.டொலருக்கும் கூடையில் கருத்திற்கொள்ளப்பட்ட ஏனைய முக்கிய நாணயங்களுக்குமெதிராக இலங்கை ரூபா பெயரளவுத் தேய்வொன்றினைப் பிரதிபலித்தது. அதற்கமைய 2022 மாச்சு இறுதியில் 5-நாணய மற்றும் 24-நாணய பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீத மற்றும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீத சுட்டெண்கள் முறையே 31.9 சதவீதத்தினாலும், 31.1 சதவீதத்தினாலும், 32.1 சதவீதத்தினாலும் 35.1 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன.

5

### 5.8.2 உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை அபிவிருத்திகள்

**உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் பரிமாற்று அளவுகள் 2021ஆம் ஆண்டில் மேலும் வீழ்ச்சியடைந்தன.** அதற்கமைய, வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல்வாங்கல்களின் அளவு 2020ஆம் ஆண்டின் ஐ.அ.டொலர் 18,408 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 12,160 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. மொத்த உடனடி செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களின் அளவு 2020ஆம் ஆண்டின் ஐ.அ.டொலர் 10,445 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 5,852 மில்லியனுக்கு (மொத்த கொடுக்கல்வாங்கல்களின் 48.1 சதவீதம்) குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது. மொத்த முன்னோக்கிய கொடுக்கல்வாங்கல்களின் அளவும் 2020ஆம் ஆண்டின் ஐ.அ.டொலர் 7,964 மில்லியனிலிருந்து 2021ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 6,308 மில்லியனுக்கு குறைவடைந்தது. 2021ஆம் ஆண்டின் தேறிய அடிப்படையில் ஐ.அ.டொலர் 747 மில்லியனை வழங்குவதன் வாயிலாக மத்திய வங்கி உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் தலையிட்டது. ஆண்டுகாலப்பகுதியில் தேறிய தொகையானது ஐ.அ.டொலர் 1,253 மில்லியன் கொண்ட வழங்கலினதும் ஐ.அ.டொலர் 506 மில்லியன் கொண்ட கொள்வனவினதும் பெறுபேறாக அமைந்திருந்தது. 2022ஆம் ஆண்டின் முதற்காலாண்டில் தேறிய அடிப்படையில், ஐ.அ.டொலர் 265 மில்லியனை வழங்கியதன் மூலம் உள்நாட்டு வெளிநாட்டுச் சந்தையில் மத்திய வங்கி தலையிட்டது. மத்திய வங்கி தலையிட்டமை செலாவணி வீதத்தில் பாரிய தளம்பலைத் தவிர்ப்பதற்கு உதவியதுடன் பொருளாதாரத்திற்கும் மக்களுக்குமான இடையூறுகளைத் தவிர்ப்பதனை உறுதிசெய்வதற்கு அத்தியாவசிய இறக்குமதிகளுக்கு நிதியளிப்பதற்கான தேவைக்குத் துணையளித்தது. எனினும், 2021 ஆம் ஆண்டின் பிந்திய பகுதியில் நிலவிய நிலையான செலாவணி வீதமானது, மலிவான கிரயத்தில் முன்கூட்டிய இறக்குமதிகளுக்காக இறக்குமதியாளர்களுக்கு உதவிபுரிகின்ற அதேவேளை, அவர்களின் ஏற்றுமதிப் பெறுகைகளை மாற்றுவதற்கு விருப்பமற்று காணப்பட்டமையானது உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையை பாதகமாக தாக்கியது.